

ஸ்ரீமத் சங்கரபகவத்பாத ஆசார்ய ஸ்வாமிகள்.




வா. I. விச்வாவஸு ௵ ஆடி ௴ ந. 4.

# ஸ்ரீசங்கராசாரியார் சரித்திரம்.

வியாஸபகவான் இவ்வாறு மறைந்து போகவே, ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் சற்று திகைத்து அவரை விட்டுப்பிரிந்ததால் மன வருத்தமுற்றார். ஆயினும் அத்வைத மதத்தை எண் திசைகளிலும் பரவச்செய்யும்படி அவர் தமக்குச் சொன்னதை நினைத்து உடனே தமது சிஷ்யர்களுடன் ஸ்ரீகாசிமாநகர் விட்டகன்று முதலில் இப்பொழுது அல்லஹாபாத் என்று சொல்லப்படுகிற ப்ரயாகைக்குச் சென்றார். இந்தப்பிரயாகை க்ஷேத்-

திரத்தின் மஹிமை எல்லோருக்கும் தெரிந்திருக்கலாமே. இங்குதான் இப்பரத கண்டத்திலுள்ள ஏழு மஹாநதிகளுள் மூன்று ஒருங்கு சேருகின்றன. இவைகளின் வனப்பையும், சரிதையையும், பெருமையையும், தனித்தனியே விரிக்கிற்பெருகுமாதலால் இங்கு உபாயமாக எடுத்தெழுதினேம். ஸூர்ய வம்சத்திலுதித்த பகீரதரின் தவத்தால் ஸந்தோஷமடைந்த பரமசிவனால் பூலோகத்திற்குப் போகும்படி ஏவப்பட்ட தேவநதியான கங்கையானது, தன்னை பூலோகத்திற்குப் போகச்சொன்னதில் மிக்க ரோஷமுள்ளவளாய் பூமியை முழுவதுமே பிரளயத்தில் முழுகவடித்து விடுவதான தீர்மானத்துடன், சொல்லமுடியாத ஆரவாரத்துடன் ஸ்வர்க்கத்திலிருந்து இறங்குங்கால், ஸாக்ஷாத் பரமசிவன் இமயமலையின் சிகரத்திலிருந்துகொண்டு, தமது ஜடையை அவிழ்த்து, கங்கையினது பிரவாஹம் முழுவதையும் ஒருதிவிலையேனும் கீழேசிதறாமல் அச்சடைக்குள் ஏந்திக்கட்டிவிட்டதும், மீண்டும் பகீரதர் பிரார்த்திக்க தமது ஜடையிலிருந்து அதிஸ்வல்பமான பாகத்தை பூமியில் பெருகும்படிசெய்ய, அக்கங்காதேவியும் முன்னிலும் பதின்மடங் கதிகமான கோபத்துடன் வெகு வேகமாக வெளுத்த நிறத்துடன், இச்சிவனுக்கு நிகராக வேறொருவருமில்லையென்பதை பொய்யாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தன்னிடத்து ஸ்நானம் செய்யும் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு சிவனாக செய்துகொண்டு பிரவஹிக்கும் பல க்ஷேத்திரங்களுள் இந்தப்ரயாகையும் ஒன்று. ஆனால் எல்லா க்ஷேத்திரங்களைக்காட்டிலும் இந்தப்ரயாகையில் கங்கைக்கு ஒரு விசேஷமுண்டு. இங்குதான் மிகவும் ஆழமானதும், அதுகாரணம்பற்றியே கறுப்பு நிறமுள்ளதுமான காளிந்தீ யென்று சொல்லப்படும் யமுனாநதி அதிக கம்பீரத்துடன் மிருதுவாகவந்து, விசேஷபரபரப்பு

டன் கூடிய கங்கையாகிற ஸகியுடன் புதிதாக ஸமாகமம் செய்துகொள்வதில் லஜ்ஜையுடன் சற்று தயங்கி நின்று சேருமிடம். இங்குதான் ஸரஸ்வதி மஹாநதியும் தேவ லோகத்திலிருந்து அந்தர்வாஹினியாகவந்து கங்கையும் யமுனையும் சேருமிடத்தில் தானும் கூடுகிறது. இம்மூன்று மஹாநதிகளும் சேரும் இவ்விடத்திற்குத்தான் **திருவேணீ** என்று பெயர். இவ்விடத்தில் ஸ்நானம்செய்பவர்களுக்கு ஸமஸ்தபாபமும் கணப்பொழுதில் துலைகிறது. அவர்கள் அதற்குப்பிறகு திவ்யமான சரீரத்தையடைந்து வியாதி யென்கிற பெயரையே அறியாதவர்களாகிறார்கள். இதே அர்த்தத்தையே வேத புருஷனும் கூறுகிறார்.

"सितासिते यत्र संगते तत्राप्लुतासो दिवमुत्पतन्ति" ॥

"ஸிதாஸிதே யத்ர ஸங்கதே தத்ராப்லுதாஸோ திவமுத்பதந்தி"

'வெளுப்பும் கருப்புமானநதிகள் எங்கு கூடுகின்றனவோ அங்கு ஸ்நானம் செய்பவர்கள் ஸ்வர்க்கத்தையடைகிறார்கள்.'

சுருதியிலெடுத்துரைக்கும்படியான அத்தகைய பெருமை பொருந்திய இந்த திருவேணியில் நமதாசாரியஸ்வாமிகளும் அகமர்ஷண ஸ்நானம் செய்தனர். இவர் இங்கு ஸ்நானம் செய்யுங்கால் யாரை நினைத்தனரென்றுதெரிந்துகொள்ள எல்லோருக்கும் அவாவிருப்பது இயல்பாகும். இதற்கு வித்யாரண்ய ஸ்வாமிகள் அடியிற்கண்ட சுலோகத்தால் விடையளிக்கின்றனர்.

सस्नौ प्रयागे सह शिष्यसंघैः
स्वयं कृतार्थो जनसंग्रहार्थी ।
अस्मारि माताऽपि च सा पुपोष
दधार या दुःखमसोढ भूरि ॥

ஸஸ்னௌ ப்ரயாகே ஸஹ சிஷ்யஸங்கை:
ஸ்வயம் கிருதார்த்தோ ஜனஸங்கரஹார்த்தீ ।

*அஸ்மாரி மாதாபி ச ஸா புபோஷ*
*ததார யா துக்கமஸோட பூரி ।*

'பிரபாகையில் சிஷ்யர்களுடன் இவர் ஸ்நானம் செய்தார். ஸ்வயமாகவே கிருதார்த்தரான இவருக்கு இம்முழுக்கால்யாது பயன் என்றாலோ, உலகத்தில் மற்றைய ஜனங்களின் ஆசரணைத்திற்காகவே இவருமவ்வாறு செய்தார். அந்த ஸ்நானகாலத்தில், தம்மை சுமந்து பெற்றுவளர்த்து அநேகதுக்கங்களை அனுபவித்த தமது தாயாரை மனதில் நினைத்தார்'.

இதுவல்லவோ மாதிருபக்தி. நமது வேதத்தில் கூறியுள்ள முக்கியதர்மங்களில் முதன்மையான मातृदेवो भव "மாதிருதேவோபவ," என்னும் வாக்கியத்தின் நேரான ஒழுக்கம் இதுவல்லவோ. இவரோ ஸந்யாஸி, இவருக்கு பந்தமென்பது எங்கிருந்துவந்தது. இவரோ ஈசுவரனின் அவதாரம், இவருக்கு வேறான தெய்வமேது. இவரோ ஸர்வாந்தர்யாமியான பரமாத்மா, ஸமஸ்தபாபத்தையும் துலைத்து, ஸமஸ்த பந்தங்களையும் விலக்கி, ஞானத்தைக் கொடுத்து, ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவித்து, மோக்ஷத்தை யளிக்கும் பரபிரம்ஹம். இவருக்குஸ்நானமும், தியானமும், இன்னொருவரின் நினைப்பும், எங்கிருந்து வந்தது. இவரைத்தவிர்த்து வேறொன்றுமுளதோ. அப்படியிருக்க ஜனங்களுக்கு நல்வழிகாட்டவேண்டி இவர் செய்துவரும் ஆசரணைகள் ஒவ்வொன்றும் நன்கு கவனிக்கத் தக்கனவல்லவா. ஆதலின் இவர் திருவேணியில் ஸ்நானம் செய்யுங்கால் வேரு ஒரு தேவதையையும் கெவனிக்காமல் எல்லாவற்றிற்கும் முதன்மையான தேவதை என்று வேதத்திலேயே எடுத்தோதப்பட்டுள்ள மாதாவையேநினைத்தாரென்றால், மாதாவுக்கு நாம் செய்யவேண்டிய தொண்டுக்கும், அவளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதற்கும், அவளை எப்பொ

ழுதும் தெய்வமாகக்கொண்டாடுவதற்கும் ஓர் எல்லையுமுண்டோ. இம்மஹானைப்பெற்ற அம்மாதுசிரோமணியின் பாக்கியமேபாக்கியம்.

இவ்வாறு தாயாரை நினைத்துக்கொண்டு திருவேணியில் ஸநானம் செய்து முடித்து, அந்நதிக்கரையில் ஒரு தாமலவிருக்ஷ (பச்சிலைமர) த்தினடியில் சிஷ்யர்களுடன் களைப்பார உட்கார்ந்தார். இத்தருணத்தில் அவ்வூரில் பட்டபாதரென்பவர் தமது குருவை நிந்தித்ததற்காக வேதத்திற் கர்மகாண்டத்திற்கூறிய பிராயச்சித்தமான துஷானல [உமியினால் வளர்க்கப்பட்ட அக்னி] த்தில் பிரவேசித்திருக்கிறார் என்னும் லோகவார்த்தை நமதாசார்யஸ்வாமிகள் காதிற்பட்டது. இது இவ்வாறு நிற்க,

இந்தச் சஞ்சிகையின் முதற்பகுதியிற் சொல்லியபடி இவ்வுலகில் எங்குப்பார்த்தாலும் தர்மம் அமிழ்த்தப்பட்டு அதர்மம் மேலிடவே தேவதைகளெல்லாம் ஸர்வேசுவரனிடம்போய் முறையிட்டபொழுது தாம் பூமியில் அவதரித்து அத்வைத மதத்தை ஸ்தாபித்து தர்மத்தை நிலைநாட்டுவதாக வாக்களித்ததுமன்றி தமதருமைப் புதல்வரான குமாரக்கடவுளையும் பூலோகத்திற்குச்சென்று கர்மமார்க்கத்தை ஸ்தாபிக்கும்படி கட்டளையிட்டார். அதற்கிசைந்து ஸுப்ரமண்யஸ்வாமியும் இப்பூமியில் குமாரிலபட்டரென அவதரித்தார். அவர் தமது இளமைப்பருவத்திலேயே பிராமணருக்குரிய ஸகல வித்தைகளையும் கற்றுணர்ந்து, பௌத்தமதத்தின் மர்மங்களை நுகர விரும்பி, தாமும் ஓர் புத்தர் மாதிரியாக மாறுவேஷம் பூண்டு ஒரு ததாகதரை (பௌத்தகுருவை) யடைந்து, அங்குள்ள பலசிஷ்யர்களுடன் கலந்து, அவ்வித்தையை அப்பியஸித்துவந்தார். ஒரு ஸமயத்தில் அவரது குருவானவர் வேதத்தை மிகவாக தூஷித்தபொழுது அவரையறியாமல் அவர் கண்

களில் ஜலம்பெருகியது. இதைக்கண்டதும் இவருடன் கூட வாசித்தவர்கள் இவரிடம் ஸந்தேகம்கொண்டு ஸ்நேக பாவத்தை விட்டொழிந்தார்கள். தங்களுக்கு விரோதிகளான பிராமணச்சாதியாரைச்சேர்ந்தவரிவர். இவரை எந்த விதத்திலாவது துலைத்துவிடவேண்டும். வெருட்டி விட்டு விட்டாலும் நமது மர்மங்களையெல்லாம் வெளியில் சொல்லிவிடுவார் ஆதலால் இவரைக் கொன்றுவிடுவதே மேலானதென்று நிச்சயம் செய்துகொண்டு இவருடையஸஹபாடிகளான அச்சிஷ்யர்கள், अहिंसा परमो धर्मः (அஹிம்ஸா பரமோ தர்ம:) 'எல்லாவற்றிற்கும் மேம்பட்டதர்மம் ஹிம்ஸை செய்யாதிருப்பது' என்பதை நன்கு வற்புறுத்தும் பௌத்தமதக் கொள்கையை கைக்கொண்டிருக்கையிலும் ஒரு ஸமயம் மேல்மாடத்தில் எல்லோரும் ஒன்றாகக்கூடி வேடிக்கையாகப்பேசிக் கொண்டிருக்கையில் திடீரென்று இவரை மற்றவர்கள் அங்கிருந்து தலைகீழாகக் கீழே தள்ளிவிட்டார்கள். இவரும் அதனால் கொஞ்சமேனும் மனஞ்சலிக்காமல் வேதம் பிரமாணமாயிருந்தால் இவ்வுயரத்திலிருந்து மேடுபள்ளமாயிருக்கும் இத்தரையில் நாம் விழுவதால் நம்முயிருக்கு இறுதியுண்டாகாதிருக்க வேண்டுமென்று உறக்கக் கூவிக்கொண்டு பூமியில் விழுந்ததில் ஒரு கண்ணில் புண்பட்டதேயன்றி வேறொரு ஊறுபாடுமின்றி எழுந்து சென்றார். இவ்வாறு ஒரு கண்ணில் புண்பட்டதுகூட இவர்மனதில் 'வேதம் பிரமாணமாயிருந்தால்' என ஸந்தேகம் ஜனித்ததால்தான் என்று சொல்லப்படுகிறது. இதுமுதல் இவர் எங்குப்பார்த்தாலும் பௌத்தமதத்தைக்கண்டித்து வேதத்திலுள்ள கர்ம மார்க்கத்தை ஸ்தாபித்துவந்தார்.

இவ்வாறு பற்பல தேசங்களுக்குச் சென்று ஒவ்வொரு இடத்திலும் அத்தேசத்து அரசர்களை முதலில் வசப்

படுத்திக்கொண்டு பௌத்தர்களை யெல்லாம் ஸம்ஹாரம் செய்வித்துவேதத்தின் பிராமாண்யத்தையும், கர்மகாண்டத்தின் முதன்மையையும் ஸ்தாபித்து வந்ததில் இவருக்கு இரண்டு மஹத்தான தோஷங்கள் ஏற்பட்டன. அவை யாவன: பௌத்தமதத்தை நிராகரிப்பதில் இவருக்கு குருவாக விருந்தவரை தூஷிக்கவேண்டி நேர்ந்தது. இதுவுமன்றி கர்மமார்க்கத்தையே முக்கியமென்று ஸ்தாபித்ததில் ஈசுவரனைக் கூட மறுக்கும்படி சில ஸமயங்களில் ஸம்பவித்தது. ஆகவே குரு நிந்தை, ஈசுவரன் மறுப்பு, இவ்விரண்டு தோஷங்களையும் நிவர்த்திசெய்து கொள்வதற்கு வேதத்திற்கூறிய பிராயச்சித்தமாகிய, உமியினால் வளர்க்கப்பட்ட அக்னி பிரவேசத்தை இவர் செய்யவேண்டியது அத்யாவசியமாக ஏற்பட்டது. இல்லாவிடில் எல்லோரும் இவரிடத்தில் வாய்ப்பேச்சேயன்றி காரியம் ஒன்றுமில்லையென்று சொல்லுவார்கள். தம்முடைய மனஸுக்கும் ஸமாதானப்படாது. ஆதலால் இவர் துஷானலாக்னிப்ரவேசம் செய்யத் தீர்மானித்து அதற்கு வேண்டிய ப்ரயத்னங்கள் செய்தார். மேலும் தாம் பூமியிலவதரித்த காரியமும் ஆய்விட்டது. கர்மமார்க்கம் ஸ்தாபித்தாச்சுது. இனி ஞானமார்க்கத்தைத் தான் ஸ்தாபிக்கவேண்டும். அதற்குத் தமது பிதாவாகிய ஸர்வேசுவரன் வந்துவிட்டதால் தமக்கு இனி பூலோகத்தில் காரியம் ஒன்றுமில்லையென்றும் கர்மமார்க்கத்தை பூர்த்தியாக தாமே ஜனங்களுக்கு அனுஷ்டித்துக்காட்டவேண்டுமென்றும் எண்ணி பிரயாகையில் இத்தகைய அக்னிப்ரவெசம் செய்தார்.

இந்த விஷயம் யமுனா நதிக்கரையில் தமாலவிருக்ஷத்தினடியில் வீற்றிருந்த ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய ஸ்வாமிகளின் காதிற்படவே, அவரும் தமது பாஷ்யத்தை குமாரில பட்டருக்குக் காண்பிக்கவேண்டி தமது சிஷ்யர்

களுடன் அக்னிப்ரவேசம் நடக்குமிடம் போய்ச்சேர்ந்தார். அங்கு ஒருவருக்கொருவர் நிஜரூபத்தை யறிந்துகொண்டு தாம் பூலோகத்திற்கு வந்ததுமுதல் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் குமாரில பட்டர் நமதாசார்யஸ்வாமிகளுக்குத் தெரிவித்தார். அவரும் மிகவாக ஸந்தோஷித்து இவரைப் புகழ்ந்தார். இவ்வாறு சற்றுநேரமான பிறகு பட்டபாதரும் 'மாஹிஷ்மதி என்னும் ஊரில் மண்டன மிச்ரர் என்னும் ஓர் பிராமணர் தனது தர்மபத்னியுடன் நீதிநெறி தவறாது வேதத்திற் கூறியபடி கர்ம மார்க்கத்தில் மிகவும் ஆஸக்தியுள்ளவராயிருக்கிறார். அவரிடம் சென்று வாதித்து தங்களது பாஷ்யத்தையும் அவருக்குக் கற்பித்து அவரை வசப்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்' என்று ஸ்ரீசங்கரரிடம் தெரிவித்து அவர்களனுக்கிரஹத்தைப் பெற்று அத்வைத வுண்மையை யறிந்து, மஹா யோகிகளுக்குக் கூட கிடைப்பதற்கரிதான அவர்களது பிரத்யக்ஷ ஸன்னிதியில் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்கேகினர்.

உடனே பகவத்பாதாசாரியரும் பிரயாகையை விட்டு மாஹிஷ்மதியை யடைந்து மண்டன மிச்ரருடன் தர்க்கித்து அவரை ஜயிக்கவேண்டி அவ்வூருக்குச் சென்றார்கள்.



# ஜப்பானியரின் வழக்கமும் பழக்கமும்.

தற்காலத்தில் ஆசிரியன் மேன்மையைச் சிறிதேனும் சந்தேகமின்றி ஸ்தாபித்த ஜப்பானியரின் வழக்கமும் பழக்கமும் தெரிந்துகொள்ள ஒவ்வொருவரும் ஆவல் கொண்டிருக்கின்றன மல்லவா? அவைகளைச் சிறிது இக்கட்டுரையிற் றெரிவிக்கின்றோம்.

1. அரசன்:—ஜப்பான் தேசமானது 'கொரியா' தேசத்தின் தென்பாகத்திலுள்ளது; ஏறக்குறைய மூவாயிரத்து எண்ணூற்றைம்பது சிறு தீவுகளடங்கியது. இத்தேயத்திற்கு இரண்டு அரசர்கள் இருந்தனர், 'மிகாடோ' என்பவர் மதத்தலைவர். 'கோபோ' என்பவர் ஜீடேர் என்னும் நாட்டில் அரசுபுரிந்து வந்தனர். கி. மு. ஆறும் நூற்றாண்டில் 'ஜின்முடின்வு' என்னும் சீனரால் ஜப்பான் ஆளப்பட்டு வந்தது. பிறகு பதினொரும் நூற்றாண்டில் 'மிகாடோ' என்பவரே அரசராகவும் குருவாகவும் பாராட்டப்பட்டு வந்தனர். மிகாடோவுக்குப் பன்னிரண்டு மனைவியரும் இருபத்தைந்து வைப்பாட்டியரும் இருக்கின்றார்கள். மிகாடோ தன் தலை, தாடி மயிர், நகம் இவைகளைச் சேதிப்பதே கிடையாது. இவர் தம் உணவுகளைப் புதிய புதிய பாண்டங்களில் சமைந்து உண்டபின் மற்றையோர்க்கு உபயோகப் படாமல் உடைத்தெறிவது வழக்கம். இவர் தரிக்கும் உடைகளையும் தினம் களைந்து பிறருக்கு உபயோகப் படாமல் எரித்து விடுகிறார்கள். தான்

பிறரைப்பார்க்கும் படியும் பிறர் தன்னைப் பார்க்க முடியாமலும் பல்லக்கில் ஏறி உலாவுதல் இவர் வழக்கம். இவரைத் தவிர மற்றையோர் ஏகபத்நீ விரத மனுஷ்டிப்பவரே.

**2. குடிகள்:**—சாதாரணமாக ஜப்பானியர் தரிக்கும் உடை கழுத்து முதல் கணைக்கால் வரையும் ஒன்றாகத்தைக்கப் பட்டிருக்கிறது. இடுப்பில் ஒரு பட்டுக் கயிற்றினால் ஒன்று சேர்த்துக் கட்டிக்கொள்வார்கள். இடுப்பில் சுருட்டுப் பிடிக்க வேலைப்பாடுள்ள ஒரு குழாயும் புகையிலைத் தூள்களும் வைத்திருப்பார்கள். தலையின் முன்பாகத்திய மயிரைச் சுமார் மூன்றங்குலம் நீக்கிக் கொண்டு மற்றைய மயிரை நடுத்தலையில் ஒன்று சேர்த்து முடிந்து கொண்டு புருஷர்கள் பொன் ஊசியினால் இறுக்கிக் கொள்வார்கள்; ஸ்திரீகள் ஆமை ஓட்டினாலான ஊசியால் இறுக்கிக்கொள்வார்கள். ஜப்பானியர் எல்லோரும் நற்குணமுடையவர்கள். இவர்கள் ஆண் பெண் வித்தியாசமின்றி ஒரேயிடத்தில் ஆடையின்றி ஸ்நாநஞ் செய்கிறார்கள். வெட்கம் பாராட்டுகிறதே யில்லை. ஆயினும் அவமானம் பாராட்டுவதில் ஜப்பானியர்க்கு நிகர் எவருமில்லை. மானமிழப்பதினும் இவர்கள் உயிரை யிழப்பார்கள். "மயிர் நீப்பின் வாழாக்கவரிமா வன்னா ருயிர் நீப்பர் மாநம் வரின்" என்ற வள்ளுவர் மொழி இவ்வழக்கத்தைக் கருதியே போலும் பிறந்தது. இத்தகையதற்கொலையை 'ஹரிகரி' என்பார்கள். கொலை செய்து கொள்ளும்பொழுது வாளினால் ✕ இம்மாதிரி காயம் கழுத்தில் செய்து கொள்வார்கள். 'மானமே உயிரினும் மாண்புடைத் தாகுமால்' என்னும் மொழி ஜப்பானியர்க்கென்றே சேரமான் கணைக் காலிரும் பொறை தான் இறக்கும மயத்தில் சொல்லிப் போந்தார் போலும். இராணுவ உத்யோகஸ்தரா

ஞலும் சரி, ராஜாங்க உத்யோகஸ்தராஞலும் சரி 'ஜீடோ' விலுள்ள நியாயஸ்தலத்தினின்று உத்தரவு பெற்ற பிறகே மானமிழந்ததற்குத் தற்கொலே செய்து கொள்ளவேண்டும். இந்நிபந்தனையைத் தவறினவர்களின் சந்ததிகள் பிதிரார் ஜித சொத்தை இழந்து விடுவார். இராஜாங்கத்து உத்யோகஸ்தர்கள் அனைவர்க்கும் தங்கள் தங்கள் சாதாரண உடைகளேத்தவிர மரணகாலத்தில் தரித்துக்கொள்ள ஒரு உடை கொடுக்கப் பட்டிருக்கிறது. நியாயஸ்தலத்தின் உத்தரவைக் குற்றவாளிக்குத் தெரியப்படுத்திய தக்ஷணம் தன் நண்பர்களேக் குறிப்பிட்ட நாளில் வரவழைத்து அவர்களே அறுசுவையுண்டி அருந்தச் செய்து அவர்களிடமிருந்து சிறிதுநேரம் தனியே செல்ல விடைபெற்றுத் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உத்யோகஸ்தன் வாசிக்கக் கேட்டு மறுபடி நண்பரிருக்குமிடம் போய் ஒரு வகை உபந்யாசம் செய்து தன் தலேயைத் தரைமீது வைத்து வாளிஞல் காயம் செய்து கொள்வது வழக்கம். அந்தக் காயம் தன் அந்தரங்க வேலேக்காரஞல் செய்யப்படும். தானே ஒரு குற்றத்தை வேண்டுமென்று செய்தால் முன் மாதிரியே கொலே செய்துகொள்கிருன். பிரபுக்களின் புத்திரர்கள் ஐந்து அல்லது ஆறு வருஷங்கள் வாள் பயிற்சி செய்கின்றனர்.

3. மரணச் சடங்குகள்:—இறந்த பெரியோரின் உடலேச் சாம்பராக்கி அச்சாம்பரைப் பெட்டியிற் பத்திரப்படுத்துகிருர்கள்; ஏழை மனிதரின் உடலேப் புதைத்து விடுகிருர்கள். ஜப்பானியர் இறந்தவரிடம் மிகவும் மரியாதை யுடையவர். பிணத்தை ஒரு பெட்டியில் உட்கார வைத்தும் புதைக்கிருர்கள். புதைத்து ஏழு வருஷங்களானதும் எலும்புகளே மண்பாண்டங்களில் வைத்து அதற்கென்றேற்படுத்திய மலேயடிவாரச் சுரங்கங்களில் வைத்து விடுகிருர்கள். முதலில் புதைக்குமிடத்திற்குக்கொ

ண்டுபோகும்போது வெண்மையான முக்காடுகள் போட்டிருக்கும் பெண்கள் பின்றொடர்ந்து செல்வது வழக்கம். வெண்மையான உடை விசனத்திற்கும் கருமையான உடை சந்தோஷத்திற்கும் அறிகுறி. சிலர் இறந்தவரை ஒரு தொட்டியில் வைத்துக் கடிதப் பூக்களால் அலங்கரித்துக் கோவிலுக்குக் கொண்டு போய் இறைவனைத் தோத்திரஞ் செய்த பிறகு மலையருகிற் கொண்டு போய் எரியவிட்டு வருகிறது வழக்கம். பிணம் எரியும் வரையும் உபாத்தியாயன் மந்திர படனம் செய்து கொண்டிருப்பான். எரிந்த பிறகு சாம்பரை எடுத்துக்கொண்டு போய்க் கோவிலின் பின்புறத்திலுள்ள நன்காட்டில் விமரிசையுடன் அடக்கஞ் செய்கிறார்கள். புதைத்த இடத்தில் சமாதிகள் கட்டுவது முண்டு. அந்தச் சமாதிக்குச் சில குறித்த தினங்களிற் சென்று உறவினர் பூஜை செய்வது வழக்கம். அந்தச் சமாதியின்மேல் இறந்தவன் மதம், வயது, இறந்த தினம் முதலிய விஷயங்களைக் குறிக்கின்றனர்.

4. மணச் சடங்குகள்:—ஜப்பான் ஸ்திரீகள் கோபம் சிறிதும் பாராட்டுகிறதில்லை; மிகவும் சாதுக்கள். இவரனைவரும் பதிவிரதாசிரோமணிகள். பிரபு வீட்டுப் பெண்கள் தங்கள் ஒட்டியாணங்களில் சிறிய ஈட்டியைச் செருகி வைத்திருப்பார்கள். மணமாகாத பெண்களின் பற்கள் வெண்மையாக விருக்கும். மணமான பிறகு பற்களைக் கருமையாக்கிக் கொள்கிறார்கள். பெண்களுக்குப் படிப்புச் சொல்லி வைப்பார்கள். ஜப்பானியரெல்லோரும் தங்கள் மனைவிகளை நம்பிக்கையுள்ள வேலைபாளைப் போல பாவிக்கின்றனர். மேலும் இவர்கள் தங்கள் மனைவியரை அடிப்பதாவது கொடுமையாக நடத்துவதாகவாவது கேட்கின்றிலம். சிலர் கல்யாணஞ் செய்து கொள்வதன் முன் ஒரு பெண்ணை ஒரு வாரம் வைத்துக்கொண்டு அவள்தன் குண குணங்களை யறிந்து பிறகு மணத்தல் ஒரு

வகை வழக்கமாகத் தோற்றுகின்றது. பகம்மதியரின் வழக்கம் இவர்களிடம் வந்ததென்னேயோ? இவர்கள் கல்யாணச் சடங்குகள் மிகவும் சாதாரணமானவையே. மணமகனும் மணமகளும் மூன்றுமுறை ஒருவர் கொடுக்க மற்றொருவர் மாறி மாறிச் சில சிநேகிதர் முன்பு சாராயம் குடிப்பார்கள். பிறகு மணமகள் தன் பற்களைக் கருமையாக்கிக் கொள்வாள். இச்சடங்குகளானதும் நன்மையையும் தீமையையும் பாகித்துக் கொள்ள ஒரு புருஷனின் மனைவியாகிறாள். மணமகள் நன் தாயின் இல்லத்தினின்று மணவாளனது கிரஹம் போம்போது வெண்மையான உடையை உடுத்திக்கொண்டு போவாள்; ஏனெனின் தாய் தந்தைக்குத் தான் இறந்து விட்டாளென்பதை யுணர்த்துவதற்குப் போலும். இது பற்றியே போலும் நம்மவருள்ளும் பெண்ணும் தாய் தந்தையரும் மணமகனில்லஞ் செல்லும் போது அழுகிறார்கள். ஜப்பானியர் மணமகளைப் பல்லக்கில் அழைத்து மணமகன் வீட்டிற்குச் செல்வார்கள்.

5. ஜப்பானியர் தன்மை:—ஜப்பானியர் வேலைத்திறத்திற்கும் கூர்மையான புத்தியுடைமைக்கும் பேர் பெற்றவர். அவர்கள் செய்யும் முக்கியமான பொருள்களாவன:— வாள், தந்திக் கம்பிகளாலாகும் வாத்தியங்கள், காற்றினுலிசையும் வாத்தியங்கள், உயர்ச்சியறி கருவிகள் முதலியன. அவர் தம் புத்தகங்களொவ்வொன்றிலும் சித்திரங்களடங்கியிருக்கும். இவர்கள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக எழுதுவார்கள். ஜப்பானியர் எழுத்துக்களெல்லாம் அசைகள். அவைகள் நாற்பத்தெட்டாம். இவர்கள் மூங்கிலினின்றும் கடிதம் செய்கிறார்கள். இக்கடிதம் மிகவும் கெட்டியாக விருக்கும். அக்கடிதத்தில் எண்ணெய் பூசினால் நீரிற்குத்தடையாகிறது. மழைக்காலத்திற்காகும் ஆடைகளும் குடைகளும் இவ்வகைக் கடித

த்தால் செய்யப்படுகின்றன. அனேக வருஷகாலம் அவைகள் நிலை நிற்கின்றன. மேலும் இவர்கள் கடிதத்தால் நாணயமானவும், நயமானவுமான கையாடை செய்கின்றனர். அழுக்கான பிறகு அவைகளைத் தீயில் எரித்து விடுகிறார்கள்.

குஸ்தி பெரிய மனிதர்களுக்குப் பிரியமுள்ள விளையாட்டு. செல்வவந்தர் வீடுகள் தோறும் குஸ்தி செய்வதற்காக அமிதமான உணவுதந்து சாதாரண மனிதரை வளர்த்தல் வழக்கம். அவர்கள் உருவமே நன்றாகத் தெரியாமல் தசையினால் மூடுண்டிருப்பர். மற்றும் அவர்கள் மிகவும் பராக்கிரமசாலிகளாக விருப்பார்கள். ஆகவே இவரிடம் வீரத்தனம் இருப்பது வியப்பாகாது. ஜப்பானியர் மிகுதியான மாமிச பக்ஷிணிகளல்லர். இவர் வீடு சிறிதாக விருக்கும். சிறுகக் கட்டி பெருக வாழ்தல் என்னும் பழமொழியை அநுசரித்து அவ்வாறு சிறிய வீடுகளைக் கட்டுகின்றனர் போலும். வீடுகளில் மிகுதியான சாமான்கள் இரா. ஆனால் தரைமுழுவதும் மிருதுவான கயிற்றுப் பாயினால் மூடிவைத்திருப்பார்கள். இவர்கள் பாதரக்ஷை முதலானது வீட்டிற்குள் ஐரோப்பியரைப்போல உபயோகியார்கள். இவர்கள் இந்துக்களைப்போல பலவகை மதக்கோட்பாடுகளுள்ளவர்கள். மேலும் ஒரே சந்ததியிற் பிறந்தவர் மாறுபாடான மதக்கொள்கையுடையவராகவிருப்பார். இவர் வீரரைத்தொழுபவர். இவர்கள் இயற்கைப் பொருள்களிடம் மரியாதையுடையவர். 'புட்ஸியாமா' என்னும் மலையுச்சிக்கு அனேகர் வாயுபகவானைத்தொழ யாத்திரை செல்கின்றனர். இவர் தேசத்தில் எரிமலைகளின் தொந்தரவு மிகவும் அதிகம். சில இடங்களில் நதிகள் சூடுகொண்டொழுகும். சொரி சிரங்கு முதலிய சரும வியாதியுற்றார் கந்தகமிருக்கின்றமையின் இச்சூடுண்ட நீரிலாடிச் சுகம் பெறுகின்ற

னர். இவர்கள் பிராமணரைப்போல உள்ளங்கை தரையிற் பொருந்த நெற்றி பூமியிற்பட சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்வார்கள்.

6. உருவம்:—ஜப்பானியர் மங்கோலியரைப் போன்ற மஞ்சள் நிறமும், மலேயவரின் உருவமும் பொருந்தியிருக்கின்றனர். ஆதிமலேயவரோடு மங்கோலியர் சம்பந்தப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. உருவத்தால் ஜப்பானியர் இரண்டு அல்லது மூன்றுவகை உருவத்தினராகக் காண்கின்றனர். முதலாவது உழுநர் பரந்த முகத்தினராகவும், கருமையான (சிலசமயங்களிற் சிவந்த) மயிருடையவராகவும், தட்டையான நாசி யுடையவராகவும், பெரிய வாயுடையவராகவும், காண்கின்றனர். இரண்டாவது கடற்கரையில் வசிக்கும் வலைஞர் எடுத்துக்காட்டும் முகமும், கூர்மையான மூக்கும், கருமையான மயிரும், படிப்படியான கூந்தலுமுடையவராகின்றனர். ஒரு வகைச் சாதியார் கோழிமுட்டையைப் போன்ற நீண்டமுகமும், உயர்ந்த நெற்றியும், உருண்ட மண்டையும், சிரிப்புள்ள முகமுமுடையவராய்த் திகழ்கின்றனர்.

7. பாஷை:—இவர் பாஷையில் வாக்கியங்கள் பல விகுதிகள் பெற்ற ஒரே வார்த்தையாகவே காணும். இவர் பாஷை சப்ததத்துவத்தைப் பின்றொடர்ந்திருக்கிறது. சீனர் பாஷை ஓரசைச் சொற்களாகவே யிருக்கும். எனினும் இரண்டு பாஷைகளுக்கும் சம்பந்த மிருக்கின்றது. ஜப்பானிலுள்ள பௌத்தர்கள் சீனர் பாஷையைப் பெரிதும் உபயோகிப்பர். ஆனால் அவர் சொல்லும் செய்யுள் முழுமையும் சிறந்த ஜப்பான் பாஷையிலே தானிருக்கிறது.

8. ஜப்பானியர் மதம்:—ஜப்பானியர் மதவிஷயத்தில் சீனர் அவ்வளவு பற்றுடையவரல்லர். தெய்வக்குற்ற நடுக்கம் என்பதில் இவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை

யில்லே. சீனுதேசத்திற் போல ஒருவரே இரண்டு மூன்று வித மதக்கொள்கைகளுடையவராகின்றனர். பௌத்த மதமும் சிண்டோ மதமும் சாதாரணமாக ஒருவரே பாராட்டிவருவர். இறந்த பெரியோரைத் தொழுவது சிண்டோ மதத்தின் முக்கிய கோட்பாடு. சிண்டோ மதம் பௌத்த மதத்திற்கு முற்பட்டது. வெகு காலங்களுக்கு முன்னரே மிகாடோவின் முன்னேரைத் தொழுதலே ஜனங்கள் பின்பற்றினர்கள். மிகாடோவின் வமிசஸ்தாபிதர் சூரிய பகவான் என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே ஆயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னர் அவருக்கு ஒரு கோவில் கட்டப்பட்டது. அக்கோவிலில் பூஜை செய்ய மிகாடோவின் மகளே ஏற்படுத்தினர். ஜப்பானியர் முன்னேரைத் தொழுபவர். ஒவ்வொருவர் வீட்டிலும் தங்கள் பூஜையிடத்தில் ஸ்வாமிக்கருகில் இறந்த முன்னேர்களின் ஞாபகச் சின்னமான பெயர் பொரித்த தகடுகள் பல வைக்கப்பட்டிருக்கும். அவர்களேப் புத்தர்களாகப் பாவிக்கிருர்கள். சூரியனின் மகன் நாட்டிற்கு அரசனுனபோது சூரிய சந்திரர் தென்படும் வரையும் தன் வமிசத்தவர் ஆளவேண்டுமென்று நியமித்ததாகச் சொல்வது வழக்கம். முதலவன் அரசனுனபோது மூன்று அறிகுறியான வஸ்துக்கள் சூரியன் தந்தனன். அவையாவன:— ஒரு கண்ணுடி, ஒருவாள், ஒருகல். கண்ணுடியைத் தன் ஆன்மாவாகவும், வாள் தன் சக்தியாகவும், கல் தன் உருவமாகவும் பாவிக்கும்படி கட்டளே தந்தது சூரியன். தற்காலத்தில் பௌத்த மதமே அதிகமாகப் பரவி சிண்டோ மதத்தைச் சிறிது அடக்கிற்று. பிறந்தவுடன் குழந்தைகளேக் கோவிலுக்குக் கொண்டுபோய் காக்கும்படி இறைவனேத் தொழுதல் பெருவழக்காம். ஜப்பானியர் பிறநாடுகளுக்குப் பிரயாணமாகப்போம்போது கோவிலுக்குப் போய் பூசாரிகள் கொடுக்கும் ஒரு கடிதத்தாழ்த்தைப்

பெற்றுக்கொண்டு செல்வார்கள். மேலும் அக்கோவிலி னின்றுஞ் சிறிது மண் எடுத்துப் போவது வழக்கம். வழி யில் துன்பம் நேர்ந்தவிடத்து அம்மணலின் ஒரு பகுதி யைத் தண்ணீரில் கலந்து குடிப்பார்கள். மிகுதியான மண்ணைத் திரும்பவும் அக்கோவிலிலேயேகொண்டுபோய்ப் போட்டு விடுவார்கள். சிண்டோ கோவிலுக்குள் ஒரு கண்ணாடியாவது, ஒரு வாளாவது, ஒரு கல்லாவது, பட் டுகளிற் சுற்றி ஒரு பெட்டியில் எவரும் பார்க்க முடியாமல் மிகவுஞ் சாக்கிரதையாய் வைக்கப்பட்டிருக்கும். கோவி லுக்கு முன்னிருக்கும் மண்டபத்திற் போய் கைகூப்பிச் சில காசுகளை எறிந்து விட்டு வாய் விட்டு யாதொரு வார்த் தையுஞ் சொல்லாமல் செல்வது வழக்கம். பூசை செய்யு நர் கடிதத்தாழ்த்துக்களைவிற்றுச் சீவனம் செய்கின்றனர். கோவில் கட்டடங்கள் அவ்வளவாகச் சிறப்பினவல்ல. பௌத்தமதம் பரவிய பிறகே கோவில்கள் சிறப்பாகக்கட் டப்பட்டன.

9. நாட்டின் தன்மை:—ஜப்பானிலுள்ள செழுமை யான இடங்கள் கடற்கரையோரத்திலிருக்கின்றன. இவர் களுக்கு நெய்தலே மருதமாகும். நிப்பான் தீவில் மாத்தி ரம் உள்நாடுகளே செழுமையுள்ளனவாயிருக்கின்றன. எரி மலைகள் அதிகமாகவிருத்தலினால் உள்நாடுகள் செழிப்பாக விருக்கிறதில்லைபோலும். நம்முடை வேனிற்காலமே அவர் களுக்கு மழைக்காலம். இரும்பு, ஈயம், தாம்ரம், வெள்ளி, பொன் இவைகள் பூமியில் கிடைக்கும்: மேலும் இந்நா ட்டில் அரிசி, கோதுமை, உருளைக்கிழங்கு, பட்டாணி, மொச்சை, கந்தகம், வெடியுப்பு, மெழுகு, தேயிலை, பட்டு, ஆமணக்கு, முதலியன ஏராளமாகக் கிடைக்கும். 'ஜப் பான் வார்னிஷ்' என்பது ஒரு வகை மரத்தின் பட்டை யைத் துளைத்து அதனின்றும் பெருகும் இரசத்தைத் தான்.

இதுவரையிலும் கூறிய வழக்கங்களிற் சில தற்காலத்தில் இவர்களிடம் மாறுபட்டிருத்தலுங் கூடும். பிறஜாதியாருடன் ஊடாடுவதனுல் சமயத்திற்குத் தக்க வழக்கங்களை அநுபோகத்திற்குக் கொண்டு வரவேண்டி வருமன்றே. ஆதலின் தற்காலத்திய ஜப்பானியரிடம் சில வழக்கங்கள் காணப்படாதிருப்பின் இங்குக் கூறியன பிழையென மதிக்கலாகாது என்று தோன்றுகிறது.

சருக்கை இராமசாமி ஐயங்கார் பி. ஏ.

துப்பார் முயற்சி துணையாகத் தோன்றிச் சிலம்பி யதுபோல
இப்பார் மீதிற் பிறருதவி யின்றித் தானே யினிதோங்கும்
அப்பார் கடனுற் புடைசூழ்ந்த அருளே தயப்பேர்ப் பூமியெனும்
ஜப்பான் வாழ்க வாழ்கவென ஜயமுண் டாக வாழ்த்துமினே.




காப்பு வெண்பா.

பெண்மணியாம் பேசுதமிழ் வாசகநூல் பெண்களுக்கே
கண்மணிபோ லொன்றுதிக்கக் காப்பாகுந்-தண்பொருநல்
மாறன் மலர்ப்பதமு மங்கைகலை வாணியிரு
சீறம் புயமலருஞ் சேர்ந்து.

## முகவுரை.

### முதலாவது அத்தியாயம்.

பெண்மணி யென்பாள் சோழவளநாட்டில் காவேரி நதி தீரத்தில் நூறு வருஷங்களுக்கு முன் பிறந்த ஓர் பிராமணப்பெண், ஏழைக்குடும்பத்தில் பிறந்தவள். நற்குண நற்செய்கையுடன் தன் வாழ்நாள் முழுதும் தன் கணவனோடு உள்ளன்புடையவளாய்க் களிப்போடு வாழ்ந்தவள். உறவினர், அதிதிகள், பெரியோர், பாகவதர்கள், பிரயாணிகள் ஏழைகளிடத்தில் மிகக் கருணையுள்ளவள். தன்னாலியன்றமட்டும் பிறருக்கு இரவிலும் பகலிலும் உதவிசெய்வது இவள் சுபாவகுணம். தன் கணவன் சம்பாதித்துத் தந்த தொகைகளை யெல்லாம் ஆபத்துக்கென்று சேர்த்து வைக்காமல் அப்போதைக்கப்போது வருவதைத் தருமச்செலவு செய்துவிட்டு மறுநாளைக்கென்செய்வ தென்பதை எண்ணாமலே திடசித்தத்துடன் ஒரே நிலையாயிருந்தவள்.

தன் கணவன் முன்னிலையில் நீதி நூல்களையும் புராணங்களையும் பாரதம் பாகவதம் இராமாயண நூல்களையும் பலதரம் பகலிலும் இரவிலுங் கேட்டுணர்ந்து திடமான ஞானமும்பெற்று மதாபிமானம் ஜாதி அபிமானமில்லாமல் எல்லோரையும் ஒருபடியாகவே பார்த்துத்தன் பொருள், மனை, உடல் இவைகளெல்லாம் மாந்தர்களின் உபயோகத்திற்கே கிடைத்தனவாக மனப்பூர்வமாக எண்ணி அவ்வெண்ணத்தின்படியே வாக்குக் காயமெனுமிரண்டு கரணங்களையும் ஒரே விதமாய்ச் சுத்தமாய் வைத்து வந்தவள்.

கல்விவகையில் பலதுறையிலிறங்கா திருந்தாலும் தமிழ்ப் புஸ்தகங்களை நேரில் எழுதவும் படிக்கவும் மட்டும் நன்றாய்ப்பழகினவள். செவிப்புலனால் விஸ்தாரமாய்ப் பல நூல்களையும் கேட்டுத் தன்மனதில் நன்றாய்ப்பதித்துக்கொண்டு அடிக்கடி அவ்விஷயங்களைச் சிந்தனைசெய்து கொண்டும் தன் வாழ்நாட்களை யெல்லாம் வீண்நாள்களாக்காமல் சற்காலக்ஷேபத்திலே நியோகித்து வந்தாள். ஆலயங்களிலுள்ள மூர்த்தி தலந்தீர்த்தங்களிலும் அடியார்கள் சரித்திரங்களிலும் திடநம்பிக்கையும் மனச் சந்தோஷமும் கொண்டவள்; இவ்வளவு நலம் வாய்ந்தும் பிள்ளையில்லாக் குறையால் பல தானதருமஞ்செய்தும் பலனின்றி ஒரு புத்திரனைச் சுவீகாரம் செய்துகொண்டு தன் கணவன் பரகதி யடைவதற்கு முன்னே நற்கதியடைந்தாள். இவளை ஒரு பெண்தெய்வமென்றே இவள் குலத்தார் இன்னும் கொண்டாடுகின்றார்கள்.

இவ்வாறு இம்மண்ணுலகில் பதிவிரதா சிரோமணியாக விளங்கிய இப்பெண்மணியின் சரித்திரத்தை எழுதி வெளிப்படுத்தினால் இக்கலிகாலத்திலுள்ள பெண்கள் அதன்படியே நல்வழியில் நடந்து தெய்வபத்தி புருஷர்மேலன்பு, ஏழைகளிடத்தில் கருணை பரோபகாரம் முதலிய குணம் வாய்ந்து நம்மிந்தியா நாட்டில் தொன்றுதொட்டு நிலைத்துள்ள மாதர்களின் பரிசுத்த நிலையைக் காப்பார்களென்று நம்பியே இச்சரிதமெழுதலானேன்.

இக்கதை வெளிப்படுவதற்குப்பின்வரும் சங்கதிகளும் போந்த காரணங்களாம்.

கடல் சூழ்ந்த இமமண்ணுலகில் அறம் பொருளின்பம்வீடென மாந்தரடையத்தக்க பேறுகள் நான்காம். நான்காவதோ மனம்

வாக்குக்கெட்டாத மேலாந்துரிய நிலே. இக்கலிநாளில் அவ்வழியில் முயல்பவர்கள் சிற்சிலரேயாம். அவர்கள் முயலும்மார்க்கமோ அவர்கள் முன்பிறவியிற்செய்த நற்காரியங்களின் நிலேக்கும் ஆன்மமார்க்க விசாரணே நடைகளுக்குத்தக்கபடி பலஜன்மங்களிலோ அல்லது சில ஜன்மங்களிலோ இப்போதெடுத்துள்ள ஜன்மத்திலோ கைகூடுவதாம். சன்னியாஸம் இக்கலி நாளிலோ நான்காவது முதலிய வருணத்தாரிலும் நடைபெறுகின்றது. ஆனல் அந்நிலேக்குத்தக்கதூய்மையும் ஆன்மஞானமும் ஜீவகாருணியமும் குதிரைக்கொம்புகளேயாம். இல்லறத்தாரினும் அதிகப்பற்றும் பணத்திலும் பதவியிலும் தேகத்திலும் பற்றுள்ளவர்களாய் பலவகை வழக்குகளிலும் தலேயிட்டுக்கொண்டு தன்னேயடுத்தவர்களின் நடத்தையைச்சீராக்கத்தக்க போதனே வழியை மறந்தும் அலேகின்ருர்கள். முன்காலத்தைய ஜாதி நியமங்களும் மதாசாரங்களும் மாறிவிட்டன. புறநாட்டார்கள் வர்த்தகவகையாகவும் மதபோதனேவகையாகவும் வேறு வகையாகவும் நமது நாட்டில் வந்து நிலேத்துத் தொழில் புரிவதே அவ்வகை மாறுதல்களுக்கு ஏற்ற காரணங்களாம். இஃதன்றி இந்தியா நாடுகல்வியிலும் செல்வத்திலும் நாகரிகத்திலும் ஏனேயநாடுகளேவிடமேலோங்கியிருந்ததால் புறநாட்டார் பற்பல காலங்களிற் படையெடுத்து வந்தும் செல்வத்தையெல்லாம் கொள்ளேகொண்டதன்றிப்புராதனமான நூல்களேயுஞ் சுட்டெரித்தும் ஸனுதனதருமமார்க்கத்திலிருந்த பலரையும் ஆயுதங்களுக்கிரையாக்குவதாய்ப்பயம் காட்டித்தங்கள் மதத்திற்சேர்த்தும் வந்ததனுல் பல இடையூறுகள் நேர நமது நாடு அதிகக்ஷீண கதியை அடைந்து விட்டது.

விவாக நடையும் நன்னடக்கையும் நிலேகுலேந்து க்ஷேத்திர பீஜநியாயங்களும் நாளேற நாளேற மாறிக்கொண்டே வருகின்றன. பெண்களிடத்தில் முன்னுளில் நிலேபெற்றிருந்த நற்குணங்களும் காலஞ்செய்கோலத்திற்குத்தக்கபடி அலங்கோலமாய்க்கொண்டே வருகின்றன. முன்னுளில் பெண்களிடத்தில் நாம் கேள்விப்படும் நற்குணங்கள் அமைந்திராவென்றும் பலர் இப்பொழுது சொல்லத்துணிகின்ருர்கள். எவ்வகை ஈனமான தொழில் புரிந்தாவது பணத்தைச்சேகரித்துக்கொண்டு உண்டு உடுத்துப் போகித்துக் களிப்பதே கைகண்டபலன். பணமிருந்தால் எல்லாம் நேரும். மறுமையைக் கண்டவன் யார், வந்து பார்த்ததைச்சொன்னவன் யார், பழங்கதைகள் வயிறு வளர்க்க முன்னேர் கட்டிய

கட்டு. என்றிப்படிப்பலரும் மனோராச்சியம் செய்கின்றார்கள். திருவள்ளுவர் இல்லறத்திலிருந்தே நல்லபதம் பெற்றார். வேறுபலருமவ்வாறு பதம் பெற்றுள்ளார். முதல் மூன்று புருஷார்த்தங்களும் தனித் தனியே பெறுபவைகளல்ல. ஒன்றையொன்று ஆதாரமாகக்கொண்டுளது. அறஞ்செய்யப் பொருள் வேண்டும். அறமும் பொருளும் கெடாது நிற்க அவைகளைப் பெற்றார்க்குமனத் திடமும் இன்பமும் வேண்டும்; இன்பந்தர ஓர் வாழ்க்கைத் துணையும் வேண்டும். இவைகளெல்லாம் சீராயிருந்தால் மோக்ஷம் தன் படியாய் நேரும். இந்நயங்கருதியே திருவள்ளுவர் மோக்ஷத்தையொட்டி நூல் செய்யாது விடுத்தனர். காரணவகையாக ஞானத்தைமட்டும் கூறிப்போந்தார். காண்பதற்குரிய புலன் கண்ணென்று கொள்ளப்படுதல் போலப் புருஷர்களால் பேணப்படுதற் குரியது பெண்ணென்று வழங்கப்படுகின்றது. பேணுதல் விரும்பப்படுதல். ஆண்பாலார் பிறவியின் இயற்கையின்படி பெண்பாலாரை நாடுதல் சகஜமேயாம். பெண்வடிவம் ஆடவர்களோடு கூடிக்களிக்க எற்ற வடிவமாம். ஆனதுபற்றியே ஆடவர்களும் பெண்களை அதிகமாகப் போற்றுகின்றனர். கவி சக்கிரவர்த்தியாம் கம்பனும் இராமபிரானை "ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்" என்று சிறப்பித்திருத்தல் காண்க. இராமபிரானது தோள் நயம்பெறப் பெண்மை அவாவப்பெற்றமை காண்க.

கதை யுதித்ததற்கு இவைகள்தாம் காரணங்கள்: பெண்மணியின்கதை கூறுமிடத்தும இதுபற்றிய நயம் ஆங்காங்குக் கதைச் சார்பாயு மெடுத்தோதப்படும்.

## 2-ம் அத்தியாயம்.

## இம்மை மறுமைப் பயன்பெற வாழ்க்கைத் துணையாவார் மகளிரே என்பது.

குறள்.

இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

1. உலக நாயகன் உலகங்களைப்படைத்துக் காத்து அழிக்க மும்மூர்த்தி வடிவங் கொள்கின்றார். இம் மூர்த்திகள் தங்கள்

தங்கள் தொழில் நடாத்த மூன்று சத்திகளேயே துணையாகக் கொள்கின்றார்கள். இத்துணையாய் நின்றுதவி புரிவோர் பெண்களேயாம். இப்பெண்களின் கூட்டுறவில்லாவிடின் முத்தொழில்களும் பரிபாலிக்கப்படாவாம்.

2. இதுபோல இவ்வுலக காரியங்களிலும் வாழ்க்கைத்துணையில்லாவிடில் லவுகிகத் தொழில்களும் சீராயும் கண்ணியமாயும் நிறைவேறா. சரீரதிடம், கல்வி, செல்வம், புகழ், இவையாவும் நற்குணப்பெண்ணின் துணையாலேயே கிடைப்பனவாம். இக்காரணம் பற்றியே இல்லாளுக்கு வாழ்க்கைத்துணையெனப் பெயர் சூட்டப்பட்டது. நோயற்ற வாழ்க்கையும், நுண்ணிய கூர்மதியும் வற்றாத செல்வமும், கலைமகளின் சாந்நித்தியமும், கணவனிடத்தில் உள்ளன்பும், சரீரதிடமும், சத்துவமுமுள்ள பெண்ணினாலன்றி ஆடவர்க்கு நேராவாம். இது உலகமறிந்த உண்மை.

3. உலகெங்கும் இசைபெற்றோங்கும் ஞானிகளும் கலாவல்லமையுள்ளவர்களும் நற்பதத்திலுள்ளாரும் செல்வவான்களும் ஆன்மஞானிகளும் தங்களுக்கு ஆனந்தநிலமாயும் சமயசஞ்சீவியாயும் விளங்கப்பெற்ற பெண்மணிகளைத் துணையாகப் பெற்றமையாலே மணம் பெற்றார்கள். விலையுயர்ந்த மணிகள் சிற்சிலவாயும் பலருக்கும் கிட்டாமலுமிருத்தல்போல் இப்பெண்மணிகள் பூர்வபுண்ணிய பலனுய்ச்சிற்சிலருக்கே நேருவார்கள். அப்படி நேரப்பெற்றவர்களே உலகெங்கும் பரவும் கீர்த்திபெற்றவர்கள். ஆடவர்களிலும் பெண்களிலும் பெருந்தொகையார்க்கு நல்வினைப்பயன் நேராததைக் கொண்டே நாம் ஆடவர்களையும் அவர்கள் மனைவியரையும் குற்றங்கூறுதல் பெரும்பிழையாம். பதுமநிதியும் சங்கநிதியும் சூடாமணியும் பலருக்கும் வாய்ப்பதுண்டோ. இராமன், பஞ்சபாண்டவர்கள், கிருஷ்ணன், நளன், அரிச்சந்திரன், சத்தியவான் மவுத்கல்லியரிவர்களுக்கு முறையே சீதை, பாஞ்சாலி ருக்மிணி, தமயந்தி, சந்திரமதி, சாவித்திரி, நாளாயினிகளாம் பெண்மணிகள் நேர்ந்திராவிடில் அவர்கள் கீர்த்தியும் பெயரும் உலகில் வழங்க வகையுண்டாமோ.

4. இது மட்டோ; யாரும் மோட்சமடைய மறையின் ஸாரமாம் ஞானத்தை யளிப்பவள் நாமடந்தை யன்றோ. இம்மையில் எண்வகைச் செல்வத்தையும் அளிப்பவள் இலக்ஷ்மி தேவியன்றோ. இவ்வுலகில் நிவிருத்தி மார்க்க உபதேசகர்த்தாவாய் ஞானத்தை யளிக்

கும் மூர்த்தியாம் சங்கர மூர்த்தியின் இடது பாகத்தில் தங்கி அம் மூர்த்திக்குத் திடமும் ஆநந்தமும் கொடுப்பவள் பார்வதி தேவியா ரன்றே. நான் முகன் நாவில் வேதவடிவாய் நின்று சதா நடனம் புரிபவளும் கலை மகளே யாமன்றே. அடியாரின்பிழைகளைப் பொறுத்துப் பத்தர்களுக்கு வீடருளப் புருஷகாரமாய் நிற்பவளும் திருமாலின் நெஞ்சை விட்டுக்கணமுமகலாத இலக்ஷ்மி தேவியா மன்றே. தெய்வலோகத்தில் அரசனும் இந்திரனுக்கு வாழ்க்கைத் துணையாய் நின்று ஆநந்த மூட்டுபவள் சசீதேவியாமன்றே. மண்ணுலகிலாண்டு இசை பெற்ற சக்கிரவர்த்திகளும் தங்கள் தங்கள் மனைவியராம் பெண்மணிகளாலன்றோ நீடித்த வாழ்க் கையும் சுகமும் கொண்டோங்கினர்கள். வைகுண்டம், பிர்ம லோகம், கைலாசமெனும் பதவிகளும் இலக்குமி, நாமகள், பார் வதி தேவிமார்களின் கருணையினால் கிடைப்பனவாம். தாய் வடிவமாயோ, மனைவிவடிவமாகவோ, அல்லது உடன் பிறந்த சகோதரிகள் வடிவமாகவோ, பெண்மணிகள் ஒரு குடும்பத்தில் வசித்து வந்தால் அவர்கள் வாழப் பெற்ற கிரகம் மேன்மேலாக ஓங் கிச் சிறடைந்து வரும்; அவர்கள் தலை சாயுமேல் குடும்ப நிலை சாய் ந்து அதோகதியை யடையும்; மணிகள் ஆபரணங்களாகக் கழுத்தி லணியப் பெற்றிருந்தாலும் அவ்வாறு அணியப்பெற்று அழகுதந்த நிலை நீங்கி வடிவம் மாறி நிற்கினும் வீட்டிடங்களிலிருக்குமட்டும் எந்நிலையில் இருந்தாலும் அவைகள் வீட்டிலிருப்பதினால் நேரும் சுகபோகங்களைக் குறைவின்றி அளித்துக் கொண்டேயிருக்கும். இது போல் பெண்மணிகள் எந்நிலையிலிருந்தாலும் அவர்கள் தங்கி யிருக்கும் கிரகங்கள் பால் போற் பொங்கிக் கொண்டேயிருக்கும். பதியின் விரதம் காப்போர் பதியை யிழந்தும் பெரியோரை யடுத்து மந்திர ஜபத்தியானங்களின் மர்ம முணர்ந்த பெண்மணிகள் சில குடும்பங்களில் இக்கலியில் நிலைத்திருந்து பெரியோர்களிடம் நன் னூல்கள் கேட்டுணர்ந்து கொண்டு திடஞான முள்ளவர்களாய்ப் பலர் விளங்குகின்றார்கள். அவர்களைப் பெற்று விளங்கும் பிள்ளைக ளுக்கும் பெண்களுக்கும் அப்பெண் மணியைவிட வேறு செல்வம் இம்மண்ணுலகிலுண்டோ. ஞான ஒழுக்கமே பெண்களின் உயர் நிலையாம்.

5. இந்நயமுணராது ஆடவர்களிற் பலர் வேறு பலமாதர்களின் தோளிற்று யிலும் தீயநடையுள்ள வர்களாய் இடர்ப்படுகின்றார் கள். ஆடவர்களுக்குப் பிரஜாவிர்த்தி செய்யும் சத்திசாமளவும்

உண்டென்பதுண்மையாதலாலும் நேர்ந்த மனைவிககு ஆண்மகவே பிறவாமையாலும் அல்லது பல மக்களைப் பெற்று மனைவியின் சரீர நிலைமெலிந்து விடுவதுண்டென்பதும் உலகிலுண்டாதலாலும் காம போகத்தில் விசேஷ நோக்கமும் போக நுகர்ச்சியில் தளராத்திட முமுள்ளவர்கள் சிலருண்டென்பதும் நமது கட்புலனில் தென்படு வதாலும் ஆடவர்கள் நியாயமான விவாக முறைப்படி வேறு மனை வியை யடைதல் சாஸ்திரநெறிக்கு ஒத்ததேயாம். ஆடவர்கள் வயது முதிர்ந்து கிழமாய் விட்டாலும் சரீரதிடங்கருதியும் சுகவாழ்க்கை கருதியும் மறுமணம் செய்து கொள்கின்றார்கள். இதனால் பெண்க ளால் புருஷர்களுக்குச் சரீரதிடம் உண்டாதல் பிரகாசமாகின்றது. செல்வ மிகுதியுள்ளோர் வயது சென்றவரானாலும் இந்நாளில் சரீர திடத்திற் கென்றே மறுமணம் செய்து கொள்கின்றார்கள். இது முன்னாள்களிலில்லை, கலியின்கொடுமையாலுதித்த மாறுதலேயாம். இதனால் சில மடந்தையர்களின் ஜன்மம் பாழாய் விடுகின்றது. செல்வ மிகுதியிருந்தும் மனக்களிப்பும் சுகமுமில்லாத நிலை நேருகி ன்றது. நெடுங்காலம் வாழ்ந்தோர்களும் முன்னாளில் ஒரு மட ந்தையோடே வாழ்ந்துள்ளார்; பாலிகா விவாகங்களையும் பொருட் பயன்கருதிக் கிழவர்களுக்குச் சிறு பெண்களை மணம் செய்விப்ப தையும் நம்மவர் தக்கமுயற்சி செய்து நீக்குவாராயின் நமது நாட் டின் பெண்மணிகளிற் பலர் சுகபோகத்தில் நெடுநாள் வாழ இட முண்டாம். அதிபாலியத்தில் பெண்களுக்கு விவாகம் செய்து அவர்களுக்கு அதிபாலியத்தில் பிறக்கும் சந்ததிகள் பூஞ்சையாயும் சிலநாள் வாழ்கையுள்ளவைகளாயு மிருப்பதால் சந்ததிகள் திடங் குறைவதன்றிச்சீக்கிரம் அழியவும் இடமாகின்றது. பெண்மணிகள் தங்கள் சரீரத்தில் நோய் தட்டாதிருக்கச் சரீரக்காப்பு விதிகளை நன்குணர்ந்து அனுட்டிக்கக் கல்வியுள்ளவராகயிருத்தல் வேண்டும். திருவள்ளுவரும் இல்வாழ்க்கையைப் பின்வருமாறு புகழ்ந்துள்ளார்.

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார் முன்
ஏறுபோற் பீடு நடை.

இராமபிரான் சீதையை மணஞ்செய்து கொள்ளச் சிவதனுசை எடுத்த போது அது இற்ற தென்று கூறவருமிடத்துச் சீதையின் சிறப்பைக் கம்பன் பின் வருமாறு விளக்கியிருக்கின்றனன்.

ஆடக மால்வரை யன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதையெனும் பொற்

சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை யிதென்ன எடுத்தான்.

சீதைப் பெண்மணியின் சிறப்பைக் கோலங்காண் படலத்துள்

கோனணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்டத்
தீனமில் கலன்கள் தம்மி னியைவன வணிதல் செய்தார்
மானணி நோக்கி னார்தம் மங்கலக் கழுத்துக் கெல்லாந்
தானணி யானபோது தனக்கணி யாது மாதோ.

என்றும் கல்வியிற் பெரியவனும் கம்பன் சிறப்பித் துள்ளான். பாரதத்தும் சூது போர்ச் சருக்கத்தில் பாஞ்சாலி கிருஷ்ணனைக் கருணை புரிவாயாக வென வழைக்கவே அம்மூர்த்தி அவள் மனத் தேவந்து தோன்றி அவள் மானத்தைக் காத்தது முண்டன்றே.

அருமறைசொல் லியநாம மாயிரமு முரைத்தழைக்க
வமரர் போற்றுந்
திருமலர்ச் செஞ் சீறடியோன் றிருச்செவியிலிவள் மொழி
சென்றிசைத் தகாலை
மருமலர்மென் குழன்மானின் மனநடுங்கா வகைமனத்தே
வந்து தோன்றிக்
கரியமுகி லனையானும் பிறரெவர்க்குந் தெரியாமற்
கருணை செய்தான்.

இதனால் ஒரு பெண்மணியாம் பாஞ்சாலி ஏ! கிருஷ்ணா, துவாரகையிலிருப்பவனே, யாதவ நந்தனனே, அநாதையான வென்னைக் காத்தருள் என்றுள்ளுருகி அழைக்கவே அவள் மனத்திலுதித்து ஆடையைப் பெருக்கப் பெருக்கவளருவித்து ஸ்ரீகண்ணபிரான் கருணை புரிந்தமைகாண்க. இதனால் பாஞ்சாலியின் மேன்மையும் சிறப்பும் பத்திமேலீடும் வெளியாயின.

நெல்லூர் வீரனென்னும் ஆசுகவியும் அரிச்சந்திரபுராணத்துச் சந்திரமதியைப்பின் வருமாறு சிறப்பித்துள்ளார்.

மண்மடந்தையர் தம்முளும் வாசவ னுறையும்
விண்மடந்தையர் தம்முளும் நிகரிலா விறல்வேற்
கண்மடந்தை தன் கருங்குழ லருந்ததிக் கற்பிற்
கெண்மடங்கு கற்புடையளிந்திரையினு மெழிலால்.

இதில் கற்பும் எழிலும் காட்டப் பெற்றன; இவளும் பதிவிரதத்தில் எள்ளளவேனும் நழுவாத பெண்மணி. வெட்டவென்றோங்கிய

கத்தி இவள் கழுத்தில் மணமாலையாய் விட்டது.

இதன்றித்தமயந்தி நளனைப்பிரிந்து வனத்தில் பாம்பின்வாய்ப் பட்டபோது விடுவித்த வேடன் அப்பெண்மணியைப் புணரு மெண்ணத்துடன் தொடரும்போது தமயந்தி கோபத்தினால் அவன் நின்ற இடத்தே சாம்பராயினன்.

வெய்ய வரவின் பகுவாயின் விடுத்த மடமா னெழினோக்கி
மையல் கூர்ந்த நெஞ்சினனாய் வரிவிற் றடக்கை வயவேடன்
தொய்யின் முமேற் புல்லுதற்குத் தொடரத்துஞ்சா
[வருங்கற்பின்
தையல் முனிந்து நோக்குதலுஞ் சாம்ப ராயிற் றவனுடலே.

இவ்வாறு பெண்மணிகளின் அற்புதச்செய்கைக்கும் தூய்மைக்கும் பல திருஷ்டாந்தங்களுள. விரிக்கிற் பெருகும். எடுத்துக்கொண்ட பெண்மணியின்கதை கூறத்துவக்குமுன் திருவள்ளுவர் இல்லறத்திலிருந்த நாளில் அவர்மனையாள் அவரிடத்தன்புபாராட்டி நன்னடை கொண்டதைச்சுட்டி அவளிறந்தபோது மனமுருகிப்பாடிய பாட்டை எடுத்துக்காட்டுதல் இங்குப்பொருத்தமுள்ளதாம்.

அடிசிற் கினியாளே யன்புடையாளேப்
படிசொற் பழிநாணு வாளே - யடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்றூங்குங் கண்க ளெனக்கு.

இதன்றோ மனை மாட்சியின் நிலே.

இதன்றி அத்துவித பாஷ்யம் செய்த ஆதி சங்கராசாரியசுவாமிகளும் ஸ்ரீவித்தைவழியாற்றேவியைஉபாசித்ததுண்டன்றோ. இவர் பஞ்சதசாக்ஷரி வித்தையைக் கவுடபாதர் பரம்பரையாய்ப்பெற்றுத் தேவியின் வழிபாட்டை ஆநந்தலகரியெனும் நூலில். உலகுய்யுமாறு பிரகாசப்படுத்தியுமுள்ளார். வைணவர்களும் இவ்வித்தையை லக்ஷ்மீதந்திரமெனும் நூலில் ஒரு படியாய்க்கைக்கொண்டார்கள். சிதம்பரத்திலும் திருவானைக்காவிலும் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது ஸ்ரீதேவியின் நாற்பத்து முக்கோண சக்கிரமேயாம். அண்டபிண்டங்களும் சிவன்சத்தியின் மேன்மைகளும் நாற்பத்துமுக்கோண முணர்ந்தார்க்கே புலப்படும். நவக்கிரகங்களும் அதில் நிலைகொண்டது. மாந்தர்களின் கலாவிநோதமும், ஆன்மஞானமும் தேவியின் மந்திர யந்திரங்களை யறிந்து பூசிப்பார்க்கே சித்திக்கும்.

தி. வேங்கடராம ஐயங்கார்.

# தென்னிந்தியாவிலுள்ள மண்கள்.



நமது சென்னை இராஜதானியிலுள்ள மண்களாவன:— (1) பருத்தி பயிரிடும் கரிசல் காடு (Black cotton soil) (2) செவ்வல் நிலம் (Red soil) (3) அடைமண் நிலம் (Alluvial soil) (4) சுக்கான் (5) மணல் (6) சதுப்பு (7) களர்.

(1) பருத்தி பயிரிடும் கரிசற்காடு:—இது பஸால்ட் (Basalt) பாறையின் சிதைவால் உண்டாயிருக்கலாம். கிருஷ்ணா, கோதாவரி ஜில்லாக்களிலுள்ள கரிசல்கள் பஸால்ட்டு (Basalt) பாறையின் சிதைவு நாசங்களை, வாரிச்சுருட்டிக்கொண்டு வருகிற கிருஷ்ணா கோதாவரி ஆறுகளின் வண்டல்களா லமைந்திருக்கவேண்டும். இவ்விதமே கறுப்பு நிறமுள்ள கரிசல்கள், பெண்ணாறு, பாலாறு, காவேரி முதலிய நதி தீரங்களிலேயும் அனேக இடத்திலிருக்கின்றன. இவ்வாறுகளின் வண்டல் சேற்றோடு மூல திரவியங்கள் மட்கிச் சிதைந்து கலந்தால் கரிசல் மண்ணுண்டாகிறதென்கிறார்கள். காடுகளில், பூமி முழுமையும் கரிசலாயிருக்கிறது. ஏனெனில், இலை, காய், கனி, செடி, பூண்டு முதலிய மூலதிரவியங்கள், பூமியில் விழுந்து மண்ணுடன் மட்கி, மண்ணோடு மண்ணாய்ப்போகின்றன. பருத்திக்கரிசல்களெல்லாம் முன் காடாயிருக்குமோவெனில், கிண்டியெடுக்கப்பட்ட காட்டுச் சின்னங்களாகிய முக்கிய பிரமாணங்கள் இதுவரையில் அவைகளில் ஒன்றையும் காணோம்.

ஆகையால் பருத்திக் கரிசல்கள் முன் காடா யிருந்திரா. களிப்புடன் மூலதிரவியங்கள் சம்பந்தப்பட்டாவது, அல்லது வண்டல் சேற்றோடு செடி, காய், கனி முதலியன மட்கிக் கலந்தாவது அல்லது பஸால்ட்டு பாறையின் சிதைவினாலாவது "கரிசற் பருத்திக்காடு" அமைந்துண்டாயிருக்கவேண்டும்.

இவ்வித நிலம் ஒரே கறுப்பு நிறமாயிருக்கும். இந்நிறத்துக்குக் காரணம் மூல திரவியங்கள் (Vegetable matter) தாம். எங்கே பார்த்தாலும் கனதூரத்துக்கு ஒரே கரிசலாயிருக்கும். வெட்டிச் சோதனை செய்தால் கரிசற்படை பன்னிரண்டு அங்குலம் முதல் பதினைந்து அடி வரையில் ஆழ்ந்திருப்பதைப் பார்வையிடலாம். பருத்திக் கரிசல் இவ்விராஜதானியில் அநேக இடங்களிலிருக்கின்றன. கடப்பை, பல்லாரி, அனந்தபூர், கர்னூல், கிருஷ்ணா, கோதாவரி, நெல்லூர், திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், வட ஆர்க்காடு, தஞ்சை, திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களிலேயும், மைசூர் பிராந்தத்திலேயும் இருக்கின்றன. கோடைக் காலத்தில் வெகு வெடிப்புள்ளதாயும், மாரிக்காலத்தில் நிரம்பப்பிசுபிசுப்புள்ளதாயுமிருக்கும். இத்தன்மைப்பூமி மிகவும் வளமானது. ஜலத்தை இறுக்கி வைத்துக்கொள்ளும் சக்தியும் ஜாஸ்தி. மூல திரவியங்கள் இவைகளில் 100-க்கு 4-பாகம் முதல் 9-பாகம் வரையிலிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சில ஜில்லாக்களில் கரிசல் பருத்திக்காட்டில் வெள்ளைக் கம்பியைப்போன்ற சில சுக்கான்கற்கள் அகப்படுகின்றன. இந்தச் சுக்கான் படை கரிசற்படைக்குக் கீழுள்ளது. பல்லாரியிலுள்ள கரிசல் நிரம்ப உரப்புள்ளது (stiff). இப்படி உரப்புள்ள கரிசல் காட்டையுடைய ஜில்லாக்களில், பூமியில் பேத்தமடக்கா என்னும் பெரும் கலப்பையைக்

கொண்டு உழுகிறார்கள். இதையிழுக்க, 5, 6, ஜோடி மாடுகள் கட்டி ஓட்டுகிறார்கள். பார்வைக்கு நிரம்பக் காட்சியுள்ளதாயிருக்கும். இந்தக் கலப்பையைக்கொண்டுழு வதைப்பார்க்கிலும், சீமைக் கலப்பையை வாங்கி இந்தப் பூமிகளிற் போட்டு வேலை செய்தால் எவ்வளவோ லாபகரமுண்டு. வேலையும் நன்றாயிருக்கும். ஆகையால் பல்லாரி அனந்தபூர், கடப்பை, கர்னூல் முதலிய ஜில்லாக்களில் பருத்திக்கரிசற் காட்டில் 60 அல்லது 70 ரூ. மதிப்புள்ள சுவீடிஷ் கலப்பைகளைப் (Swedish ploughs) போட்டு வேலை செய்து பெத்தமடக்காவை விட அநேக விதத்தில் திறமென்று அறிந்துகொள்ளுவார்களென்று நம்புகிறேன். ஒரு ஜோடி பெரிய மாடு கட்டினால் போதும்.

கடப்பை, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் கரிசற்காடு, சுக்கான் சம்பந்தத்தால் நொறுங்கலாயிருக்கும். (Friable black cotton soil). இது நிரம்பச் செழுமை யுள்ளது. உரத்த கரிசல்களுக்கு (stiff black cotton soil) 1000 ராத்தல் முதல் 5000 ராத்தல் வரையில் சுண்ணும்பை வாங்கி யெரு விடலாம். முக்கியமாய் இந்நிலங்களில் பயிரிடும் தானியாதிகள் பருத்தியும் சோளமுந்தான். கோதுமையும் அவிரியும் அவைகளில் ஏராளமாய்ப்பயிரிடுகிறார்கள். பருத்தி பயிரிடுவது கோடைக்காலம். விளையும் பருவத்தில் செடி இளைக்காமல், செழிக்க, ஈரம் பூமியிலிருக்க வேண்டும். ஆகாயத்திலிருந்து ஈரத்தைக் கவர்ந்து அடக்கிக்கொள்ளும் சக்தியிருப்பதால், கரிசல் நிலத்துக்குப்பருத்தியைக் கோடையில் ஈரம் ஊட்டி விளைவிக்கும் யோக்கியதை யுண்டு. கொத்துக்கடலை, கொட்டைச் செடிகளும் அவைகளில் பயிரிடலாம்.

(2) செந்நிலம்:—இந்த ராஜதானியில் காணப்படுகிற இன்னொரு வித நிலம் யாதெனில் செம்மண் நிலம். இது

சிவப்பு வர்ணமுள்ளது. இந்தச்செவ்வர்ணத்துக்குக்காரணம் அயபஸ்பம்தான் (iron oxide). நம்முடைய வீடுகளில் இருப்புப்பாத்திரங்களைத் தேய்த்துச் சலத்தைத் துடைக்காமல் வைத்தால் துரு பிடித்து விடுகிறதல்லவா? இந்தத் துருத்தான் அயபஸ்பம். கலப்பைக் கொழுக்களிலேயும் இந்தத்துருவைப்பார்க்கலாம். செந்நிலம் ஆறுகளின்எக்கல் வண்டலினால் படிந்து ஒத்த தரையாகிய அடைமண் நிலமாயிருந்தாலுமிருக்கலாம்; அல்லது பாறைகளின் சிதைவாலமைந்திருந்தாலுமிருக்கலாம். கீழ்சமுத்திரக் கரையில் இப்பூமி செம்பூரான் கற்களின் (laterite or sandstone) சிதைவு நாசத்தால் உண்டாயிருக்கின்றது. இவைகளின் வளம் வித்தியாசப்படுகிறது. வட ஆர்க்காடு ஜில்லாவைப் போல் சில இடங்களில், கன தூரம் ஒரே மைதானமாய் இந்தச் செந்நிலம் அமைந்து பூமி கெட்டிப்பட்டுப், பாறையைப்போல் ஒரே அடையாயிருக்கிறது. இதில் சுதேசத் திலுண்டாகும் புற்பூண்டுகள் கூட விர்த்தி ஆகாமல் ஒரே பொட்டையாயிருக்கிறது. மெடமார்பிக் பாறை (metamorphic Rocks) களிலிருந்து உண்டாகிய சில செந்நிலம் அநேகமாய் நல்ல வளந்தான். செம்பூரான் கல்லிலிருந் துண்டாகிய செந்நிலம் பொதுவாய் மட்டமான பூமிதான். சிலாக்கியமான செந்நிலம் வேலை செய்வதற்கு வெகு நொறுங்கலான தன்மையானது. ஆகாசத்திலிருந்து ஈரத்தைக் கிரகிக்கும் சக்தியுள்ளது. இந்த ஈரத்தை இழுக்கும் சக்தி அயபஸ்மத்தாலுண்டாகிறது. இதிற் புன்செய் தானியங்கள் நன்றாய்விளையும். பாசனத்துக்கு நீர் குறைவில்லாமலிருந்தால், நெல்லும் பயிரிடலாம். சில ஜில்லாக்களில் பருத்தி மாத்திரம் இதிற் பயிரிடுகிறார்கள். கடப்பை, கர்னூல், பல்லாரி, அனந்தபூர் ஜில்லாக்களில் இந்த இரண்டு வித பூமிகளைத்தவிர (பருத்தி கரிசற்காடு, செந்நிலம்) செம்மண், வெண்மண் இந்த இரண்டு மண்களும் கலந்த ஒருவித பூமியிருக்கிறது. இதற்கு மஸ்ஸாப்பு

(mixed soil) என்று பெயர். ஆகையால் இந்த நான்கு ஜில்லாக்களில் பருத்தி பயிரிடும் கரிசற்காடு, செந்நிலம், மஸ்ஸாப் என்று மூன்றுவித பூமிகளிருக்கின்றன.

(3) அடைமண்நிலம்:—(Alluvial soil) அடைமண் நிலமாவது நதி ஆறு கால்வாய் முதலிய வற்றிலிருந்து வண்டல் எக்கல் படிந்து அடைந்திருக்கப்பட்ட மண். இது நதிதீரங்களில் விசேஷம்; சகல விதமான பாறைகளிலிருந்துண்டாகிய மட்கிப்போன வஸ்துக்களே உடைத்தாயிருப்பதால், இப்பூமி நிரம்பவளமுள்ளது. இதில் எல்லாப் பயிருட்டங்களும் குறைவில்லாமல் இருக்கின்றன. அடைமண் இரண்டு விதமுண்டு:—"கரிசல் அடைமண்", அடைமணல் (Black Alluvial soil) கரிசல் தடை மண் கறுநிறமாயிருக்கும்; ஆறுகளின் உற்பத்தி பாகங்களுக்குச்சமீபத்திலும் நதிகளின்பிரிவுகளின் மத்திய ஸ்தலங்களிலேயும் (deltas) விசேஷம். கரிசல் பருத்திக் காட்டைப்போல் வளமுள்ளது. ஆனால் அவ்வளவு உரப்பல்ல; நிரம்ப நொறுங்கலான தன்மையுண்டு. எல்லாப் பயிர்களும் விர்த்தியாகும். இதில் மூலதிரவியம் ஜாஸ்தியாதலால் இப்பூமி கறுப்பு நிறமாய்த் தோற்றுகிறது.

மணல் அடைமண் (Alluvial sand) சமுத்திரக் கரைக்குச்சமீபத்திலிருக்கும். ஆறுகள் சமுத்திரத்தோடு சங்கமமாகுமிடத்துக்குச் சமீபத்திலிருக்கும். இப்பூமியின் வளம் பாசனத்துக்குத் தக்கபடி அமைந்திருக்கிறது. பாசனக்குறைச்சலான இடத்தில் வளமும் குறைச்சல் தான்.

(4) சுக்கான்:—இப்பூமி கரிசலோடு அனேக ஜில்லாக்களில் கலந்திருக்கிறது. சிலாக்கியமான பூமிதான்.

(5) மணல்:—இவ்வித நிலம் சமுத்திரக்கரை ஓரம் விசேஷம். சவுக்கு தென்னையை வைத்தும் பயிரிட்டு லாபத்தைப்பெறலாம்.

(6) சதுப்பு:—சதுப்பாவது பள்ளம் பதிவுகளிலு

ள்ள பூமி. வெகுகாலம் நீரிலும், நிலத்திலும் புளைத்து வளர்ந்து, முதிர்ந்துபட்டுப்போன மூலதிரவியங்கள் பாதி மட்கியும் மட்காமலுமிருக்கின்றகாலத்திலைமைவது. நீலகிரி ஜில்லாவில் மிகுதி. மலைப் பிராந்தத்தில் தான் இவ்வித நிலத்தைக் காணலாம். சம பூமியில் காணமுடியாது.

(7) களர்:—உப்பு பூத்திருக்கப்பட்ட நிலம். இவ்வித பூமியை அநேக நஞ்சைகளிற் பார்க்கலாம். பயிர் நன்றாய் வராது. உப்பைப் போக்கடிக்க ஏதாவது உபாயம் தேடாவிட்டால் நிலம் பொட்டையாய்த்தானிருக்கும்.

இவ்விராஜதானியின் பொதுலட்சணங்கள் மிகுத்துக் குறுக்குவோம். நமது சென்னை இராஜதானி இயற்கையிற் செழிப்புள்ள தேசமல்ல. மிகவும் வளமுள்ள பாகங்கள் சமபூமியிலிருக்கின்றன. மலைச்சரிவில் வளமே கிடையாது. வளமுள்ள பாகமெல்லாம் அநேகமாய் அடைமண் நிலந்தான். இது தஞ்சை, கோதாவரி, கிருஷ்ணை, திருச்சிராப்பள்ளிகளில் மிகுதி. இவ்விராஜதானி விஸ்தீரணத்தில் அநேகமாய் முக்காற்பாகத்தில் பாசனமேகிடையாது. ஏற்றம் வைத்து நீர்ப்பாய்ச்சக்கூடச்சாத்தியமில்லை. மானவாரிதான். இதிலும் அநேக விடத்தில் வருஷம் 40 செவிக்குமேல் மழை கிடையாது. இந்த மழைகூட இப்போது சரிவரப் பெய்கிறதில்லை. சாகுபடி விஸ்தீரணத்தை ராஜாங்கத்தார் நன்செய், புன்செய் என்று வகுப்பிட்டிருக்கிறார்கள். புன்செய் எல்லாம் மானவாரி தான். இது சாகுபடி விஸ்தீர்ணத்தில் முக்காற் பாகத்துக்கு மேலிருக்கிறது புன்செயில் முக்காலே அரைக்கால் வாசி வளத்தாழ்வான ஸ்திதியிலிருக்கின்றது. சாகுபடி விஸ்தீரணத்தில் நன்செய் 100-க்கு 15-பாகந்தானுளது; 100-க்கு 2-பாகம் தோட்டங்கள் ; 100-க்கு 80-பாகம் புன்செய் பாக்கி 3-பாகம் மேய்ச்சல் நிலங்களும் தரிசல்களுமாயிருக்கின்றன.

அ. சேதுராமையர்.

# பழிக்குப்பழி.

ஏதோ ஒருவகைச் சப்தம் 'பம்' என்று என் காதிற் கேட்டது. காலை முதல் இது காறும் உணவு இன்றி இருந்தமையின் இளைப்பினால் காதடைத்திருக்கிறதோவென்று சிறிது சந்தேகப்பட்டேன். மறுபடியும் சப்தம் கேட்டது. பக்கத்தில் ஏதோ மணியின் சப்தம் என்று தேறி எண்ண ஆரம்பித்தேன். ஒன்று—இரண்டு—மூன்று—நான்கு—ஐந்து—ஆறு சப்தம் நின்று விட்டது. சரி ஆறு மணி ஆயிற்று மாலையாகத்தானிருக்கும், சந்தேக மில்லையென்று நினைத்தேன். எனக்கு அக்கொடிய வியாதி கண்டது காலை சுமார் ஏழு மணி யாகும். உடனே யான் மயக்கத்தில் இரண்டு மணி நேரம் இருந்திருப்பேன். பகல் பன்னிரண்டு மணிக்குள் யான் இறந்திருப்பேன். என்னைப் புதைக்க எடுத்துச் செல்ல நேரமாயிருக்கும். ஆகவே நாளைக்காலையில் அடக்கஞ் செய்யலாம் என்று இத்தனி யான இடத்தில் கிடத்தியிருப்பார்கள். மயக்கந் தெளிந்து இப்பொழுது எழுந்தது தெய்வத்தின் செயலே. எனக்கு உடலில் ஒரு வித நடுக்கம் உண்டாயிற்று. நான் சாதாரணமாக வலிமையுள்ளவனே. ஆயினும் அவ்வித கம்பமுண்டாவதற்குக் காரணம் ஒன்றுந் தெரியவில்லை. நான் பிழைத்து எப்படி வீட்டிற்குச்செல்வது? காட்டுக்குப் போன பிணம் வீட்டிற்குத் திரும்பலாகாது என்பார்களே. என்செய்வேன்? என்று பலவாறு யான் ஆலோசித்து நின்றேன்.

யான் உயிர்த்தெழுந்து உலாவச் சக்தியடைந்ததும் எத்தனையோ ஆகாயக் கோட்டைகள் கட்டினேன். இனி அடையப்போகும் சந்தோஷம் மனத்தைத் திருப்தி செய்தது. முன்னினும் பதின்மடங்கு என் மீது ஹேமாங்கினி பிரியம் பாராட்டுவாள் என்று எண்ணினேன். நாங்கள் சிறிது நேரம் பிரிந்த போதிலும் பயங்கரமான சந்தர்ப்பத்தில் என்று மயிர்பொடித்தேன். என் கண்மணி

கல்யாணியைக் காண எவ்வளவு ஆவல் கொள்கிறேன். இன்று மாலையே என் மடியில் கல்யாணியை வைத்துச் சீராட்டுவேன். முத்தங்கொள்வேன். ஆனந்தக் கூத்தாடுவேன். இழந்த பொருளை யடைந்தவர்க்குத் தான் அந்தச் சந்தோஷம் தெரியும். உங்களுக்கு எடுத்துச் சொல்ல முடியாது. சந்திரவதனையையும் இன்றே காண்பேன். இன்றையிரவே ஹேமாங்கினியின் சிரம் என் மார்பகத்தில் சப்தமின்றித் துயிலும். ஆனால் ஒருவரை யொருவர் முத்தமிடும் ஓசைதான் சப்தமின்மையைக் கெடுக்கும். இன்பக் கனவுகளால் என் தலை சுழன்றது. காவிரிக்கரையிற் சிறு அலைகள் சப்திப்பது என் காதிற்பட்டது. மிகவும் இன்பத்தைக் கொடுத்தது.

இவ்விதம் நினைந்து நிற்கும்பொழுது மயக்கந் தெளியும்படி ஏதோ கூகை குழறுஞ் சத்தம் போன்று ஒரு தொனி கேட்டது. நாலடி நடந்து என்ன வென்று நிதானித்தேன். காலடிச் சத்தங் கேட்டது. உடனே என் உடலெல்லாம் வியர்வை யரும்பியது. மனிதர் பேசுஞ் சத்தம் கேட்டது. உற்றுக் கேட்டேன்.

"இன்னிக்கு என்னுடா அப்புடி பயட்டேயே. ஒன்னுலே ஒரு பொட்டியே விட்டேட்டில்லே வந்துட்டேன்"

"அடேபோடா! நீ கொலெகாரண்டா. அந்தக் கொளந்தே அளுகுச்சு, துணுக்கின்னு பயந்துட்டேன்றே."

"ஆனு இன்னிக்கி கொண்டாந்த ஒருலக்ஷம் ரூபாயே இந்தடத்திலே வச்சுட்டுப்போலாம். கொஞ்சம் இந்தக் கட்டையாலே கல்லே."

"அப்படியே அண்ணே"

என்று இருவர் பேசிக்கொண்டு ஒரு நாகை மரத்தடியில் கல்லி ஒரு செம்பில் கொண்டு வந்த பணத்தைப் போட்டுப் புதைத்துவிட்டுச்சென்றார்கள். இவர்கள் பொக்கிஷம் வைக்குமிடம் ருத்திரபூமியினருகிருப்பதைக் குறித்துச் சிறிது ஆலோசித்தேன். இவர்கள் திருடர்களாதலால் இப்படிச் செய்தார்கள் என்று நினைத்தேன்.

சுமார் ஒரு மணி நேரம் பலவகையாக எண்ணிக் கொண்டு அவ்விடமே நின்றிருந்தேன். கடைசியில் திருடர்கள் சேமித்து வைத்த பணத்தை எடுத்துக்கொண்டு ஊருக்குள் பிரவேசிக்கவேண்டும்என்று தீர்மானித்துப்பணத்தை யிருப்பிடத்தினின்றும் எடுத்துக் கொண்டு ஒரு சாலை வழியாக ஊருக்குள் நுழைந்தேன். இருபுறமும் மாஞ்சோலை யாகலின் சுகந்த மணமான காற்று வீசிற்று. யான் உணவின்றி யிருப்பினும் சிறிது தென்புடனேயே நடந்து

சென்றேன். பணமூட்டை சிறிது வருத்தத்தையுண்டு பண்ணிற்றெனினும் அவ்வளவாகக் கவனிக்கும்படியில்லை. ஏனெனின் சவரன், நோட்டு இவைகளே அதிகமாகவிருந்தமையின். என்னைப்போலத் திருடர்களிடம் பிரியம் பாராட்டுபவர் எவரும் இருக்கமாட்டார்கள். யான் இஷ்டப்பட்டால் அவர்களைக் காட்டிக் கொடுத்திருப்பேன். நான் ஏன் இஷ்டப்படவேண்டும்? என் பிரிய நண்பரினும் பேருபகாரம் அவர்கள் எனக்குச் செய்தனர். நன்மையைச் செய்ய நண்பர்கள் முன்னர் வரமாட்டார்கள். பணத்தைக்கேட்ட பிறகே நட்பைக்கவனிக்க வேண்டும். இத்திருடர்களின் பொருளை யான் கவர்ந்ததனால் என் மீது குற்றஞ் சாட்டாதீர்கள். இப்பணத்தினால் ஏதோ நன்மையை யடைவேன் என்று என்மனம் சொல்லியது. ஆகவே இப்பணத்தைக் கைக்கொண்டேன்.

ஒரு சாப்பாடு போடுமிடத்திற்குச் சென்று உண்டு சிறிது இளைப்பாறினேன். அங்கு யான் இறந்த செய்தியைப் பற்றி ஒருவன் மற்றொருவனிடம் மிகவும் இரக்கத்துடன் சொன்னான். இதைக் கேட்ட யான் விஷயத்தையுணர மிகவும் ஆவல் கொண்டு ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்தேன்.

"இவ்வியாதியைப்பற்றி நாம் அடிக்கடி பேசுவதுகூட சரியல்ல. மிகவும் கொடுமையை நேற்று அது செய்தது. நம்பக்கத்திற்கெல்லாம் பணக்காரனைப் பின்பற்றி யழைத்துச் சென்றது."

"ஆம் அவன் எவ்வளவு பலசாலி? நல்ல புத்திமான். என்றுஞ் சிரஞ்சீவியாக விருப்பான் என்று யான் எண்ணியிருந்தேன்."

"உலகமே ஒரு பெரிய நாடகசாலை. பாத்திரங்களைப்போல நடித்து மறைந்து விடுகிறோம்."

"உண்மை தான், அவனிறந்த விஷயத்தைக் கேட்ட அவன் மனைவி சிறிதுகூட விசனத்தை வெளியிட வில்லை."

"அவள் ஏனப்பா விசனப்படவேண்டும். அவள் மிகவும் துஷ்டையென்று முன்னமேயே சொன்னேனே. நன்றாக அவளை ஒரு செக்கில் வைத்துச் சுற்றவேண்டும்."

இவ்வார்த்தைகளைக் கேட்ட எனக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. கோபத்தைச் சிறிது தணித்துக்கொண்டு முழுவதையுங் கேட்போம் என்று வீற்றிருந்தேன்.

"ஏனப்பா அவளைப்பற்றி யப்படிச் சொல்கிறாய்? அவளழகு

எவருமில்லை. அழகிற்கு இருப்பிடமான நம்சோளதேசத்திலேயே அவளைப்போன்றபெண் யான் கண்டதில்லை."

"அழகிருந்து என்னபயன்? குணமல்லவா ஒருத்திக்கு மேன்மையையளிக்கும். அந்தப் புஷ்பமித்திரன் சினேகன்—கொலைப் பாதகன்—அவளை வைத்துக்கொண்டிருக்கிறான் என்று முன்னமேயே உனக்குச் சொல்லியிருக்கிறேனல்லவா. அவனும் அவளும் இவன் இறந்த செய்தியைக் கேட்டதும் சிறிதேனும் இரங்காது ஒருவர் தோளின் மீது ஒருவர் கை போட்டுக்கொண்டு அழகிய அவன் சோலையிலேயே உலாவுகின்றனர். இப்பொழுது தான் அந்தக் கொடிய காட்சியைக்கண்டு வந்தேன். அதைப் பார்க்க என் மனம் சகிக்காமல் இவ்விடம் வந்துவிட்டேன் என் மனைவியாயிருந்தால் அப்பொழுதே கொன்றிருப்பேன்."

"இப்பொழுது அப்படித்தான் சொல்லுவாய். மணமாய்விட்டதும் அவள் அழகில் மயங்கி அறிவிழந்து அவள் செய்யுங்குற்றமொன்றையும் கவனிக்க மாட்டாய். அதுவே உலகவியற்கை. ஆனாலும் நீ சொல்லிய வண்ணமா ஹேமாங்கினியைக் கண்டாய்."

"இப்பொழுது என்னுடன் வருவையேல் யான் காண்பிக்கிறேன்."

இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றும் அம்புகள்போல் என்மனத்திற்கு வருத்த முண்டாக்கிற்று. என்செய்வேன்? அந்தச் சத்திரத்திலேயே ஓர் அறை குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்டு பணத்தையெல்லாம் நன்றாகப் பத்திரப்படுத்தி வைத்துக் கதவைத் தாளிட்டுக்கொண்டு என் மனைவியின் தன்மையை ஆராய்ந்தறியச்சென்றேன்.

போம்போது ஆடைகள் விற்கும் இடத்தை யடைந்தேன். அங்கு எனக்கு வேண்டிய ஆடைகளை வாங்கித் தரித்துக்கொள்ளுகையில் இருவர் வார்த்தகனுடன் என்னைப்பற்றிய செய்திகளையே அங்கும் வார்த்தையாடிக் கொண்டிருந்தனர்.

"ஆம். ஆம். அந்தப் புஷ்பமித்திரன் மிகவும் நல்லவன். நல்ல பலசாலி; அந்த ஹேமாங்கினியின் கழுத்தைத்துண்டித்திருப்பான். அப்புறம் எவ்விதத்தீய நடவடிக்கையும் பின்பற்றியிரான். இப்பொழுது அவன் உயிருடனிருப்பின் அப்படியே செய்வித்திருப்பேன். அதற்காகத் தான் நான் மிகவும் வருத்தப் படுகிறேன்" என்றான் அக்கிழவர்த்தகன்.

"ஐயா! ஏன் அவளை அவ்விதம் தூஷிக்கிறீர். உமக்கு ஏதேனும் அவள் தீங்கியற்றினளா?" என்று சிறிது அதிகாரத் தொனியுடன் யான் கேட்டேன்.

"நான் ஏன் அவளைத் தூஷிக்கிறேன் என்பதை உனக்குச் சொல்கிறேன், கேள். கவனமாய்க்கேள்:—நீயும் புஷ்பமித்திரனைப் போன்று பலசாலியாக விருக்கின்றமையின். வலிமையுள்ள மனிதரைக்காண்டல் எனக்குச் சந்தோஷம்—இவர்கள்தாம் ஸ்திரீகளால் ஏமாற்றப்படுகிறார்கள்; இவர்களைத்தான் மூடர்களாக்குகிறார்கள். ஆனல் இவர்கள்தாம் தகுந்த விதம் மனைவியைத் தண்டிப்பார்கள். ஆம். இவர்களே பழிக்குப்பழி வாங்குவார்கள். அந்த ஹேமாங்கினி மிகவுங் கொடியவள். அவள் ஒருகால் என்னைப்பார்த்து சிரித்தாள். ஆம். யான் அவள் வண்டியின் சக்கிரத்திலகப்பட்டுக்கொண்டு வருந்தும் பொழுது. அப்பொழுதுதான் என் மனைவியின் பிரதி பிம்பமென்று தெரிந்துகொண்டேன்.

"எந்தவிதமான பொருத்தம்?" என்று சிறிது உரத்த குரலுடன் கேட்டேன்.

பொருத்தமா? ஆம். சொந்த புருஷனைத்தவிர்த்து அயலானைப் பொருத்தும்படியான பொருத்தம்.—என்மீது கோபம் வேண்டாம். காதலைப்பற்றி எனக்குமிகவாகத்தெரியும். மேலும்இறைவன் ஸ்திரீகளிடம் அந்த வஸ்துவைப்புணர்த்திச் சிருஷ்டிக்கவில்லை. நான் அழகு என்னும்பொருளையே மணந்தேன். நான் ஒருகால் வெளியே ஊருக்குச் சென்றிருந்தேன். சில நாளைக்குப்பின் யான் திரும்பி வந்தபோது அவள் அயர்ந்து நித்திரைசெய்து கொண்டிருந்தாள் ஆம். சேலத்தினின்று வந்த ஒரு பாகவதர் மார்பத்தின்மீது உறங்கிக்கொண்டிருந்தாள். அவன் என்னைக்கண்டதும் கொலை செய்ய யத்தனப்பட்டான். ஆனல் அவனை யான் கீழே தள்ளி மேலே உட்கார்ந்தேன். என் மனைவி—உண்மைதான்—தான் செய்த குற்றமுணர்ந்த சிறுபிள்ளையைப்போலழுதாள். பாகவதன் நடுநடுங்கி இரக்கமுண்டாம்படி என் முகத்தைப் பார்த்தான். நான் சிரித்தேன். பயப்படவேண்டாம். உனக்கு யாதொரு தீங்குஞ்செய்யேன் என்றேன். அவள் சம்மதிக்கவிட்டால் நீ இக்காரியம் செய்திராய். நான் உன்னை வேண்டுவது என்னவென்றால் இவ்விடம் சிறிதுநேரம் தங்கியிரு. அப்பொழுது என்னைமருண்டுபார்த்தான். அவன் கையையும் காலையும் ஒன்றும் அசையாமலிருக்கும்படி சேர்த்துக்கட்டினேன். பிறகு ஒரு வாள் எடுத்துக்கொண்டு அவள்

அருகு சென்றேன். சந்திரன் போன்றமுகம் கரும்பாம்பு கவரப் போகும் சமயம் பிரகாசிப்பதினும் விளங்கியது. காதல் என்னும் வஸ்து கா(து)தல் ஆயிற்று. முன்னது ஒழிந்தது பின்னது வளர்ந் தது. அவ்வாளை அழகிய அவள் தசையிற் புதைத்தேன். அவள் காதலன் சிறிது கூச்சலிட்டான். அவள் அச்சமயம் உடுத்திருந்த வெள்ளையாடை முழுதும் சிவந்தவாடையாக மாறியது. திருப்தியு டன் கண் இமைக்காமல் பார்த்து நின்றேன். சில நிமிஷங்களில் கீழே விழுந்து இறந்தாள். உடனே அவ்வாளை அவள் மார்பினின் றும் எடுத்துக்காதலன் கைகால் கயிறுகளையறுத்து அவனிடம்கொடு த்தேன். அவள் ஞாபகச்சின்னமாக நீ வைத்துக்கொள் என்றேன். மேலும் என்னை ஏமாற்றிய மாதிரி ஒருமாதகாலத்தில் உன்னையும் ஏமாற்றி யிருப்பாள். ஆகவே நீ செய்யவேண்டிய கருமத்தை நானே செய்தேன்.

"அவன் வெளியே சென்று ஜவான்களை வரவழைத்து என் னைக் கொலைக்காரன் என்று அவர்களிடம் ஒப்புவித்தான். நியா யவாதிதனக்கும் மனையிருக்கின்றமையின் என் குற்றத்தின் தன் மையை முற்றுமுணர்ந்து விடுதலை செய்தனர்.

"ஐயா! என் அந்த ஹேமாங்கினியைப் பகைக்கிறேன்; தெரி கிறதா? அவளும் என் மனைவியைப் போன்றவள். அவள் புருஷன் புஷ்பமித்திரன் இறந்தது எனக்கு வருத்தத்தை விளைக்கிறது. அது விஷயத்தை நினைக்கக்கூட முடியவில்லை. ஒரு காலத்தில் என் னைப்போல அவன் அவளைக் கொன்றிருப்பான். ஆம். உண்மை யாகக் கொன்றிருப்பான். அதைப்பற்றி எனக்குச் சிறிதேனும் சந் தேகமில்லை. என்று அவன் கதையை முடித்தான்.

மிகவும் மனவருத்தத்துடன் அவன் கூறிய கதையைக் கவன த்துடன் கேட்டேன். குழாய்கள் தோறும் பரவும் என் சூடு கொ ண்ட இரத்தம் பனிக்கட்டியைப் போன்ற குளிர்ச்சியை யடைந் தது. நம்மிட ஹேமாங்கினியைக் கண்ட எவரும் ஆசை கொள் ளாமலிரார். இக்கிழவன் அவள் தன் வண்டியிற் சிக்கிக்கொண்ட பொழுது சிரித்தது உண்மையாகப் பொறுக்க முடியாத குற்றமே. சிறு வயதினளானமையின் தெரியாமையிற் செய்திருப்பாள். இக் கிழவனை என் பகைஞனுக்கிக் கொண்டாள் என்று மனம் வருந்தி னேன். ஆனல் ஒன்றையும் வெளித்தேற்றுவிக்கவில்லை. யான் ஏதாயினும் பதில் சொல்வேனென்று சிறிது காத்திருந்தான். பிறகு பரபரப்புடன்,

"ஐயா! சொல்லும், நான் தகுந்த விதம் பழிக்குப்பழி செய்ய வில்லையா? நம்மைரக்ஷிக்கும் இறைவனும் என்னைப்போலப்பழிக்குப் பழி வாங்கியிரான்." என்முன்.

"உன் மனைவி கொலையுண்டது தகுந்த தண்டனையே. ஆனல் அவள் கொலைகாரனுக நீ இருந்தது மாத்திரம் எனக்குச் சரியாக த்தோற்றவில்லை."

உடனே சிவந்த கண்களுடன் கோபமாய் "என்னையாகொலைக்காரன் என்கிறுய்? ஆ! ஆ! அது நல்லது. இல்லை, இல்லை—அவள் என்னைக் கொலை செய்தாள். அவள் தன் காதலன் மார்பகத்திலுறங்கிய போது யானிறந்தேன்—அவளே என்னைக் கொன்முள். அந்தப் பழியைத் தீர்த்துக்கொள்ள என் மனப்பேய் அவளைக்கொன்றது. அதனுற்முன் இந்தப் பெருவாரி வியாதிக்கு யான் சிறிதும் பயப்படுகிறதில்லை. யான் இரவில் தூங்குகிறதில்லை. தினமும் அவள் என் கனவில் வந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டுகிருள். என் செய்வேன், என் செய்வேன்." என்று சிறிது மருண்டு என்னைப்பார்த்து புன்சிரிப்புச் சிரித்தான்.

"என்ன ஞாபகம்? எதையோ யான் சொல்லிக் கொண்டிருந்தேன். உன்னை வீணில் இங்குத் தங்கச் செய்தேன். நீ போகலாம்," என்முன்.

யான் வெளியேசென்றேன். இக்கிழவனைப்பற்றி யான்மிகவும் இரங்கினேன். இவன் ஆயுள் முழுவதும் துன்பவாழ்க்கையாகவே போயிற்றே என்று வருந்தினேன். என்விதி இவன்விதியினும் எவ்வளவு மாறுபாடானது என்று நினைத்தேன். என் ஒருநாளைய வருத்தம் இவன் உயிருள்ளளவும் படுந்துன்பத்திற்கு ஈடாகுமா? ஒருகாலும் ஆகாது. யான் எவ்வளவோ அதிர்ஷ்டசாலி என்பதிற் சந்தேகமில்லை. புத்தியின்றி ஹேமாங்கினி செய்ததற்குஅவளைத் தன் மனைவியைப் போன்று பகைக்கிருன். ஆம். அவன் எல்லா ஸ்திரீகளையும் பகைக்கிருன். இவ்விதம் யான் எண்ணிக்கொண்டே செல்லுகையில் நடுநிசியாயிற்று. இனி நாம் ஹேமாங்கினியைக் காணப்போகலாகாது. இறந்த புருஷனின் பிசாசம் என்று பயப்படுவாள். மேலும் அவள் குணத்தைப் பற்றிப்பலர் தூஷிக்கின்றனரே! அவள் தன்மையை ஆராய்ந்தபிறகு அவளைச்சேருவோம் என்று ஒருவகைத் தீர்மானத்திற்கு வந்து சத்திரத்திற்குப்போய் என் அறையுட்படுத்தேன். சரியான தூக்கம் வராமல் படுக்கையிற் புரண்டேன்.

இன்னும் வரும்.

# வரதக்ஷிணை.

(எதிர் ஜாமீன்.)

ஸ்ரீ வாணீ விலாஸினீயின் சென்ற ஸஞ்சிகையில் சருக்கை இராமஸாமி ஐயங்கார் B.A., அவர்கள் நம்மவர் விவாகமுறை என்னும் வியாசத்தில் விவாகோற்பத்தி, ஆரியர்களின் விவாக முறைமை இன்னும் விவாக சம்பந்தமான அநேக விஷயங்களைப்பற்றி அதிக ஆராய்ச்சியோடும் நுண்ணறிவோடும் எழுதியிருப்பதைப் பார்த்துஅதிகத்திருப்தியடைந்தேன். ஆயினும் வியாசத்தின் பெயரைப்பார்த்ததும் இருந்த ஸந்தோஷம், அது முழுமையும் பார்த்தபொழுது இல்லை. ஏனெனில் துவக்கத்தைப்பார்த்தபொழுது நம்மவரில் இப்பொழுது விவாகம்நடக்கும்முறைமையையும் அதனால் நேரிடக்கூடியதீமைகளையும் பற்றி விரிவாக ஐயங்காரவர்கள் சொல்லுவார்களென்றும், அனதுபற்றி இப்பத்திரிகை வாயிலாக அத்தீமைகள் குறைவதற்கு ஒருவாறு நேரிடலாமென்றும் நினைத்தேன். அவ்வாறின்றி அத்தீமைகளைப்பற்றி அவர்கள் ஒரே இடத்திற்குறிப்பாகக் காட்டிவிட்டார்கள்.

ஐயங்காரவர்கள் சொன்னபடி நமது சாஸ்திரங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட விவாகங்கள் எட்டு வகைப்படும். அவையாவன, பிராமணம், தெய்வம், ஆருடம், பிராசாப

த்தியம், ஆசுரம், காந்தருவம், இராக்ஷதம், பைசாசம், என்பனவாம். இவற்றுட்கடையன மூன்றும் தற்கால நாகரிகத்துக்கும், ஆரியர் கொள்கைக்கும் ஒவ்வாதன. ஏனைய ஐந்தனுள்கடைத்தரமானது ஆசுரம். அவ்வாசுர மென்பது பெற்றோருக்கு மணமகன் ஏதேனும் பொருளு தவிசெய்து அப்பெண்ணை மணப்பது. இதுவேன் கடைத்தரமெனில், பணம் வாங்கி யதற்கீடாகப் பெண்ணைக் கொடுப்பது மாம்சவிக்கிரயமாதலால்.

இப்படியிருக்க, சென்ற சில வருஷங்களாக நமது தேசத்தில் முக்கியமாய் நம்முடைய மாகாணத்தில் வரதக்ஷிணை அல்லது எதிர்ஜாமீன் என்கிற ஒரு ஏற்பாடு உண்டாகிற விஷயம் இப்பத்திரிகை படிக்கிற யாவருக்குந் தெரிந்ததே. இந்தஏற்பாட்டினால் மணமகனுக்குமணமகள் வீட்டார் பணங் கொடுத்து விவாகஞ்செய்வது சற்று யோசித்துப்பார்ப்போமாயின் இந்நவீனவகை மேற் கடைத்தரமென்று சொல்லப்பட்டதினுங் கீழென்று எளிதிற் புலப்படும். ஆசுரம் வேதத்திற் கடைத்தரமாகவாயினு மங்கீகரிக்கப்பட்டது. இது அவ்வாறுகூட வேதத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டதன்று. ஆசுரத்தில் பணம் வாங்கும் மணமகள் வீட்டார் ஏழைகளாகவும் கதியற்றவர்களாகவும் இருந்தாலொழியத் தமது பெண்ணை விற்றுப் பணம் வாங்க மனந்துணியார். அவ்வாறு நிர்க்கதியாயிருப்பவர் கள் பணம் வாங்கினால் அதனால் அவர்களுக்குத் தோஷமுமில்லை. எதிர்ஜாமீன் முறையிலோ மணமகன் வீட்டாருக்குக் கவுரவமும் செல்வமும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, வரதக்ஷிணையும் அவ்வளக்கவ்வளவு அதிகப்படுத்தப்படுகிறது. ஆகையின் தேவையாயிருந்தது, அதற்காக ஏதோ வாங்கினோம், என்கிற முகாந்தரம் கூட இவர்களுக்கு இல்லை. இதுவுந்தவிர, ஆசுரம் மாம்ஸ விக்கிரய

மாயினும் பரிசம் கொடுப்பவன் வீட்டிற்குக் கொடுக்கப் படுவோன் வீட்டுப்பெண் போகிருள்; ஜாமீன் வகையிலோ கொடுக்கப்படுபவன் வீட்டுப்பிள்ளை கொடுப்பவன் வீட்டிற்குப்போய்விடுவதைக் கேட்டுமிலம். இந்தக்காரணங்களால் இந்நூதன முறை ஆசுரத்தினும் மிகவுந் தாழ்ந்தது என்பது நன்கு விளங்கும்.

இந்நூதன வகை விவாகத்தால் நேரிடுந் தீங்குகள் என்னவென்று சற்று ஆலோசிப்போம். (1) விவாகம் செய்கிறவர்கள் நோக்கம் பணம் ஒன்ருகவே போய்விடுகிறது. சாதி, குலம், ஒழுக்கம், உருவம் முதலிய விவாகத்திற் குறிக்கவேண்டிய முக்கியமான விசேஷ நோக்கங்களெல்லாம், அதிக இழிந்த தரத்தினதாகப் பணநோக்கத்திற்குக்கீழ்ப்படுத்தப்படுகின்றன. எப்படியெனில், உயர்ந்த சாதி, நற்குலத்திற் பிறந்து வனப்பு வாய்ந்த ஒரு பெண் ஏழைவீட்டிற் பிறந்தவளாயின் அவள் எவ்வளவு நற்குணமுள்ளவளாயினும், அதை நோக்காது ஜாமீன் பணநோக்குடைய மணமகன் வீட்டார் இழிந்தசாதி குலத்திற் பிறந்த மூதேவி போன்ற வனப்புடைய பெண், பணமுள்ளவர் வீட்டிற் பிறந்தவளாயின், இவள் வீட்டார் கொடுக்கக்கூடிய பெருந்தொகைக்காக இவளையே மணக்கிருன். குணம் குறையக் குறையப் பணம் அதிகப்படுமென்ரு? இதுபோலவே பணமுள்ளவர், தம் வயிற்றிற் பிறந்த பெண்ணை நற்குலம், கல்வியறிவொழுக்கம், நல்லுருவும் வாய்ந்த மணமகன் ஜாமீன் பணமில்லாது சும்மா கிடைப்பதாயினும் கைவிட்டு, இவனுக்கு முற்றிலும் விரோத குணம் வாய்ந்தவன் பணமும் ஆங்கிலம் (English) படிக்கிருனென்கிற பேரும் உள்ளவனுயின் ஏறக்குறையப்பணத்தையும் பெண்ணையும் அவனுக்கே கொடுப்பார்கள்.

(2) முற்காலத்தில் நமது முன்னோர்கள் "சுற்றந்த

மூல்'' என்னும் பழமொழியை உட்கொண்டு, தம்மு டைய பந்து ஒருவன் ஏழைமை நிலைமையிலிருந்தால் அவன் வீட்டுப்பிள்ளைக்கேனும், பெண்ணுக்கேனும் தமது வீட்டிற் பிறந்தகுழந்தைகளுக்குச் சம்பந்தஞ் செய்வது வழக்கம். ஏன் அவர்கள் இப்படிச் செய்து வந்தார்களெ னில், "எடுப்பிற் கிளையுட் கழிந்தாரெடுக்க" என்று ஆன்றோ ருரைத்தபடி, பெண்ணுக்காகவேனும் பிள்ளைக்காகவேனும் தாம் செலவு செய்கிற பொருள் தம்மினத்தாரை முன்னுக் குக்கொண்டுவருவதற்குக் காரணமாகு மென்றெண்ணியே. இது பற்றியே அன்னிய ஸம்பந்தம் என்று பந்துவகைக்கு அப்பாற் போவதை சிறிது நிந்தனையாய்ச் சொல்வதுண்டு. இக்காலத்திலோ பந்து அபிமானம்முதலிய நற்குணங்களெ ல்லாம் போய்ப் பணக்குறி ஒன்றுதானிருக்கிறது. இது வும் கலியுகத்தின் தர்மங்களில் ஒன்றுபோலும்.

(3) இவ்வேற்பாடு குழந்தை விவாகங்களை அதி கப்படுத்துகிறது. எப்படியெனிற் பெண் பிறந்த தினம் முதல் அதற்கு நல்லவரன் சம்பாதிக்கவேண்டும்; அவ்வா னது உயர்வினால் நாமும் கவுரவமடைய வேண்டுமென்று, ஒவ்வொருவரும் எண்ணுகிறார்கள். ஆதலால் அக்காலம் முதற்கொண்டே வரநோக்கமுடையவராகிறார்கள். பெண் ணுக்கு 3 வயதான உடனே கல்யாணப் பிரஸ்தாபமும், எத்தனமும் ஏற்படுகிறது. பெண் பெரிதாய்விடில் தகு ந்த வரன் கிடைக்காமற்போகுமென்று பயந்து குழந்தைப் பருவத்திலேயே விவாகத்தை முடித்துவிடுகிறார்கள். பால்ய விவாகத்தினால் நேரிடும் தீங்குகளநேகம். அவற்றுள் முக்கி யமானவை பால்ய வைதவ்யம், இளமையில் முதுமை, வம்ச க்ஷயம்.

1. பால்ய விவாகம் அதிகப்படுவதினாலே, பால்ய

விதவைகளும் அதிகப்படுகிறார்கள். ஏனெனில் இப்பொழுது 5 வயதிற்குக் கல்யாணம் பண்ணுகிற கன்னிகையை 12 வயது வரையிற் கல்யாணம் இல்லாமல் வைத்திருந்தால் இடையிலுள்ள 7 வருஷங்களில் வைதவ்யமடைகிற தற்செயல் அவளுக்கில்லாமற்போய்விடும். வயதாக ஆக, பால்ய வைதவ்யமடைதலும் குறையும்.

2. பால்ய விவாகத்தையடைகிற சிறுவர், சிறுமியர் இளம் பருவத்தில் தம்முடைய, எலும்பு, தசை முதலிய முதிர்வதற்கு முன்னமே இல்வாழ்க்கையைத் தொடங்கிப்புணர்ச்சியின்பத்தை நுகருவதற்கு ஆரம்பிக்கிறார்கள். இவர்களுடைய சரீரத்தைப்புஷ்டிசெய்து வளர்க்கிற பதார்த்தமானது வீணாக்கப்படுகிறது. ஆகையால், சரீரம் முழு வளர்ச்சியடையச் சற்றேனும் இடமில்லாமற் போகிறது. எப்படிஎனில், கள்ளிறக்கப்பட்ட ஈச்சுமரமானது வளர்ச்சி குறைந்து ஜீரணமடைவதுபோலவே இவர்களும் மனிதருக்குள்ள முழு வளர்ச்சியடைவதில்லை. 30, 35 வயதுக்குள் இவர் பேரன், பேர்த்தி யெடுத்து, மற்றநாட்டார்கள் யெளவனமடைகிற காலத்தில், விருத்தர்களாகிறார்கள். ஐரோப்பியர் சுமார் 40 வயதுக்கு மேற்றான் விவாகத்தைப்பற்றி நினைப்பார்கள். நம்மவர் அந்த வயதில் முதியவர்களாகி பெருநோய்கட் குட்பட்டுச் சீக்கிரத்தில் மரணமடைகிறார்கள். உயிரோடிருப்பினும், இவ்வாறிருப்பதினும் இறப்பது நலமென்று தாமும் தம்மைச்சேர்ந்தோரும் நினைக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள்.

3. இவர்களுடைய வயிற்றிற் பிறக்கிற குழந்தைகளைப்பற்றி ஒன்றும்சொல்லவேவேண்டாம். அநேகம்கருப்பகாலத்திலேயே இறக்கின்றன, அன்றேல் பிறந்தது முதல் நோய்க்காளாகின்றன. பெரிய கூட்டம் கூடிய ஓர் உற்சவம், ரயில்வே ஸ்டேஷன்முதலிய இடங்களுக்குப்போய்ப்

பார்ப்போமாயின், 100 குழந்தைகளில் 10 குழந்தைகளாவது அரோக திடகாத்திரர்களா யிருப்பதைப் பார்ப்பதரிது. என்ன வயிற்றெரிச்சல்; சூனும்வயிறும், குழிந்த கண்ணும், பதுங்கல் கன்னமுமாய் இருக்குமே தவிர வேறொன்றுமில்லை. இவ்வாறு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வம்சம் நசிக்கும்படி செய்வதனுல், நமது தேசத்தில் சில வருஷங்களுக்குப் பிறகு, சரியான ஆடவர் பெண்டிர் இல்லாமலே போய்விடும். இதினும் நாம் விசனப்படக்கூடிய காரியம் வேறொன்றுமில்லை.

இந்தக் காரணங்களால் எதிர் ஜாமீன் ஏற்பாடு பால்ய விவாகத்திற்கும், பால்ய விவாகத்தால் மேற்கண்ட தீங்குகளுக்கும் நேரே காரணமாகின்றது.

4. சில வருஷங்கள் முந்தி வரையில் ஒரு வீட்டிற் குழந்தை பிறக்குமேயாயின், அது ஆணாயினும் பெண்ணாயினும், ஒரு கல்யாணம்போலவே கொண்டாடுவது வழக்கம். அது பிறந்த உடனே பெற்றவன் ஸ்நானஞ்செய்து, நல்லுடையுடுத்துச்சந்தனங் குங்குமமணிந்து திண்ணையிலுட்கார்ந்து வந்தவர்க்குச்சர்க்கரைவெற்றிலைபாக்கு வழங்குவது வழக்கம். இப்பொழுதோ பிறந்தது ஸ்த்ரீப்ரஜையாயின், வீட்டிலுள்ளவர்கள் முகத்தில் ஈயாடாது, இறந்தவீட்டைப்போலத்துக்கம் கொண்டாடுகிறார்கள். கீழ்ப் பிறப்பாகிய மிருகங்கள்கூடத் தம் வயிற்றிற்பிறந்த சிசுக்களை உயிர் போலப் பாதுகாக்கின்றனவே; எத்தனை தாய் தந்தையர்கள் பெண் குழந்தை பிறக்கக்கூடாது, அது பிறப்பினும் இறப்பது நலம் என்று நினைக்கிறார்கள். சிசுவாஞ்சை இளம் பருவத்தில் ஜந்துக்கள் பரிபாலிக்கப் படவேண்டுமென்று கடவுளால் ஏற்படுத்தப்பட்ட இயற்கைக்குணம். இவ்வியற்கைக் குணத்தைக்கூட எதிர்ஜாமீன் தொலைத்து விடுகிறதே. என்ன பாவம்!

இவ்வளவு தீமையை நமக்கும், நம் நாட்டாருக்கும் விளைவிப்பது எதிர் ஜாமீன் என்பது மேற்குறித்த விஷயங் களைக் கவனித்தால் நன்கு புலப்படும். இவ்வெதிர் ஜாமீன் உண்டானதற்குக்காரணம் என்னவென்று ஆலோசிப்பின், ஆங்கிலப்படிப்பும், அதைப் படித்தவர்களுந்தான் என்று ஒருவாறு தோன்றுகிறது. ஏனெனில், (1) ஆங்கிலப் பள்ளிக்கூடமும், ஆங்கிலப் படிப்பும் ஏற்படுவதற்கு முந்தி இது கிடையாது. இவை ஏற்பட்டபொழுதுதான் இது வும் ஏற்பட்டு, இவை விர்த்தியடைந்த இக்காலத்தில் இதுவும் விர்த்தியடைந்திருக்கிறது. (2) ஆங்கிலம் படிக் கிறபிள்ளைகளுக்கே பரிசம் ஏற்பட்டு, அவர்கள் படிக்கிற வகுப்பிற்கும், கொடுத்த பரீக்ஷைக்கும் தக்கபடியே நிதா னிக்கப்படுகிறது. அதாவது பரீக்ஷையும் வகுப்பும் உயர உயரப்பணமும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் பயி லாதிருக்கிற பணக்காரர் வீட்டு நாட்டுப்புறத்துப் பிள்ளை களுக்கும் எதிர் ஜாமீன் வாங்கப்படுகிறதேயெனில், அது அவ்வளவாயில்லை. ஏகதேசம் இருப்பினும் முற்கூறிய ஆங்கிலம் படிக்கிற மாணாக்கர்களைப்பார்த்து ஏன் நாமும் வாங்கக்கூடாதென்று நினைப்பதினுற்முன் இருக்கும்.

இந்தக் காரணமன்றி ஆண்பாலாரினும் பெண்பாலார் அதிகமாயிருப்பதினுற்முன், பெண் பாலார் ஆண் பாலா ருக்குப் பரிசம் கொடுக்கவேண்டியதா யிருக்கிறதென்று சொல்லலாம். ஏற்கனவேயும் பெண்பாலா ரதிகம் தானே? அன்றியும் எதிர் ஜாமீன் ஏற்பட்டிருப்பது முக்கியமாய்ச் சில ஜாதியாருக்குட்டானே ? இந்தச் சாதியாரில் மாத்தி ரமா பெண்களை அதிகமாகக் கடவுள் சிருட்டித்திருக்கிறூர். இது போன்ற காரணங்களால் இந்த முகாந்தரம் அங்கீக ரிக்கத் தக்கதல்லவென்று எளிது விளங்கும்.

ஆங்கிலம் படித்து நல்ல நிலைமையிலிருக்கிற கன

வான்களே! இத்தீங்குக்கு நீங்களே காரணமாகிறீர்கள்? இப்பொழுதாவது இதைத் தடுக்காமல் வளரவிடுவீர்களாயின், இது அநேகம் குடும்பங்களைக் கெடுத்துவிடும். உங்களில் அநேகர் பெண்மக்களைப் பெற்றவர்களாகவேயிருப்பீர்கள். நீங்கள் எவ்வளவு உயர்ந்த நிலைமையில் இருந்தாலும் அப்பெண் மக்களுக்குக் கல்யாணம் நடக்க வேண்டுமே யென்கிற கவலை அவர்கள் பிறந்தது முதல் உண்டாகிக்கல்யாணத்தோடும் முடியாமல் எவ்வளவு துன்பத்தை யடைகிறீர்கள். கல்வியறிவிலும், பணத்திலும், அதிகாரத்திலும் உயர்ந்த உங்களுக்கே யிவ்வாறிருக்குமாயின், கீழ்த்தரத்திலுள்ள மற்றோர் என் செய்வார்கள்.

நாம் ஒருவர் என் செய்வது, இது சாத்தியமானதல்லவென்று சொல்வீர்களாயின், என் சிற்றறிவுக்கேற்ற ஒரு உபாயம் சொல்லுகிறேன் கேளுங்கள். உங்களில் ஒவ்வொருவருடைய வயிற்றிலும்பிறக்கிற பிள்ளைகளுக்கு எதிர் ஜாமீன் கேட்பதுமில்லை, வாங்குவது மில்லையென்று கடவுளறிய மனத்தில் தீர்மானம் செய்துகொள்ளுங்கள். இந்தக் கொள்கையை நீக்கக்கூடிய என்ன விகாதம் ஏற்பட்டாலும் கவனிக்காதீர்கள். இப்படித் துணிவாக நடத்துவீர்களாயின் உங்கள் வம்சம் நீடூழிதழைத்து க்ஷேமத்தை யடைவீர்கள். இந்நற்செயல் கடவுளுக்கும் மனிதருக்கும் திருப்தியை விளைவித்து எல்லாராலும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

சுந்தரேசபாரதியார்.

# மல்லிகாமாருதம்.

இது நிற்க, மாருதனிடஞ் சென்று மீண்டும் தன்னருகுற்ற காளிந்தியைக் கண்ட மல்லிகையும் மிக்க ஆவலுடன் அவளை நோக்கி, "ஸகி, காளிந்தி, யான் நின்பால் கொடுத்தனுப்பிய மாலையை அம்மஹாநுபாவன் மறுக்காமல் ஏற்றுக்கொண்டாரா?" என, காளிந்தி, "ஆம்; அதனையவர் அதிக அன்புடனும் ஆதரத்துடனும் ஏற்றுக்கொண்டனர். யானும் அவருடன் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்து பின்னர் அவர் ஸ்நானம் புரியுமாறு அநேக விலைமாதர் பரிமள மிகுந்த பனிநீர் நிறைந்த பொற்குடங்களைத் தங்கரங்களிலேந்தி அவரிருக்கும் மஞ்சனச்சாலை நாடி விரைந்து வருவதைக்கண்டு உடனே அவர்பால் விடைபெற்று மீளவுமீண்டெய்தினேன்," என்றாள். அவள் மொழிந்த வசனங்களைச் செவியுற்ற மல்லிகையும் தன்னுள் "ஒ! என்னுடன் பிறந்த எனது பிரியமுள்ள தோழியாகிய மாலிகையே, நீ பெற்ற பாக்கியமே பாக்கியம். உனது ஸௌந்தர்யத்திற்குத் தக்க பிரயோஜனத்தை நீ யடைந்தனை. நாமிருவரும் ஒரே முகூர்த்தத்தில் இப்புவியில் உதித்தோமென்றாலும் நம்மிருவருடைய வினைப்பயன்கள் வெவ்வேறாக விருக்கின்றன. அஃதெங்ஙனமெனில், தமால விருக்ஷத்தின் தளிர்போல் தளதளவென்று துலங்கும் தேககாந்தியையுடைய அம்மஹாநுபாவனது கண்டத்தை வலிய அணைந்துகொண்டு அவரது தடமார்பில் புரளும் பெரும் பேற்றை நீ பெற்றனையன்றோ?" என்று எண்ணிக்கொண்டு, காளிந்தியை நோக்கி, "ஸகி, அம்மஹாபுருஷன் நல்ல வேளையாய் எனது முதல் வேண்டுகோளை மறுக்காமல் அன்புடன் மாலையை அங்கீகரித்தாரே." என்று சந்தோஷத்துடன் உரைக்கவே, காளிந்தியும் "அம்மா, மல்லிகை, அவர் நீயனுப்பியமாலையை ஆதரத்துடன் அங்கீகரித்துக் கொண்டதுமல்லாமல் தன் மார்பை விட்டென்றுமகலாது, சரத்கால நக்ஷத்திரங்கள்போல் ஒளிகதிர் வீசும் ஸஹஜமான விம்முத்து வடத்தையும் நீயளித்த நறுமலர்மாலைக்குப் பிரதிதான

மாகக் கொடுத்து அனுப்பியிருக்கின்றார் பாரம்மா.'' என்றுரைத்து அம்முத்துமாலையை அவளது கழுத்தினிலிட்டனள். மல்லிகையும் ஆரத்தினது பரிசத்தினாலுண்டான வாநந்தத்தினால் அங்கமெங்கும் புளகிக்கத் (தன்னுள்) "ஆகா! அப்புண்ணியபுருஷனை யான் கண்ணுற்ற காலந் தொடங்கி யென் சரீரத்திலுண்டான தாபத்தைத் தணிக்கக்கருதி இதுகாறுமெனக்குப் பாங்கிமார் புரிந்துவந்த சைத்தியோபசாரங்கள் பலவும் சிறிதும் பயனின்றிப்போனதுமல்லாமல் எனது சரீரதாபத்தை முன்னிலும் மும்மடங்கதிகமாக மூளச்செய்தன. இப்பொழுது அம்மஹாபுருஷனது மேனியின் சம்பந்தம் பெற்ற இம்முத்துவடம் எனதுமார்பின்மீது புனையப்படவே அமிழ்த வெள்ளத்தைப் பெருக்கு மனேகமாயிரஞ் சந்திரர்களை யொருங்கே திரட்டி யெனது தேகமெங்கும் பூசினாற்போல ஜில்லென்று இருக்கின்றது.'' என்று எண்ணிக்கொண்டிருக்கையில் அருகிலிருந்த நவமாலிகை காளிந்தியை நோக்கி [தனியே], "ஸகி, காளிந்தி, நமது ஸகி மல்லிகை அம்மாருதனைக் கண்டது முதல் அநங்கனெனும் அநலனது தாபத்தினால் நனிவருந்துகின்றனள் போலும். ஏனெனின், முன்போற் கொஞ்சும் செஞ்சொற்களையுடைய பஞ்சரத்தகத்துறையும் பஞ்சவர்ணப் பைங்கிளிகளின் இனிய மொழிகளைக் கேட்க இச்சைப் படுகிறதில்லை. மந்தமாருதம் வீசும் சந்திரப்பிராஸாத சிகரத்தை நாடுகிறதில்லை. பாங்கியர் பகரும் பரிகாச மொழிகளைக்கேட்டுப் பிரியமுடன் நகைக்கிறதில்லை. தாமரைத் தண்டாகிய தண்டாரைப்புனைந்து தாராகிருகமே நாடிச் செல்லுகின்றனள். மல்லிகைமலர்பரப்பிய தளிர்ச்சயனத்தில் தளர்ச்சியுடன் படுத்துப் புரளுகிறாள். தாமரையிலையாகிய விசிறிகொண்டு வீசினும் தாபம் தணியாது தவிக்கின்றனள். தழதழத்த குரலோடு மழலைச்சொற்களை மொழிகின்றாள். அடிக்கடி நெட்டுயிர்ப்பெறிகின்றாள். ஐயன் மாருதன் விஷயமான வார்த்தைகளில் மிகவும் மனவேட்கையுறுகிறாள். இப்பொழுது அவரது நித்திலவடந்தனைத் தன் தடங்கொங்கையில் பூணவே, அரும்புகளால் நிரம்பிய கதம்ப மரம்போல அவயமெங்கும் ஆநந்தபுளகிதமாயிருக்கின்றது பார்த்தாயா? இவள் இங்ஙனம் அவர்பால் தனக்குண்டானமனவேட்கையை இலச்சையால் நம்மாட்டுரைத்திலள். ஆகிலும் அவள் வாயைக்கொண்டே அவர்பேரில் இவட்குற்றவபிநிவேசத்தை யறிய முயல்வோம். ஏனெனில் தனக்கு நிகழ்ந்த துக்கத்தைத் தனது நட்டோர் மாட்டுரைக்கினன்றோ அது மட்டாக மாறும்.'' என்றுரைத்து மல்லிகையை நோக்கி, ஸகி, மல்லிகே, நமது தோழி காளிந்தி

புகலுகின்றதாவது : "கோமகர்க்கழகு தங்குடிகளையோம்பல். ஏவலர்க்கழகு தம்மிறைவனைப் பணிதல். தம்பதிக்கழகு அன்புடன் வாழ்தல். அன்பர்க்கழகு நம்பியிருத்தல்." ஆதலின் பாலப்பருவந் தொட்டு நின்னொடு புழுதிவிளையாட்டுப் புரிந்து அல்லும் பகலுமிணைபிரியாது இன்புற்றிருந்த இனியதோழியாகிய என்னிடத்தில் நினது ஸுகதுக்கத்தை யொன்றுமொளியாது நன்கு வெளியிட்டுச் சொல்ல வேண்டியிருக்க, இங்ஙனம் நினது மனோபாவத்தை என்னிடம் தெரிவிக்காமல் தேகதாபத்தினால் தத்தளித்துக் கொண்டிருப்பது தருமமோ? ஆதலின் நினது உட்கருத்தையுள்ளபடி தெரிவித்துன் தேகதாபத்தைத்தணித்துக் கொள்" எனவே மல்லிகை, "ஸகி, நவமாலிகே, எனக்குற்ற மனவேட்கையைப்பற்றி யேற்கெனவே நினக்குச் செப்புமாறு பலமுறை எண்ணங் கொண்டேன். என்றாலும் எனக்குண்டான இலஜ்ஜையால் ஏதுமுரைக்க நாவெழவில்லை. ஆகிலும் இனித் தக்க தோழியிடம் தாபத்தின் காரணத்தைத்தெரிவிக்காது தாமதித்தல் கூடாது. ஆதலின் யான் அதைத் தடையின்றிச் செப்புகின்றேன்; கேள்:—அம்மகாநுபாவன்——"என்று சொல்லவாரம்பிக்கும் பொழுதே மல்லிகை வெட்கம் விஞ்சி நாவெழாமல் மௌனமாயிருந்தனள். அதுகண்ட நவமாலிகையும் அவளைநோக்கி, "ஸகி, போதும்; போதும். இனி நீ அதனை நின் வாயால் உணர்த்த வேண்டுவதில்லை. இரவியினது வெப்பத்தினால் வாடி வதங்கிய சிரீடமலர் போன்ற நினது அவயவங்களே நன்கு தெரிவிக்கின்றன. நல்லது; இப்பொழுதுதான் அம்மஹாபுருஷனது யௌவநம் ஸபலமாயிற்று. ஏனெனில் புருடோத்தமனாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவினிடத்தில் இலக்குமி தேவிபோலும் இந்துவினிடத்தில் உரோகிணிபோலும் அம்மஹாநுபாவனிடத்தில் நீ மனவேட்கையுற்றிருக்கின்றாயல்லவா?" என, மல்லிகை [பெருமூச்சுடன்], "ஸகி, யான் அவர்பால் அபிலாஷமுற்றிருப்பதினால் மட்டுமே யாதுபயன்? என்னைப்போல் அவர்க்கும் என்மாட்டு நேசமுண்டானாலல்லவோ நலம். அங்ஙனமின்றி அவர் என்னை நேசியாமல் யான் மட்டும் அவர்பால் மையலுற்றிருப்பது துயரத்திற்கே யல்லது சுகத்திற்கில்லை." என, அதற்குக் காளிந்தி "ஸகி, மல்லிகையே, நீ அங்ஙனம் புகலவேண்டாம். அநுரூபதம்பதிகளை யினிது கூட்டிவைக்க முயலும் அநங்கபகவான் அம்மாருதனையும் ஏற்கெனவே தனது அமோகமான வம்புகளுக்கு இலக்காகச் செய்திருக்கின்றான். அஃது எங்ஙனமெனில் இயம்புகின்றேன் கேள்.

"யான் நின்மாலையை அளிக்குமாறு அவர்பால் சென்றபொழுது அவரது நயனங்களிரண்டினின்றும் கண்ணீராறாய்ப் பெருகிக்கொண்டிருந்தது. சரீரமெல்லாம் தளர்ச்சியுற்றிருந்தது. முகமலர் வாடியிருந்தது. அக்காலை அவர் அருகில் நண்பன் கலகண்டன் ஒருவனைத் தவிர வேறு யாருமிருந்திலர். அன்றியும் யான் உனது குணாதிசயங்களை யெடுத்துரைக்குங்கால் அவைகளை மிக்க ஆவலுடன் செவிசாய்த்துத் தன்னிருகபோலங்களும் புளகிக்க வெட்கியிருந்தாரம்மா." என, மல்லிகை, "ஸகி, காளிந்தி, உன்னைப்போன்ற பிராண ஸகிகள் என்னைத் தேற்றுவதற்காக இத்துணை பெரிய பொய்ம்மொழிகளைக்கூறி யென்னை யேய்க்காதுமற்று யார்தான் ஏய்ப்பார்கள்?" என்று புகல, அக்காலை நவமாலிகையியம்பினதாவது: "ஸகி, மல்லிகே, யாங்கள் உன்னைத் தேற்றுவதற்கென்றே இவ்வாறு ஏய்ப்பு வார்த்தைகளைப் புகன்றோமென்றே வைத்துக்கொள். இப்பொழுது யானெடுத்துரைக்கப் போகின்ற சங்கதியாயினும் யதார்த்தந்தானாவென்பது உனது மனதிற்கே தெரியுமல்லவா? அது யாதெனின், நீ மந்தாகினியைத் தரிசிக்கச் சென்றிருந்தபோது அவளருகில் நின்றுகொண்டிருந்த வம்மஹாநுபாவன் மிக்க ஆவலுடன் அலர்ந்த தன்னிருகண்களாலும் உன்னைப் பானம்பண்ணவில்லையா? அக்காலை நீயும் அவரது வடிவழகால் கவரப்பட்ட மனத்தினளாய் அவர்பேரில் வைத்த கண்ணையெடுக்காது, யோகினிக்குப்புரியவேண்டிய வந்தனை வழிபாடுகளைக்கூட மறந்துபோகும் நிலைமையிலிருக்கக்கண்ட யானும் உன்னையுடனே விரலால்வருடி நினைவூட்டவில்லையா? என்பதேதான்." என்றாள். உடனே காளிந்தியும், "ஸகி, மல்லிகையே எங்கள் வார்த்தையில் நீ கிஞ்சித்தேனும் அவநம்பிக்கைப் படவேண்டுவதில்லை. அவர் முதலில் தனது ஆத்துமாவை நின்மாட்டு அர்ப்பணஞ்செய்து பிறகு இம்முத்துமாலையை யீந்தனரன்றோ?" என நவமாலிகை, "ஸகி, காளிந்தி, நமது தோழியும் தனது இருதயத்தில் அவரீந்த முறைப்படியே முதலில் அவரது ஆத்துமாவையும் அதன் பின்னர் அவரது ஹாரத்தையும் தரித்துக்கொண் டிருக்கிறாளல்லவா?" எனவே, மல்லிகையும் மாருதன்மாட்டுண்டான மன்வேட்கையின் மிகுதியால் அவன் தனது இருதயத்திற்குள்ளிருப்பது யதார்த்தமென்றே கருதி, மிக்க களிப்புடன், "மஹாபாக, நீர் உம்மைப் பார்ப்பவர் எல்லோருடைய கண்களையும் மனதையுமொருங்கே வலியக்கவருந் தன்மையையுடையரா யிருக்கின்றீரென்னுங்காரணம்பற்றி மிக்கவுலோபியாயிருந்தபோதிலும் மூவுலகுக்குமோரண்

கலனுயிருக்கும் உமது ஆத்துமாவைக் கூடப்பிறர்க்கர்ப்பணஞ் செய்யும்படியான வுதார குணமும் நும்மாட்டிருப்பது மிகவும் வியக்கத்தக்கதே. ஆகிலும் உம்மைக் கண்ணுற அதிக ஆவலுற்றிருக்கின்ற எனது நயனங்களுக்கு நுமது நித்திலவடத்தைப் புலனுக்கியதுபோல் உமது ஆத்துமாவையும் கட்புலனுக்காதொழிவீரேல் நீர் விளம்பிய வாய்மை முற்றும் வாய்மையின்றி யொழியும்'' என்ருள்.

அக்காலை நவமாலிகை காளிந்தியை நோக்கி, ''ஸகி, காளிந்தி, பார்த்தனையோ நமது ஸகி மல்லிகை இப்பொழுது மாருதனை உண்மையாகவே தன்மனதில் ஒளித்துக்கொண்டிருப்பவளுகவுன்னி இங்ஙனம் உரைக்கின்ருள். நல்லது; சற்று வேடிக்கை பண்ணுகிறேன் பார்.'' என்று சொல்லி மல்லிகையை நோக்கி, ''பிரியஸகி, நினது ஆசைநேசர் தாம் நேரில் வரும்பக்ஷத்தில் அவரை நீ ஒருவேளை அவமதித்துவிட்டால் என் செய்வதென்று அஞ்சி உனது இருதயத்திலேயே ஒளித்துக் கொண்டிருக்கிருர் என்று நம்புகின்றேன்.'' எனவே, மல்லிகை, ''அங்ஙனமாகில், சந்திரனும் தான் உதயமாவதற்கு முன், தனது உதயம் குமுதமலர்க்கு விருப்பமாயிருக்கின்றதா இல்லையா வென்று பரீக்ஷித்துப் பின்னரல்லவோ வுதிக்கவேண்டும்; நல்ல வார்த்தை சொன்னுய். இப்பொழுது அவரைக்காணுது அழலிலிட்ட மெழுகுபோல் யான் படும் அவஸ்தை உனக்குத் தெரியுமா?'' என, நவமாலிகை காளிந்தியை நோக்கி (தனிமையில்), ''ஸகி, பார்த்தனையா நமது மல்லிகைக்கு அம்மாருதன்பாலுண்டான மனவேட்கையை?'' என்றுரைத்து மல்லிகையை நோக்கி, ''எனதன்புக் களஞ்சியமே, இப்பொழுது நின் மனதில் தோன்றியிருப்பவர் பாவநாமாருதனேயன்றி மெய்யான மாருதனல்லவம்மா.'' என்று பரிதாபத்துடன் புகலவே, மல்லிகை மிக்க விசனத்துடன், ''சீ! சீ! இப்பொழுது எனது மனதி லுதித்திருப்பவர் கேவலம் பாவநாமாருதன் தானு? யான் பேதை ஸத்தியமான மாருதன் என்றே நம்பி இன்புற்றிருந்தேன். ஆகா! அவரது மாசற்ற மதிமுகத்தை மீண்டுமொருமுறை தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டுமோ?'' என்று பரிதபிப்பதைக் கண்ணுற்ற நவமாலிகையும், ''பிராணஸகி, நீ இங்ஙனம் மனந்தளரவேண்டாம். விரஹி ஜனங்களுடைய வேதனையை யாற்றுவதற்கு வல்லபர்களின் குணங்களை வர்ணித்தல், அவர் பூண்ட பூஷணுதிகளைப் பூணல், அவரது சித்திரப்படத்தைத்தரிசித்தல் முதலிய வுபாயங்கள் இருக்கின்றன வல்லவா?'' என, மல்லிகை, ''ஆம்; நீ சொல்வது வாஸ்தவந்தான். அவரது வடிவ

முகைச் சித்திரத்திலாவது எழுதிப் பார்த்துக்கொண்டு எனக்குற்ற விரகதாபத்தை யொருவாறு தணித்துக் கொள்ளலாம். ஆகிலும் பிரமனது கைகளால் சிருஷ்டிக்கப்படாது அவரது மனதினுல் நிர்மிக்கப்பட்ட படைப்பென்று ஐயுறத்தக்க வடிவழகுவாய்ந்த அம்மாரு தனது படத்தை யெனது கையால் எழுதுவது எங்ஙனம்? ஆகிலும் எனது சக்திக்கியன்றமட்டும் எழுத முயல்கின்றேன். நீ சித்திரசாலைக்குச் சென்று படம் வரைதற்கு வேண்டிய கருவிகளையும் வர்ணங்களையும் எடுத்துவா.'' எனவே, நவமாலிகையும் அங்ஙனமே புரியுமாறு எழுந்திருக்கையில் வாயில் காப்பவள் மல்லிகைபாலுற்று, "அம்மா, மந்தாகினியினது சீஷை ஸாரஸிகை யென்பாள் கரத்திலொரு தந்தச்சிமிழுடனுற்றுத் தமது தரிசநத்தை யெதிர்பார்க்கின்றனள்.'' என, மல்லிகை, "அவளைச் சடுதியில் உள்ளே யிட்டுக்கொண்டுவா' என, பிரதீஹாரியும் அங்ஙனமே ஸாரஸிகையை யுள்ளே யழைத்துவர, ஸாரஸிகையும் மல்லிகையினருகே வரும்பொழுதே தனக்குள்ளெண்ணிக்கொண்டு வந்ததாவது: "நமது யோகீச்வரி மந்திரித்தலைவருடன் மல்லிகையினது மணத்தின் விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கையிலேயே இச்சிமிழில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கின்ற திவ்யாம்பரம் தீவாந்தரத்தினின்றும் கொண்டுவரப்பட்டதென்றும் இத்துடன், மூர்ச்சையாய் விழுபவரைத் தெளிவிக்கவல்லவோர் ஸீமந்தமணியும் உண்டென்றும், இவ்விரண்டையும் ஓரவுணன் கைப்பற்றியிருந்தனன் என்றும் இத்தியாதி இரகசியங்களை அவ்யோகினியிடமிருந்து கேட்க அச்சமும் ஆச்சரியமுமுண்டாகின்றது. ஆகிலும் அச்சீமந்த மணியைமட்டும் காணேம். அது எங்குப்போயிற்றோ தெரியவில்லை. இப்பொழுது மல்லிகையை யுய்த்து நோக்குங்கால் ஏதோ கவலையுற்ற மனத்தினள் போல் தோற்றுகின்முள். பூமாலை பூண்ட மார்பினில் முத்துமாலை தலங்குகின்றது. மந்தாகினியம்மாளுரைத்த வண்ணமே இப்பொழுது இவளுடைய வடிவைப்பார்க்கையில் இவள் மாரனது கணைகளால் மொத்துண்டமனத்தனள் போல் காணப்படுகிமுள்.'' என்று மல்லிகையைக்கிட்டிவரும்போது மல்லிகை (தன்னுள்), "ஆ! முடவன் கொம்புத்தேனுக்கு அவாவினதுபோல் பெறற்கரிய வம்மஹாநுபாவனிடத்தில் என் மனம் ஏனிங்ஙனம் வீணாசையுற்றிருக்கின்றது?'' என்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே ஸாரஸிகையுற்று, "பகவதி யோகீச்வரியின் பூர்ண ஆசீர்வாதம்.'' எனவே, மல்லிகை, "யாருக்கு அம்மா ஸாரஸிகை?'' என்று மனதில் சந்தோஷத்துடன் வினவ, ஸாரஸிகை 'உனக்குத்தானம்மா, மல்லிகை; உன்னைத்தவிர்த்து வேறு யாரு

க்கு?" என்று மறுமொழி கூற, மல்லிகை, "நல்லது! ஸகி, ஸாரஸிகே, என் உட்காராமல் ஏதோ அவசரமாய்ச் செல்பவள்போல் ஒருகாலில் நிற்கின்றாய்?" என, ஸாரஸிகை, "ஸகி, மல்லிகே, நமது யோகீச்வரியின் கட்டளைப்படி இந்தச் சிமிழிலிருக்கும் பட்டாடையை உன்னிடம் அளிக்குமாறு பகவதியைத்தனியேவிட்டுவந்தேன். ஆதலின் அவள் பக்கல் பணிவிடை புரியுமாறு யான் ஆண்டுச்சீக்கிரம் செல்லவேண்டுமாதலால் இப்பொழுது சற்று உட்கார்ந்து உன்னுடன் ஸல்லாபஞ் செய்யக்கூட அவகாசமில்லை யென்பதைப்பற்றி மிகவும் விசனப்படுகின்றேன்." என்று சொல்லி அந்தத்தந்தக் கரண்டத்தை யவளிடம் அளிக்க, மல்லிகையும் வெகு மரியாதையுடன் அதனைப் பெற்றுக்கொண்டனள். அக்காலை நவமாலிகை ஸாரஸிகையைநோக்கி "ஸகி, ஸாரஸிகே, நாங்கள் தாரா கிருகத்திலிருக்கும் பொழுது பிரவாளிகை வந்து ஏதோ இரத்தினபதியென்னும் பெயரியவோர் வர்த்தகத்தலைவன் சிம்மளத்தீவினின்றும் தான் கொண்டுவந்த வோர் விலையுயர்ந்த பட்டாடையை நம் மந்திரித் தலைவர்க்கு நதிராகவளித்தாரென்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றாள். அதுதானேயிது?" என ஸாரஸிகை, "ஆம்! அதுவேதானிது" என்றாள். பின்னர் மல்லிகை ஸாரஸிகையை நோக்கி, "ஸகி, இப்பொழுது பகவதி எங்கு இருக்கின்றாள்?" என்று வினவ, ஸாரஸிகை, "நம்யோகினி யிப்பொழுது தமது அன்னையின் அந்தப்புரத்தில் தமது பிதா சம்பரகன் விஷயமாக ஏதோ சில வார்த்தைகள் சொல்லக்கேட்டுக் கொண்டிருக்கின்றாள்." எனவே, மல்லிகை மிக்க வெறுப்புடன் [தன்னுள்] "ஓகோ! சதிமதியன் சம்பரகனும் என்னை மணக்க முயலுகிறானா? அம்மாருதனைத்தவிர்த்து வேறொருவன் என்னை மனதினாலும் கருதக்கூடுமா?" என்று எண்ணிக்கொண்டு, மந்தாகினிபால் செல்ல துரிதப்படும் ஸாரஸிகைக்குச்செல்ல விடையளித்து, நவமாலிகையை நோக்கி, "ஸகி, சித்திரசாலைக்குச் சென்று சித்திர மெழுதுவதற்குவேண்டிய கருவிகளை யெடுத்து வரும்படி யேற்கெனவே சொல்லியிருந்தேன். நீயங்குப்போக யத்தனிக்கையில் ஸாரஸிகை யிங்குற்றதால் சிறிது தடை நேரிட்டது. நல்லது; இப்பொழுது அக்குற்றுப்பலகை முதலிய கருவிகளை யெடுத்துக்கொண்டுவா." என, நவமாலிகை, "ஸகி, பகவதி மந்தாகினி யனுப்பிய விப்பட்டாடையைச் சற்று பார்த்துவிட்டுச் செல்லுகின்றேன்." என்று ஆவலுடன் கேட்கவே, மல்லிகையும் அச்சிமிழைத் திறந்து பட்டாடையை யெடுத்துக் காண்பிக்க, நவமாலிகை யதனைக் கையால் தொட்டுப்பார்த்து ஆச்சரியத்துடன், "ஆகா! இளவாழைக் குருத்துப்போலிதன் பரிசம்

எத்துணை மிருதுவாயும் இலேசாயுமிருக்கின்றது! ஸகி, காளிந்தி, இதின் பரிமளம் நமது ஸகி மல்லிகையின் மார்பில் துலங்கின மல்லிகைமாலையினது மணம்போலவே யிருக்கின்றது பார்த்தனையோ?' என்றுரைத்து அத்துகூலத்தை நன்றாய்விரிக்கவே, காளிந்தி அதன் மூன்றானையில் ஓர் சித்திரமெழுதப்பட்டிருப்பதைக்கண்ணுற்று வியப்பெய்தி, நவமாலிகையை நோக்கி, "ஸகி, நவமாலிகே, இதோ! பார்த்தனையா இவ்வம்பரத்தின் தலைப்பில் ஓர் சித்திரமும் வரையப்பட்டிருக்கின்றது." என, நவமாலிகையதனை நன்கு உய்த்து நோக்கி, "ஸகி, கேவலம் சித்திரமட்டுமேயல்ல. காதுவரையில் நீண்ட கண்களையுடைய அக்கட்டழகனே இங்கு எழுதப்பட் டிருக்கின்றான்டி." எனவே, மல்லிகை யுடனேயதனைமிக்க ஆவலுடனுய்த்து நோக்கி, "ஆமடி! ஸகி, நவமாலிகே, அவரே தானடி! இதோ! பார்! இந்துவை ஏய்க்கும் வதனம் அதுவே; தாமரை யிதழைப் பழிக்கும் தடங்கண்களும் அவையே; கவாடம்போல் விசாலமான மார்புமதுவே; அதன் மேல் புனைந்த வழகினால் திகழும் ஆரமும் அதுவே; மரகத ஸ்தம்பங்களையொத்த புஜங்களுமவையே; மத்தகஜத்தின் துதிக்கைபோல் திகழும் தொடைகளு மவைகளே. ஆகில் அவர்க்கும் இவர்க்குமுள்ள பேதம் யாதெனில், அவர் இமைக்குங் கண்களையுடையவ ராதலின் மானிடன். இமையாக்கண்ணுடனிருப்பதாலிவர் திவ்ய புருஷன்." எனவே, நவமாலிகை புன்னகையுடன், "ஸகி, மல்லிகே, சித்திரத்திலும் கண்கள் இமைப்பதுண்டோ?" என, மல்லிகை, சிறிது வெட்கத்துடன், "ஓகோ! இது சித்திரந்தானா? யான் இதனை யுண்மையான மாருதனென்றே நினைத்துவிட்டேன்." என்றாள். அதற்குக் காளிந்தி, "வாஸ்தவந்தான். இப்படம் எழுதியவரின் கைலாகவத்தினாலும் தேர்ச்சியினாலுமிது யதார்த்தமான வுருவம்போல் தோற்றுகின்றது. ஆனதுபற்றியே நமது ஸகி யிதனை ஸாக்ஷாத் மாருதனென்றே யெண்ணிவிட்டாள்." என்றாள். பின்னர் நவமாலிகையதனை நன்கு உய்த்து நோக்கி, "ஸகி, காளிந்தி, இதனை நன்கு ஊகித்துப் பார்க்கில் இது நமது ஸகி மல்லிகையின் கையாலெழுதப்பட்ட சித்திரம்போலவே யிருக்கின்றது." என, மல்லிகையும் [தன்னுள்] "ஆம்; இது எனது கையாலெழுதப்பட்டது போலவேதான் தோன்றுகின்றது. அன்றியும் இதனையான் எப்பொழுதோ ஒரு சமயத்தில் எழுதினதாகவும் ஓர் நினைவுண்டாகின்றது." என்று எண்ணிக்கொண்டு (வெளிப்படையாய்), "ஸகிகாள், இப்படத்திலிருக்கும் மகாபுருஷனது முகக்குறிகளையும் வெளித்தோற்றத்தையுமுய்த்துநோக்குங்கால் ஏதோவொருபாக்கியவதியான பெண்மணியின்மீது பேராவல்

கொண்டு அப்பெருமாட்டியினது விரகதாபத்தால் மயங்கித் தியங்கி யிருப்பவர்போல் காணப்படுகிறது. ஏனெனில், இதோ! பாருங்கள் மேனியெங்கும் தபனனது கரம்பட்ட தாமரைத்தண்டு போல்துவண்டு சிறிது வெளுத்திருக்கின்றது. கோவைக்கனியை நிகர்த்தவதரங்கள் அடிக்கடி பெருமூச்செறிவதினால் குருவிந்த தளம்போல் நிறம் மாறி யிருக்கின்றது." என்றுரைத்த மீண்டும் மனதில் துயரத்துடன் புகன்றதாவது: "ஆ! எனது பிராண சகிகாள், இதுகாறும் நீங்கள் இனியவசனங்களாகிய நீரைவார்த்து வளர்த்துவந்த, மாருதன் மாட்டியொன்கொண்ட மனவேட்கையெனும் இளங்கொடியானது இப்பொழுது இச்சித்திரரூபமான மாருதனைக் காணவே வேருடன் வெட்டுண்டு போய்விட்டது. ஏனெனின், இவர் வேறொரு வனிதையின் மீது விருப்புற்றிருக்கின்றாரென்பதற்கு இவர் வடிவின் வெளித்தோற்றமேயறிகுறி. ஆகா! இவர் காமுற்றகட்டழகியின் காத்திரசௌந்தரியமும் வியக்கத்தக்கது என்பதற்கு, பால் போல் வெளுத்து பாலசந்திரன் போல் துலங்குமிவர் வடிவமே, வாய்மொழி யில்லாமலே விளங்கச்செய்யும் சாட்சியாயிருக்கின்றது. ஆகா! இங்ஙனம் இம் மஹான் அவாவுறத்தக்க வணங்கரசின் பாக்கியமே பாக்கியம்! ஆகிலும்இவர் இத்தகையவவஸ்தையுற்றிருக்கையிலும் எட்டுணையும் இளகாத அவள் மனம் கல்லே." என்றுரைத்து, மீண்டும் நெட்டுயிர்ப்புடன் தனது மனதை நோக்கி மொழிந்ததாவது: "ஆ எனது மதிகெட்டமானஸமே, மற்றொரு மாதினிடம் மையலுற்ற மனிதன் பால் மீளவும் ஏன் செல்லுகின்றனை? மிக்கமானியென்று வீணெண்ணங்கொண்டவுனது மனோரதம் முற்றும்மாண்டுங்கூடகுலமாதர்க்கணிகலமாகிய வெட்கத்தை யெங்குத்துறந்தனை? அல்லது, குற்றமற்றவுன்பேரில்குறை கூறுவதில் குணமென்? அரைக்கணமும் அவரைவிட்டுப்பெயராதிருக்குமாறு தனது கூர்மையானவம்புகளாலாணியறைந்த அனங்கனே இகழத்தக்கவன்." என்று சொல்லி மன்மதனைக்குறித்து (வானத்தை நோக்கிக்கொண்டு) "ஓ! மாரனேனும் தீரனே, ஏதுமறியாத பேதைகளாகிய வென்போன்றவவலைகளிடத்தில் உனது தோள் வலிமையைக் காண்பிக்கின்றாய். மதக்களிற்றின் துதிக்கைபோல் திரண்டு நீண்ட புயங்களையுடைய அம்மஹாநுபாவன் உனது வடிவழகை முற்றிலும் கொள்ளைகொண்டு உன்னுடன் மல்லுக்கு மார்தட்டிக்கொண்டிருக்கையிலும் அவரை யணுகக் கூசுகின்றனை. ஆனதுபற்றியே பிரளய காலாக்கினிபோல் பொசுக்குகின்ற நினது பாணங்கள் எனது மனதைப் பஸ்மமாகச்செய்த போதிலும் அம்மனதின் கண்ணே நிலைபெற்று நிற்கும் அப்புருட

சிங்கத்தைச் சிறிதேனும் நீண்டவில்லையன்றோ? அல்லது, உன்கணைகள் அவரையும் வருத்துகின்றனவே. ஏனெனில் இதோ! இப்படத்தைப்பார். இவரது கன்னங்களிரண்டும் வெளுத்து ஏதோவொரு கன்னிகைபால் இவர்க்கிருக்கும் அபிலாஷத்தை வெளியிடுகின்றன. என்று கண்களில் நீர்வடியப் பலவாறு பிதற்றவே, காளிந்தியும் மிக்க விரக்கத்துடன் நவமாலிகையை நோக்கி யுரைத்ததாவது "ஸகி, நவமாலிகே, நமது ஸகி மல்லிகை இப்பொழுது தனது வல்லபனது சித்திரத்தில் தோன்றும் சிலகுறிகளைக்கொண்டே அவர் மற்றொரு மாதரசி பால்மனவேட்கையுற்றிருக்கிறாரென்று சங்கித்து அதினால் தனக்கு உண்டானகோபம், விசனம், வெட்கம், வேட்கை முதலிய பலவிதவுணர்ச்சிகளைத்தனது நயனங்களால்தெரிவிக்கின்றனள் பார்த்தாயா?" என்றுரைத்து மல்லிகையை நோக்கி, "ஸகி, மல்லிகே, நீ சொல்லவேண்டியதெல்லாம் சொல்லி முடிந்தபக்ஷத்தில் யானும் சில மொழிகள் கூறுகின்றேன்; கேள். அஃது என்னவெனில்: நீ இச்சித்திரத்தை ஐயன் மாருதனது படமெனப் புகல்கின்றனை. ஆகிலும் என்புந்திக்கு அங்ஙனம் தோன்றவில்லை. யான் உளகிப்பது யாதெனில், சித்திரம் வரைவதில் மிகத்தேர்ச்சியடைந்த எவனோ ஒரு சில்பி அத்தொழிலில் தனக்கிருக்கும் சாமர்த்தியம் முழுவதையும் காண்பிக்குமாறு தன்மனதில் தோன்றியவாறு ஒரு ஆண் ரூபமான சித்திரத்தை எருதியிருக்கின்றான். அப்படத்தின் உருவம் குணாக்ஷர நியாயம்போல் ஐயன் மாருதனது சாயலை யொத்திருக்கின்றது என்பதே." என, மல்லிகை, "நீ சொல்வது சரியல்ல. இம்மஹாநுபாவன் மாட்டு மையலுற்ற எவளோ ஒரு கட்டழகி அவரது விரகதாபத்தால் வேதனையுற்று அத்தாபத்தைத் தணிக்குமாறு அவரது உருவத்தைத் தனது மேல்வஸ்திரத்தின் தலைப்பில் எழுதியிருக்கின்றாள் என்று புகல்வதன்றோ பொருந்தும். ஏனெனில், இதோ! இப்படத்தைப்பார். இதில் பலவிடங்களில் சிறிய கரிய புள்ளிகள் காணப்படுகின்றன. அவைகள் அம்மானேய் நோக்கி மிக்க துயரத்துடன் இப்படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அவளது மைதோய்ந்த விழிகளிரண்டினின்று முதிர்ந்த நீர்த்துளிகளல்லவா?" என்றாள்.

(இன்னும்வரும்).

மோ. க. சடகோபாசாரியார்.

# விப்ரம விஹாஸம்.

## இரண்டாவது அங்கம்.

### இரண்டாங்களம்.

கோற்கை நகரத்துக்கருணாகரன் வீட்டிற்கெதிரே
ஓர் பயிரங்கமான இடம்.

சிம்மளத்துக்கருணாகரன்.—நான் சுமுகனிடத்திற் கொடுத்த பணத்தை அவன் ஹயக்கிரீவ மந்திரத்தில் பத்திரமாய் வைத்துவிட்டு, நான் எங்கே இருக்கிறேனோ என்றறியுமாறு என்னைத்தேடிக்கொண்டுபோய் எங்கெங்கேயோ வெல்லாம் அலைந்து விட்டு இதோ என்னைநோக்கி வருகிறான்; அவன் கடைத்தெருவில் இருந்து என்னை விட்டுப் பிரிந்தது முதல் இதுவரையிற் சென்ற காலத்தையும், அதற்கேற்றபடியே அந்தச் சத்திரச் சொந்தக்காரன் என்னோடு அவனைப்பற்றி மொழிந்ததையும் நான் சீர்தூக்கிப் பார்க்கையில், இதற்குச் சற்று முன்னே அவனோடு நான் பேசியிருத்தல் சாத்திய மன்றாகும். இதோ, சுமுகனே நேரில் வந்து விட்டான். இதென்ன ஆச்சரியம்!

சிம்மளத்துச் சுமுகன் வருதல்.

ஐயா, சுமுகரே! வந்தீரா; வாரும், வாரும்; இன்னமும் உன் பிழைப்புப் பரிஹாஸமாய்த் தானிருக்கிறதோ என்ன? இன்னும் உதைவாங்கிக் கட்டிக்கொ

ள்ள வேண்டுமென்று உனக்கு ஆசையிருந்தால் முன் போலப் பரிஹாஸஞ் செய்யலாம். என்னடா பய லே! உனக்கு ஹயக்கிரீவ மந்திரந் தெரியாதா! நீ என் கையிலிருந்து முடிப்போடு வராகன் பையை வாங்கி க்கொண்டு போகவில்லையோ! உனது சீமாட்டியா எ ன்னை விட்டிற்கு உண்ணவரும்படி அழைத்தாள்! ல க்ஷ்மீ மந்திரமோ என் வீடு! நீ இப்படிக்கெல்லாம் தாறு மாருய்ப் பிதற்றினுயன்ருே? உனக்குப் பித்து ப்பிடித்திருந்ததா என்னடா சொல்லு.

சி. சுமு.—இதென்ன ஐயா! என்னென்னவோ விசித்திரமா ன கேள்விகளெல்லாம் கேட்கிறீர்! இதென்ன படாப் பெரும் பழி! இப்படிக்கெல்லாம் நான் தங்களோடு சொன்னது எப்போது?

சி. கரு.—எப்பொழுதா! இதற்குச் சற்று முன்னே தானே நீ இப்படிக்கெல்லாம் பேசினுய்; இன்னும் ஒரு நாழி கை நேரங்கூட ஆகவில்லையே.

சி. சுமு.—தாங்கள் என்னை இங்கிருந்து அனுப்பினது மு தல் இதுவரையில் தங்களை நான் பார்க்கவில்லை; தாங் கள் என்னிடங்கொடுத்த பணப்பையோடு நான் நேரி ல் ஹயக்கிரீவ மந்திரம்போய்ச் சேர்ந்தேன்.

சி. கரு.—அட, போக்கிரிப்பயலே! என்னடா முழுப் பூச ணிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கிருய்! நீ என்னேடு மொழிந்ததில், பணம் வாங்கினது யார் எ ன்றும், எவளோ அம்மாவின் சங்கதியையும், அவள் என்னை விருந்துக்கழைத்த வரிசையையும் பற்றிச் சொல்லவில்லையா! நீஅப்படிச் சொன்னதினுல் உன்னி டத்தில் எனக்கு மூண்ட கோபமுண்டாயிற் றென்ப தையும் நீ காணவில்லையோ?

சி. சுமு.—இதுவுமொரு நல்ல காலந்தானையா! இந்த மட்டு மாவது பரிஹாஸமாய்ப் பேசுகிறீரே! இதுவே போ தும்; நல்லதிருக்கட்டும்; ஒன்றுக்கொன்று பொருத்

தமில்லாதபடி பேசுகிறீரே; இதற்கென்ன காரணம்? திகைப்பூண்டை மிதித்துவிட்டு வந்தீரா என்ன?

சி. கரு.—இதற்குள்ளே தானே உனக்கு இத்தனை ஏச்சும் எகத்தாளமுமா? நான் இப்போது உன்னோடு பரிஹாஸஞ் செய்கிறேனென்றெண்ணுகின்றாயா என்ன? அடகெடுவாய், பேசாதே; வாயைமூடு; இன்னும் பூசை தருகிறேன்; அவற்றையும் வாங்கிக் கட்டிக்கொள். (என்று அவனைத் தடிக்கத் தடிக்கப் புடைத்தான்.)

சி. சுமு.—உங்கள் தெய்வத்தின்மேலாணை; என்னை இப்படி அடியாதேயுங்கள்; இதென்ன! வேடிக்கை வினையாகவே விளைந்து விட்டது; என்னத்திற்காக ஐயா என்னைத்தாங்கள் இவ்வாறு நையப் புடைக்கவேண்டும்?

சி. கரு.—அட, மடையா! நான் உன்னோடு எப்பொழுதாயினும் பரிஹாஸமாய் வேடிக்கையும் விளையாட்டுமாக வார்த்தை சொன்னதின் பலன் இப்பொழுது கைமேற்கிடைத்து விட்டது; நீயோ இப்பொழுது "பிடரிகொழுத்த ஆடு இடையனை மதியாது" என்றவண்ணமாய் இறுமாப்புக்கொண்டு என் முன்னின்று குதர்க்கம் பேச ஆரம்பித்து விட்டாய்; நீ இங்கிதந் தெரியாமலும், இது சமயம் இது அசமயம் என்று பாராமலும் ஏதோ வாயில் வந்தபடி யெல்லாம் கட்குடித்தவன் போல் பிதற்ற ஆரம்பித்திருக்கிறாய்? காலமும் குறிப்பு மறிந்து யஜமானனது நோக்கத்தை யநுசரித்துச் சரியாய் நடப்பதல்லவோ பணியாளனுக் கழகாகும்; நீ இவற்றுள் ஒன்றையுமே யுணராது இன்னமும் பரிஹாஸம் பண்ணப்புகின் உனது மண்டையை உடைத்து விடுவேன்.

சி. சுமு.—என் மண்டையையா உடைத்து விடப்போகின்றீர்கள்? அப்படிச் செய்யின் மூளைகலங்கிப் போமாதலால், என் தலையைக் கோட்டைக்குக் கொத்தளம் அரணுவதுபோல ஏற்றச்சாலால் மூடிக்கொள்ளுகிறே

ன்; நான் அப்படிக்குச்செய்துகொள்ளாவிடினென்மூளைகலங்கிப்புத்தி பிடரியிற்சென்றுவிடும்; நல்லதிருக்கட்டும்; தாங்களென்னையடிப்பதற்கென்னகாரணம்?

சி. கரு.—அந்தக் காரணம் இன்னதென்று உனக்கு இன்னமும் தெரியவில்லையோ?

சி. சுமு.—நான் அடிபட்டது தான் எனக்குத் தெரியும்? மற்றப்படி வேறொன்றுந்தெரியாது?

சி. கரு.—'ஏன்' என்பதற்கு நான் காரணஞ்சொல்லட்டுமா?

சி. சுமு.—ஆம் ஐயா! 'ஏன்'என்பதற்கும் 'என்ன காரணத்திற்காக' வென்பதற்கும் விடையளிக்கவேண்டாமோ?

சி. கரு.—முதல் வினாவாகிய 'ஏன்' என்றதற்கு, நீ என்னை மதியாமல் பழித்ததற்காகவும், இரண்டாவது வினாவாகிய "என்னகாரணத்திற்காக" என்பதற்கு, நான் சொன்னதையுங் கேளாமல் மீண்டும் நீ பிடித்த பிடியை விடாமலே என்னோடு வீம்பு பாராட்டிச் சொன்னதற்காகவுந்தான்.

சி. சுமு.—இவ்வண்ணங் காரணமொன்றுமின்றி அடிதின்றவன் என்னைப்போல இப்புவியில் வேறு எவனாவது உண்டோ சொல்லுமையா; நல்லது அது போனால் போகட்டும்; தங்களை வந்தனஞ் செய்கிறேனையா?

சி. கரு.—அப்பா, என்னையா வந்தனஞ் செய்கிறாய்? என்னத்திற்காகவடா.

சி. சுமு.—ஒன்றுமே இல்லாததற்காக ஏதோ எனக்குக் கொடுத்தீர்களல்லவா? அதற்காகத்தான்.

சி. கரு.—இதைப்பற்றி, இதற்கு அடுத்த முறையில் நீ ஏதாவது எனக்குக் கொடுப்பதாயிருந்தால் அதற்காக நான் ஒன்றையுமே உனக்குக் கொடாதபடி செய்துவிடுகிறேன்; அது போகட்டும்; நாம் எப்போதடா போஜனஞ் செய்கிறது?

சி. சுமு.—ஐயா! உண்பதற்கு இன்னுஞ் சற்று நேரம் பிடிக்கும்; ரொட்டி இன்னும் மிருதுவாக்கப்படவில்லை.

சி. கரு.—அதற்காகவென்ன செய்ய வேண்டுமடா?

சி. சுமு.—அதை எனக்கு நடந்தபடிஅடித்துத்தட்டிக்கொட்டிப்பின்பு வெண்ணெய்தடவிப்பதமாக்கவேண்டும்.

சி. கரு.—நல்லது, அப்படிச் செய்யாவிட்டால் என்ன?

சி. சுமு.—அது கெட்டியாயிருந்தால் தாங்களதை உண்பது கூடாது.

சி. கரு.—அதைச் சாப்பிட்டால் என்ன? கூடாது என்பதற்கு என்ன காரணம்?

சி. சுமு.—அதை உண்பீராயின், அது தங்களுக்கு இன்னமும் மிக்க சிற்றத்தை யுண்டுபண்ணும்; அதனால் நான் மீண்டும் தங்களிடமிருந்து சுடச் சுட அப்பம் வாங்கித்தின்று, அது புண்ணாகி, அதற்கும் நான் வெண்ணெய்தடவ வேண்டிவரும்.

சி. கரு.—அட, முட்டாளே! நீ என்னோடு இப்படி பரிஹாஸஞ் செய்வதற்கு இதுகாலமல்லவடா; வீணே என்னோடு இப்படி விதண்டாவாதஞ் செய்யாதே; அதற்கேற்ற காலமுண்டு.

சி. சுமு.—ஐயா! இப்படிக்கென்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால், உமது கருத்தையறிந்து நான் அப்பொழுதே இல்லை யென்று மறுத்திருப்பேன்.

சி. கரு.—அதற்கென்ன விதி?

சி. சுமு.—காலம் என்கிற கிழவனாரினுடைய தலை எப்படி மொட்டையாய் மயிரின்றி வழுக்கைத்தலையென்பது நிச்சயமோ அப்படியேதான் இதுவும்.

சி. கரு.—அதெப்படியடா சுமுகா? அதை எனக்கு நீ தெரியச் சொல்லு பார்ப்போம்.

சி. சுமு.—ஒருவனுக்குத் தலைமயிர் இயல்பாகவேஉதிர்ந்து, அவன் வழுக்கைத் தலையனானால், மீண்டும் அவன் தலையில் மயிர் முளைப்பதில்லை.

சி. கரு.—அதற்குப் பரிகாரமாய் அவன் அபராதங் கட்டினால் அவன் முன்போல மயிரைப் பெறானோ?

சுமு.—விலைகொடுத்தால் பொய்த்தலைமயிர்தான் கிடைக்கும் அன்றியும், மற்றையமனிதரின் தலையினிழிந்தமயிரை யும் பெறலாம்.

கரு.—இப்படிக்குக் காலத்திற்கு வந்த கேடுதான் என்ன? மயிரைக்கொடுக்கும்விஷயத்தில் அது அத்தனைகார்ப் பண்ய முடையதோ? காலத்திற்கு, மயிருக்கென்ன அத்தனை பஞ்சமோ?

சுமு.—அது மிருகங்களுக்கெல்லாம் வேண்டிய மட்டும் மயி ரைத்தருகிறது; மனிதர்களுக்குமட்டுந்தான் மயிருக் குப்பதிலாகப்புத்தியை அதிகமாகக் கொடுக்கிறது.

கரு.—அது சிலருக்குப்புத்தியைவிட மயிரைமட்டும் அதிக மாகக் கொடுப்பதேன்?

சுமு.—இந்த உண்மையையாருமறிந்திருக்கையிலும், எவ னுக்காவது, புத்தியிருந்தாற்போதும்; தன்னுடைய மயிர்போனாலும்போகட்டும் என்று தோற்றுகிறதில்லை.

கரு.—இதனால் மயிரை அதிகமாக உடையவர்கள் புத்திக் குறைவினால் எதையும் கள்ளங் கபடமின்றிச் செய்கி றார்களென்றே தீர்மானித்தாய்?

சுமு.—அப்படிக்கிருந்தும் தலையில் மயிரேயில்லாதபடி மழு ங்க மழித்துவிடுகிறவர்களுக்கு அதனால் அதிகமனவ ருத்த முண்டாகாமல் ஓர்வகையான சந்தோஷமுண் டாகின்றது.

கரு.—அதற்கென்ன காரணம்?

சுமு.—அதற்கிரண்டு காரணங்களுண்டு; அவ்விரண்டும் சரி யான காரணங்களேயாம்.

கரு.—நீ சொல்லும் வண்ணம் அவை சரியான காரணங்க ளல்லவே யல்ல.

சுமு.—அப்படிக்கானால் அவை நிச்சயமானவைகள்.

கரு.—கீழே உதிர்ந்து பொய்த்துப்போகிற பதார்த்தத்தில் நிச்சய புத்தி எப்படி யுண்டாகும்?

சி. சுமு.—நிச்சயமென்பதற்கு இரண்டு காரணங்களுண்டு.

சி. கரு.—அக்காரணங்களெவை?

சி. சுமு.—நாவிதனுக்கு க்ஷவரஞ் செய்வதற்கென்று கூலி கொடாமலிருப்பதொன்று; நாமுண்ணுமுணவில், கத்திரிக்கபட்ட தலைமயிர்த் துணுக்கைகள் உதிர்ந்துவிழுந்து, அதனைக்கெடுத்துவிடாமலிருப்பது மற்றொன்று.

சி. கரு.—நீ இத்தனை நேரமளவும் என்னோடு வாதஞ்செய்ததில் ஒன்றிற்கேனும் காலமில்லை யென்பதை நிலைநிறுத்தினையன்றோ?

சி. சுமு.—ஆம், ஐயா! ஆம்; இயல்பாகவே உதிர்ந்துபோன மயிருக்கு மீண்டும் முளைப்பதற்குக் காலமில்லை யென்பதையும் இதனாற் கண்டுகொண்டீரல்லவா?

சி. கரு.—ஆயினும் நீ சொல்லும் காரணம் ஒத்திருக்கவில்லை; மீண்டும் அதனைப்பெற ஏன் காலமில்லாமற் போகவேண்டும்?

சி. சுமு.—அதை அவ்வாறின்றி, இப்படிக்கு மாற்றிச் சொன்னால் பொருத்தமாயிருக்குமென்று எண்ணுகிறேன்.—காலமென்பதே வழுக்கைத் தலைக்கிழவன்; ஆதலினால் இவ்வுலகம் பொன்றுமளவும் எல்லாருமே இழுக்குடையவர்களாய் வழுக்கைத்தலைக்காலக் கிழவனின் சீடர்களாய் அவர் செல்லும் வழியையே பின் பற்றுவார்களென்றே யெண்ணுகிறேன்.

சி. சுமு.—இதென்ன! வழுக்கைத்தலைச் சித்தாந்த மாயிருக்கிறது; சற்றுப்பொறு பார்ப்போம். எதிரே யாரோ நம்மைச் சுட்டி யழைக்கின்றாற்போலக் காண்கின்றது! அது யாரென்று பார்ப்போம்.

காஞ்சன மாலையும், மோஹனாங்கியும் வருதல்.

காஞ்சன மாலை.—அஹோ! என்ன ஆச்சர்யங் கருணைகரரே! தங்களுக்கேன் என் மீது இத்தனை உபேக்ஷை? தாங்கள் இன்னும் வேறு எவள் மீது காதல்கொண்டு என்னை இப்படி மறந்துவிட்டீர்; யான் காஞ்சனமாலையு

மல்ல; பல்லோரறியப் பல்லிய முழங்க நல்லோரை யிற் றுங்களென்னைக் கைப்பிடித்துக் கலியாணஞ்செய்துகொண்ட காதலியுமல்ல. என்றோ சொல்லுகிறீர்? நாமிருவரும் தேனும் பாலும் போலிருந்த காலத்தில் தாங்கள் தடையின்றி என்னை நோக்கி. "பெண்ணணங்கே! உனது தீங்கனிவாய்த் தேன்மொழிகள், குழல், யாழ் இவற்றின் இன்னிசையினும் எனக்கினியன" என்றும், சிற்றிடை மடநல்லாய்! "இரதி தேவியாரைப்போன்ற உனது கட்டழகைக் கண்டுகளித்த என் கண்கள் மற்றொன்றைக்காணப் பெறா" என்றும், "பிடிநடைப்பாவாய்! உனது செங்காந்தள் மலர்க்கரங்களைப் பிடித்துற்றுணர்ந்த என் கைகள் வேறொன்றைத்தொடவிரும்பா" என்றும், "திருவின் நல்லாளே! நீ என் கையி லெடுத்துண்பித்த அக்காரங்கலந்த நெய்யுடைப் பாலன்னத்திற்கு அமிர்தமும் ஒவ்வாது" என்றுஞ் சொல்லி எனது உயிர்க்குயிராக இருந்த அந்தக்காலமெல்லாம் இப்பொழுது எங்கே போடியொளிந்து போயிற்று? தாங்கள் இது பொழுது தங்களை விட்டுப் பிரிந்து போனீர்களே! அது தகுமோ? அஃதெவ்வாறெனில், தங்களையின்றி யான் வேறுவேனோ? எனது பிராணநாதா! என்னைத்தனியே விட்டுத் தாங்கள் பிரிந்து போதல் தங்களுக்குத் தருமமன்றாகும். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்கட்கதிபரான முறையுடைத் தேவர்கள் மூவர்களும் எவ்வண்ணம் தங்கள் பத்தினிமார்களாகிய ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி என்ற தேவிமார்களை முறையே நாவிலும், ஆகத்திலும், பாகத்திலும் கணமேனும் விட்டுப் பிரியாதுவைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார்களோ அவ்வண்ணமே நீரும் என்னை விட்டு இணை பிரியாதிருத்தல் வேண்டும். நானோ பிரிவாற்ற வல்லேனல்லேன் என்பதைத் தாங்களறியாததன்

று. என்மனம் அயலாரிடஞ் சென்று நான் வியபசாரி யானேனென்று தாங்கள் கண்டால் அதனுல் தங்கள் மனம் என்ன பாடுபடாது? இந்த தேகத்தைத் தங்களுடையதென்று நான் முன்பே தங்களுக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டேன். ஆதலால், தங்களுக்கு நேர்ந்த வியபசாரதோஷமானது என்னையும் பற்றிக்கொண்டதாகும்; ஆதலினுல், தாங்கள் என் முகாவலோகனஞ் செய்யாதிருத்தலும், என் முகத்தில் காரியுமிழ்ந்து என்னை வீட்டிற்குப் புறம்பே போக்குதலும் நியாயமேயாம். தாங்களும் அப்படியே செய்வீர்களென்பதை யான் அறிவேன். ஆதலினுல், தாங்கள் அப்படியே செய்து விடலாம். எனக்குத் தங்கள் கூட்டுறவினுல் இது பொழுது கற்பு நிலைமையினின்று நழுவினேன் என்பதற்கையமில்லை. அஃதெப்படியென்பீராயின், நாம் இருவருஞ் சேர்ந்து ஒன்ருனோம்; நம்முள் தங்களுக்கு அயற்பெண்டிரின் ஸம்ஸர்க்கம் நேர்ந்தபடியால், அந்த தோஷம் ஒட்டுவாரொட்டி நோயைப்போலத் தங்கள் ரக்தத்தின் வழியாகஎன்னுடம்பிலும் ஊறி நானும் தங்களைப்போலாய் அதிற்பாதியைத் தங்களோடு பங்கிட்டுக் கொண்டவளாகின்றேன். ஆதலினுற் றங்களைச் சரணமென்றடைந்த மனையாளைக் காப்பாற்றல் வேண்டும். நானே தங்கள் விஷயத்தில் எள்ளென்ருலெண்ணெயாய் நிற்கும் குற்றமொன்றேனு மில்லாத கற்புடைக்காதன் மனைவி; தாங்களோவெனில், கொடுபடாத பெருங்கீர்த்தியையுடைய கருணைவள்ளல்.

சி. கரு.—மடநல்லாய்! நீ என்னேடா இப்படிக் கெல்லாம் உரையாடுகின்ருய்? உனது வாண்முகத்தை நான் இதற்குமுன் என்றைக்கேனும் கண்டதுண்டோ சொல்லு? நான் இந்தக் கொற்கை நகரத்துக்குள்ளே வந்து நுழைந்து இன்னும் நாலைந்து நாழிகை நேரங்

கூட ஆகவில்லையே; எனக்கு இந்த நகரமும் புதிது; நீ சொல்லுவதும் அப்படித்தான்; நான் என்னுவிய ன்றமட்டும் உன்னி யுன்னிச் சீர்தூக்கிப் பார்க்கிறே னென்றாலும், நீ மொழிகின்ற வார்த்தைகளுள் ஒன்ற ற்காயிலும் எனக்குப்பொருள் விளங்கவில்லை!

மோகனாங்கி.—மைத்துனரே! இதென்ன என்றுமில்லாத விபரீத வார்த்தை! கலிபுருஷன் கிட்டிவிட்டானா என் ன? எனது தமக்கையார் மனம் நோவத் தாங்கள் எ ப்பொழுதேனும் அவரை இவ்வாறு உதாசீனமாகப் பேசினது கிடையாதல்லவா? தமக்கையார் தங்களைப் போஜனஞ் செய்வதற்காக வீட்டிற் கழைத்து வரும் படி நமது சுமுகனை யனுப்பி யிருந்தார்.

சி. கரு.—இந்தச் சுமுகனையோ?

சி. சுமு.—என்னையா அம்மா?

சி. கரு.—சுமுகா! இந்தச் சிமாட்டியாரோடு நீ சம்பாஷணை ஞ்செய்த துண்டா இல்லையா? நீ இவரோடு பேசிக் கொண்டிருந்த சங்கதிதான் என்ன?

சி. சுமு.—நான் இந்த நிமிஷமளவும் இந்த அம்மணியின் முகத்தைப் பார்த்ததுமில்லை ஆண்டவனே.

சி. கரு.—அட, பாவி! "நேர்நின்று காக்கை வெளிதென் பார் என்சொலார்," என்றாற்போல என்னடா பொ ய்ம்மொழி புகலுகின்றாய்? நான் கடைத்தெருவில் இருக்கையில் நீ என்னிடம் ஓடிவந்து என்னோடு இந் தமாது சொன்ன வார்த்தைகளை யெல்லாம் பன்னிப் பன்னிச் சொல்ல வில்லையோ?

சி. சுமு.—ஐயா! இதென்ன பேரிடி! என்னுடைய ஆயுள் நாளில் இது வரையிலும் நான் இந்தச் சிமாட்டியின் முகத்தைக் கண்டதில்லை.

சி. கரு.—அப்படிக்கென்றால் இம்மாதரசிக்கு உன்பேரும் என்பேருமெப்படித்தெரிந்திருக்கும்! ஒருக்கால், மகநி

ணி வித்தையினால் இந்தச்சுந்தரியறிந்திருக்கலாமோ!

**காஞ்சனமாலை.**—சுவாமி! தாங்களும் இந்த வேலையாளனோடு சேர்ந்துகொண்டு என்னை நோக்கி இந்த வார்த்தைகளைச் சொல்லுதல் தங்கள் பெருந்தன்மைக் கழகாமோ? தாங்கள் வேண்டுமென்று என்னைக்கெடுத்துவிடுவதற்காகவே இவனோடு முன்பே பொற்றுமையாகப் பேசிக்கொண்டு இப்படிச் சொல்லுவதாகக் காண்கிறது. ஒருக்கால், நானே குற்றஞ்செய்திருப்பதாக எண்ணினும், தாங்கள் இந்தப் பேதையை வயறெரியக்கண்டு அநியாயமாக இப்படி யகற்றிவிடப் பார்ப்பது கூடாது; இதையொரு குற்றமென்று மனத்திற்



கொண்டு அதற்காக என்னை விலக்கிவிட ஒண்ணுதென் துரையே! தாங்களோ எனக்கொரு தேமா; நான் அந்தத் தேமா மரத்தைக் கொள்கொம்பாகக்கொண்டு, அதன் மேல் ஆனந்தமாக ஏறிப்படர்ந்து தளிர்த்து அரும்பிப் புஷ்பிக்கின்ற மல்லிகைக்கொடி. நானோ பேதை; கற்பகத் தருவைச் சார்வாரைப்போல நான் தங்களையண்டி யிருப்பவள்; தங்களைச் சரணமென்றடைந்திருக்கின்றவளைக் கைவிடாது காப்பாற்றுதல் தங்களைப் பொறுத்த கடனாகும். தேமாவின்மேல் மல்லிகைக் கொடிதாவிப் படர்கையில், அதனோடு பயனில்லாதனவாகிய புல்லுருவி, பாசி, முதலிய சிறுகொடிகள் படர்ந்தாலும் அவற்றால் அம்மரத்துக்குக் கேடுண்டாகாதபடி அவற்றை யெல்லாம் நீக்கிக் களைந்தெறிவதைப்போலத் தாங்களும் அவர்களை நீக்கிக் களைந்துவிட்டு என்னைக்காத்தலே மனைமாட்சிக் கழகாகும்.

சி. கரு.—இம்மாது என்னை நோக்கியோ பேசுகின்றாள்! என்னோடுதான் நேரிலிவள் உரையாடுகின்றாள் போலிருக்கின்றதே; இதென்ன ஆச்சரியம்! நான் இம்மடமாதைக் கனவிலேதான் மணந்தேனோ! அல்லது, தூங்கும் போதுதான் மணம் புரிந்தேனோ! இவையனைத்தும் கண்ணிற்கெதிரே நடக்கின்றது போலல்லவா இருக்கின்றது! இந்தப் பொய்யை நான் மெய்யென்று காணுமளவும், மெய்யென்றே நினைத்துச் சிறிது நேரஞ் சுகமாகவிருக்கிறேன்.

மோகனாங்கி.—சுமுகா! நீ உள்ளே சென்று பணியாளனோடு சொல்லிச் சீக்கிரத்தில் போஜன சாலையில் இலை போட்டு அன்னம் பரிமாறச் சொல்லடா.

சி. சுமு.—ஓகோ! பாவியேனுக்கு என்னென்ன ஆபத்தின் மேல் ஆபத்து வந்து விட்டது. இனிமேல்

"आपदामपहर्तारं दातारं सर्वसंपदाम् ।
लोकाभिरामं श्रीरामं भूयो भूयो नमाम्यहम् ॥"

"ஆபதாம் அபஹர்த்தாரம், தாதாரம் ஸர்வஸம்பதாம்,
லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யகம்"
என்றபடி ஸ்ரீராமபிரான் விஷயமான ஆபதுத்தாரண மந்திரத்தை ஜபித்துத் தோத்திரஞ் செய்து தான் தப்பிப் பிழைக்க வழிதேடவேண்டும்; இது என்ன பொல்லாக் கொடுமை; இந்நகர முழுவதுமே சாகினி, டாகினி, காளி, கூளி, ரக்ஷஸ், யக்ஷஸ், முதலிய பேய், பிசாசங்களால் குடிகொண்டிருக்கிறாப் போலக் காண்கிறது. நான் இவை சொன்ன வண்ணஞ் செய்யாவிடில் இவையென்னைக் கொன்று என் ரக்தத்தை உறிஞ்சி என்னைப் படாதபாடு படுத்தி வைத்துப்பேயாட்டமாட்டி அலங்கோலமாக்குவது நிச்சயம்.

மோகனாங்கி.—சுமுகா! என்னடா உன்பாட்டில் தாறுமாறாக என்னென்னவோ பிதற்றிக்கொண்டிருக்கின்றாய். இன்றைக்கு உனக்கு வந்த கேடென்ன? சி. சீ. முட்டாளே, குடியா, தடியா, மடையா, கடையா! நான்கேட்பதற்குப் பதில் கூடச் சொல்லாமல் என்னடா மரம்போல நிற்கின்றாய்?

சி. சுமு.—ஐயா, நான் உருவம் மாறியிருக்கிறேனே இல்லையோ; என்னைச் சற்றே பார்த்துச் சொல்லுமே.

சி. கரு.—நீ வேற்றுருவாகவில்லை; உன் புத்தி மட்டுந்தான் மாறியிருக்கிறது; எனக்கும் உன்னைப் போலத்தான் ஆயிற்றடா அப்பா.

சி. சுமு.—நம்மிருவருக்கும் புத்திமாறி யிருக்கிறதென்பது நிச்சயமே. எனக்கு மாத்திரம் உருவமும் மாறித்தானிருக்கிறது.

சி. கரு.—சுமுகா! அப்படிக்கல்லவடா; உனது உருவம் இன்னும் மாறவில்லை.

சி. சுமு.—இல்லையையா; நான் இப்போ வாலில்லாக் குரங்காகி விட்டேன்,

மோகனாங்கி.—சுமுகா! நீ வேற்றுருவ முடையவனாக விரு ப்பின் அது கழுதையுருவந் தானடா.

சி. சுமு.—சரி, சரி; நான் கர்த்தபவாகனமாகவா வானே ன்? இனிமேல் நான் புல்லைத்தான் கடித்துண்டு காலந் தள்ளவேண்டும். நான் கழுதையாக மாறியிராவிடில் இவள் மட்டும் என்னை யறிந்திருப்பானேன்? எனக் கேன் இவளைத் தெரியாமலிருக்கவேண்டும்?

காஞ்சனமாலை.—அம்மா, மோகனாங்கி! நாம் போஜனஞ் செய்யப்போகலாம் வா; யஜமானனும் வேலையாளனும் நான் படுகின்ற அவஸ்தையைக்கண்டு நகைத்துப் பரி ஹாஸம் பண்ணுவதைப் பார்த்துக் கண்ணைப் பொத் திக் கொண்டிருக்கும்படி நான் அத்தனை அவிவேகிய ல்ல; சுமுகா! நீ வாசற்படி யிலிருந்துகொண்டு பத்திர மாய்க் காத்திரு; சுவாமி! தாமஸமேன்? தாங்கள் அ முது செய்ய உள்ளே வரலாம். இன்று நாம் இரண் டாவது நிலைமாடத்தில் உண்போம் வாருங்கள்; தங் களுக்கு நான் அங்கே சிரிக்கச் சிரிக்க நமக்குள்ளே நடந்த பலரகஸ்ய ஸங்கதிகளைச் சொல்லித் தங்கள் வாய்மொழியைக் கொண்டே அவற்றையெல்லாம் ஒ ப்புக்கொள்ளும்படிச் செய்கின்றேன் பாருங்கள்; சுமு கா! யாராவது உன்னை யஜமானன் எங்கே யென்று கேட்டால், இது போஜன வேளையென்றும், யாராயி ருப்பினும் உள்ளே போவதற்கிது சமய மன்றென்றும் கண்டித்துப் போகச்சொல்லு; ஒருவரையும் உள்ளே விடாதே; மோகனாங்கி! வா அம்மா! உள்ளே போ வோம். சுமுகா! வாசலைக் காப்பதில் ஸர்வஜாக்கிரதை யுள்ளவனாகவிரு.

சி. கரு.—நானிருப்பது பூலோகமோ; அல்லது சுவர்க்கலோ கமோ; அல்லது நரகந்தானோ; இப்பொழுது தூங்கு கிறேனோ; அல்லது நடக்கிறேனோ; எனக்குப் பித்து ப்பிடித்திருக்கிறதோ; அன்றேல் நல்ல நினைவோடு தா

ன் இருக்கிறேனே? இங்கிருப்பவர்கள் எல்லோருக்குமே என்னை நன்றாய்த் தெரிந்திருக்கிறது! எனக்கோ இங்கிருப்பவர்களுள் ஒருவரையேனுந் தெரியவில்லை. ஆதலால், இவர்கள் சொல்லென்றபடி யெல்லாஞ்சொல்லி, என்னாலியலுமளவும் இவர்கள் இஷ்டப்படி நடக்கப் பார்க்கிறேன்; நல்லதிருக்கட்டும்; நடக்கிறபடி யெல்லாம் நடக்கட்டும் தலைவிதிக்கென்ன செய்யலாம்.

சி. சுமு.—ஐயா! நான் தலைவாயிலிற்காத்திருக்கட்டுமா?

காஞ்சனமாலை.—சுமுகா! நீ ஒருவரையும் உள்ளே விடக்கூடாது; விடுவையாயின் உன் தலையைப் பிளந்து விடுவேன்.

மோகனாங்கி.—வாருங்கள் ஐயா மைத்துனரே! இன்று நாம் நெடுநேரம் கழித்து வேளைதப்பிய வேளையில் உண்கின்றோம் பார்த்தீர்களா! (என்று போய்விட்டாள்).

இரண்டாவது அங்கம்

இரண்டாவது களம் முற்றிற்று.

# ஆத்மவித்யாவிலாஸம்.

நாம் இப்பொழுது ஸ்தூலப் பிரபஞ்சத்தின் இயற்கையைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிற சாஸ்திரஜ்ஞர்களுடைய புத்திக்கு எட்டியபடி பிரகிருதிப் பொருளை ஈதர் என்னும் நிலைமை வரையில் ஒருவாறாகக் கொண்டுபோய் நிறுத்தினோம். ஆனால் அந்த நிலைமையில் இருக்கும் பொருள்களை அநுமானத்தாலன்றிக் காட்சிப்பிரமாணத்தால் அவர்கள் அறிந்ததில்லை. அதி நுட்பமான வஸ்துவையும் எத்தனையோ மடங்கு பெரிதாகக் காட்டக்கூடிய ஸூக்ஷ்மதர்சனி என்னும் ஓர் கருவியைக்கொண்டு உற்று நோக்கினாலும் கநத்திரவ நிலைமைகளில் இருக்கின்ற மூலதாதுக்களின் ஸூக்ஷ்ம அம்சங்களைப் பெருங்கூட்டணுக்களாகத் தான் நாம் காணக்கூடும். ஆதலால் அவற்றின் பரமாணுக்களும் வாயுத்திரவங்களின் பரமாணுக்களும் கூடப் பிரத்தியக்ஷத்திற்குக் கோசரமாவதில்லை என்பது ரஸாயன சாஸ்திரிகளது துணிபாம்.

நமது ஸ்தூலசரீரத்திலுள்ள இந்திரியக்கருவிகளின் உதவியால் பிரத்தியக்ஷமாய் நாம் அறியக்கூடியவை எல்லாம் உற்பூதமான உருவத்தையும் பரிசத்தையும் உடைய கநத்திரவப்பொருள்களேயாம். வாயுவடிவமான பொருள்களைக்கூட வெளிப்படையான சில ஹேதுக்களைக்கொண்டு அநுமானிக்கத்தான் நம்மாலாகிறது. நமக்கு இந்த ஸ்தூல சரீரத்தைத் தவிர்த்து ஒன்றுக்குள் ஒன்று உள்ளும் புறம்பும் வியாபித்துக்கொண்டு ஸூக்ஷ்மமாக விளங்குகிற சில சரீரங்கள் உண்டு. அவற்றுள் இந்திரியங்களுக்கே முக்கிய

ஆசிரயமான சரீரமும் ஒன்று. உலகவியாபாரத்திலேயே காலத்தைக் கழித்து வருகிற நம்மைப்போன்ற ஸாமானிய ஜனங்களுக்கு இந்த ஸ்தூலசரீரத்தை விட்டு அந்த ஸூக்ஷ்மசரீரத்தில் நின்று புறப்பொருள்களைக்கவனித்துப் பார்க்கச் சக்தியில்லை. அப்படி நின்று கவனிப்போமாகில் நாம் அநுமானத்தால் ஒருவாறாக அறியும் பொருள் களேயன்றி நினைத்துமிராத பற்பல பொருள்களையும் நேருக்கு நேராகக் காணலாம். அவ்வண்ணமே ஸூக்ஷ்ம தரமாகவும் ஸூக்ஷ்மதமமாகவும் இருக்கிற சரீரங் களுக்குச் செல்லச் செல்ல விஷயங்களைக் கிரஹிக்கும் சக்தி அதிகப்படுகின்றது. சாஸ்திரங்களிற் கூறியவைகளை உபதேசக்கிரமத்தால் அறிந்து அப்பியாசத்திற்குக்கொண் டு வந்தாலல்லாது அவைகள் நமது அநுபவத்திற்கு வாரா வாம். நம்முடைய மனம் வாக்கு காயம் இம்மூன்றும் சுத்தப்படுமாயின் அவ்வுபதேசம் நாம் எதிர்பாராமலே நமக்குக் கிடைக்கும். அந்த நுட்பம் அறியாமல் நம்முட் பலரும் அவ்விதமான விஷயங்களை அலக்ஷியம் செய்து வருகின்றோம்.

இது நிற்க முதற்கூறிய ஸூக்ஷ்மசரீரத்தில் நின்று வஸ்துக்களைப் பார்க்க வல்லவர்கள் ஸ்தூலப்பிரபஞ்சம் எங்கிலும் நமது திருஷ்டிக்குப் புலப்படாமலே வியாபித்து நிற்கிற ஈதர் என்னும் பொருளைக் கவனித்துப்பார்த்ததில் அது ஒன்றைவிட ஒன்று அதிக ஸூக்ஷ்மமாய் நான்கு நிலைமைகளில் இருப்பதாகக்கூறுகின்றனர். தினந்தோறும் நமது உபயோகத்திலிருக்கும் ஜலத்தில் மின்ஸாரசக் தியைப் பிரயோகித்தால் அது ஆக்ஸிஜன் ஹைட்ரோஜன் என்னும் இரண்டு வாயுப்பொருள்களாகப் பிரிகின்றது. அவ்விரண்டையும் அளந்து பார்க்கும்போது ஆக்ஸிஜன் ஒருபங்கும் ஹைட்ரோஜன் இரண்டுபங்குமாக இருக்கும். ஒரே பரிமாணத்தில் இவ்விரண்டு வாயுக்களையும் வெவ் வேறாக எடுத்துத் தராசில் தூக்கும் பக்ஷத்தில் எடைமா

னத்தில் ஹைட்ரோஜன் ஒரு பங்கும் ஆக்ஸிஜன் பதி னாறு பங்கும் ஆகின்றது. இந்த பேதம் முதன் முதலில் அவற்றின் பரமாணுக்களில் ஏற்பட்டிருக்க வேண்டும். மூலதாதுக்கள் எல்லாவற்றினும் ஹைட்ரோஜன் மிக இலேசானது. ஆகவே அதன் பரமாணுமானத்தை அள வாகக் கொண்டு மற்ற மூலதாதுக்களின் பரமாணுமானத் தையும் நிர்ணயிக்கவேண்டியதாயிற்று. இப்படி ஒவ்வொரு மூலதாதுவின் பரமாணு வகுப்புக்களில் வேறுவேறாய் அமைந்து கிடக்கிற குணங்களும் குறிகளுமே மூலதாதுக் களின் வேறுபாட்டுக்குக் காரணமாயின. இதுவரைக்கும் பரமாணு என்று நாம் விவகரித்து வந்ததை ஸூக்ஷ்மசரீ ரத்தில் நின்று மனக்கண்ணால் பார்க்கும்போது அது உண்மையில் பரமாணுவாக அல்லாமல் கூட்டணுவாகவே காணப்படுகின்றதாம். அதைப் பிரித்துக் கொண்டே போனால் ஈதரினது நான்காவது மூன்றாவது இரண்டாவது நிலைமைகளில் வரவரச்சிறுத்த கூட்டணுக்களாகப் பிரிந்து கடைசியில் முதலாவது நிலைமையில் உண்மையாகவே பர மாணுக்களாகப் பிரிந்து விடுகின்றதாம். வாயுநிலைமையில் ஹைட்ரோஜனுடைய பரமாணுவென்று விவகரிக்கப்படும் கூட்டணுவில் உண்மையாய்ப் பதினெட்டுப் பரமாணுக் களும் ஆக்ஸிஜனது கூட்டணுவில் இருநூற்றுத்தொண் ணூறு பரமாணுக்களும் அடங்கியிருக்கின்றனவாம். இவ் விதமே மற்ற மூலதாதுக்களையும் பற்றி கவனித்திருக்கிறார் கள். பரமாணுக்களெல்லாம் ஒரே குணங்குறிகளை உடை யவையென்றாலும் அவற்றின் ஸங்கியை ஸம்யோகம் இவற்றிலுள்ள வேறுபாடுகளால் அந்த அந்த மூலதாதுக் களின் வேறுபாடுகள் உண்டாகின்றனவென்று இப்போது நமக்கு விசதமாகும். இவ்வாறு விசாரணை செய்ததில் ஸ்தூலப்பிரபஞ்சத்தில் பிரகிருதிப் பொருளானது ஏழு நிலைமைகளில் இருப்பது நமது யுக்திக்கும் பெரியோரது புத்திக்கும் பொருந்த விஷயமாகின்றது.

# வஸந்தஸேனை.

இராகம் காம்போதி—தாளம் ரூபகம்.

**சம்பகமாலை**—மாரன் கரும்பினில் மாயமாய்ச் சேர்ந்திடும்
மல்லிகையைப்பார்த்தாயா? தோழி! மல்லிகையைப்பார்த்தாயா?

**வஸந்தஸேனை**—கீரவாணி! உன்றன் தந்தங்களை ஏசும்
குந்தமலர் பார்த்தாயா? சகியே! குந்தமலர் பார்த்தாயா?

**சம்பகமாலை**—மாமயிலே சாயக்கொண்டைக்கழகான
மகிழம்பூக்கள் பாரிதோ? தோழி! மகிழம்பூக்கள்பாரிதோ.

**வஸந்தஸேனை**—ஸோமவதனி? உன் நாமம் சிறப்பிக்கும்
சம்பகங்கள் பாரிதோ சகியே! சம்பகங்கள் பாரிதோ.

**சம்பகமாலை**—சுந்தரியே உன தந்தஸ்துக் கேற்றவிச்
சாமந்தியைப் பாரடி தோழி! சாமந்தியைப் பாரடி.

**வஸந்தஸேனை**—மந்தகமனி உன் பின்னலுக்குற்ற
மருக்கொழுந்து பாரடி சகியே! மருக்கொழுந்து பாரடி

இராகம் நாதநாமக்கிரியை—ஆதிதாளம்.

**சம்பகமாலை**—பாராய்க்ரீடாதடாகம் பூராய் ஜலமிதனில்; நேராய்
சகி வாராய் இதனழகையோராய் குறையுளதோ கூறாய்.

**வஸந்தஸேனை**—மின்னே! உன்றன் வதனமுன்னே மலைக்கும்மம்பு
ஜம் பாராய் சகி!
இன்னேரம் எங்கும் காணுமின்னேரசோகமலர்பாராய்.

**சம்பகமாலை**—கண்ணே? உன் கண்பழிக்கும் விண்ணீல நீலோற்
பலம் பாராய் அதன்
கண்ணே மலர்ந்தயல்லி வெண்ணிலவைப்பொழியும் பாராய்.

**வஸந்த்ஸேனை**—மானே! மதன்றுகர்க்கும் தேனே நிறைந்த சூத மீதோ, அதோ

தானே மலர்த்தாலாத்தி தாங்கும் குடமல்லிகை பாராய்.

**சம்பகமாலை**—வாகை யிதோ: நெருங்கிப்பூக்கும் விநோதத்தாழை யீதோ அதோ

நாக கன்னியர் பாதம்பூசும் மருதானிகள் பாராய்.

**வஸந்தஸேனை**—ஆடும் மயில்களிதோ பாடும் குயில்களதோ பாராய் உனை,

நாடும் கிளிகளிதோ கூடும் சக்கிரவாகங்களாங்கே.

சகி சம்பகம்! இந்த வேனிற்காலத்தை ஒரு சிங்கார நாயகிக்கு ஒப்பிடலாமென்று தோன்றுகிறது (பாடுதல்)

"கள்ளுயிர்த்தலரு முல்லைக்கடி முகைமுறுவல் தோன்ற
வள்ளிதழ்க் குவளையுண்கண் மலர்ந்து மாந்தளிர்மென்கையாக்
கிள்ளைமென் குதலை சாற்றிக்கிளரொளிவண்டுபாணைத்
தெள்விளிபாட வேனிற்றிருமகள் சிறந்தாளன்றே."

**சம்பகமாலை**—ஸகி! ஸம்ஸ்கிருதகவிகள் வஸந்தாதிருதுக்களை புருஷர்களென்றுரைப்பதால் நீ சொல்வது சரியாகாது. அதிருக்கட்டும் இப்படித்திரும்பிப்பார். வண்டுகள் வாத்யம் வாசிக்க, மந்தமாருதனென்னும் குசிலவன் ஆட்டுவிக்க, குயில்கள் பாட, லலிதகிஸலயங்களாகிற விரல்களுள் அபிநயம் காட்டி, மன்மதனென்னும் இறைவன் மகிழ, உல்லாஸமாய் லாஸ்யமாடும் இந்நவமாலிகாலதையைக் கவனித்தாயா? ஆகா! எவ்வளவு விநோதமாயிருக்கின்றதடி!

**வஸந்தஸேனை**—(ஏதோ நினைவுவந்தவளாய் மெய்ம்மறந்து) என்னடி நினைவு மூட்டிவிட்டாயே (என்று சொல்லி உடனே அடக்கிக்கொண்டு தனக்குள்) ஆ! என்ன புத்தி மோசம்போனேன். திடீரென்று உளறிவிட்டேனே இங்கிதமறிந்த சம்பகம் எனது உள்ளத்தை உள்ளபடி யுரைக்கும்படிக் களறிக்கேட்பாளே. என்

செய்வேன். அசந்தர்ப்பத்தில் மாட்டிக்கொண்டே னே. மறைத்து விடட்டுமோ? எப்படி மறைப்பது (சற்றுநேரம் ஆலோசித்து) நல்லது ஏன் மறைக்க வேண்டும் சொன்னால் என்ன ? எத்தனை நாள் மனதி லேயே உருகி வாடுகின்றது ? பிராணனுக்கு மேலாய் என்னைப் பாவிக்கும் இவளிடம் அந்தரங்கத்தைச் சொல்லாமலிருப்பது தான் நியாயமாகுமா ? அவளி டம் கலந்து ஆலோசித்தால் ஏதாவது உபாயம் சொ ல்வாள் நல்லது. இப்படிச் சொல்கிறேன் (வெளியாய்) என்னடி மனம்வாடும்படி திடீரென்று நினைவு மூட் டிவிட்டாயே! என் உயிர்த்தோழியான நீயும் இப்ப டிச்செய்யலாமாடி ?

சம்பகமாலை—ஏதடி வசந்தம்! இப்படிப் பிதற்றுகின்றாய் உன் மனம் வருந்தும்படியான வார்த்தை நான் ஒன் றும் சொல்லவில்லையே ? நீ மனம்வாட என் கண்களும் பார்க்குமாடி ?

வஸந்தஸேனை--பார்க்காதென்றுதான் எண்ணியிருந்தேன்.

ஏமாங்கதன்—[தனக்குள்] ஒருவரும் அறியாமல் அரவு போல் அரவமின்றிச் சாமர்த்தியமாய் இத்தோட்ட த்திற்குள் வந்துவிட்டேன் அம்மங்கையர்க்கரசி எங் கிருக்கின்றாளோ ? பார்க்கின்றேன்.

சம்பகமாலை—ஆனால் இப்பொழுது எண்ணம் மாறிவிட்ட தோ ?

ஏமாங்கதன்—அதோ பேச்சுக்குரல் கேட்கின்றது. [பார்த்து] அதோ நம் மனோஹரி தோழியுடன் நவமாலி கைக் கொடியினிடமாய் நிற்கின்றாள். நல்லது நான் வந்தது தெரியாமலிருக்கும்படி இச்சம்பங்கி லதாகி ருகத்தின் நடுவடைந்து இவர்கள் சல்லாபத்தைக் கேட்கின்றேன். [என்று அப்படியே செய்து நிற்கி ன்றான்].

வஸந்தஸேனை—அப்படிச் சொல்லவில்லையடி சகி! நீ வன மாலிகை தாண்டவமாடுவதாய்ச் சொல்லவில்லையா?

சம்பகமாலை—ஆமாம் சொன்னேன் அதனாலென்ன?

வஸந்தஸேனை—அது—அன்றைக்கு அங்கு போயிருந்தே னல்லவா?

சம்பகமாலை—என்றைக்கு? எங்கே?

வஸந்தஸேனை—என்னபோடி! அன்றைக்கு நான் ராஜ சபையில்—ம்—ம்—ம்—நான் ராஜ சபையில் கல்யா ணியில் பதம்——

சம்பகமாலை—என்னடி பிரமாதப்படுகிறாய்! என்ன தடங் கல் என்ன நீட்டல்! ஆம்! அன்று ராஜ சபையில் பதம்பாடி அதி மனோகரமாய் ஆடினையாம் அதைச் சொல்வதற்கிவ்வளவென்ன யோசனை? இதுவுமொ ருவகை நர்த்தனமோ? ஆம் ஆடினாய் அன்று சபை மிகவும் நன்றாய் அமைந்திருந்ததாம். உன் மனோரத கல்பதருவான அந்த ராஜப்பிரபு கூட வந்திருந்தா ராமே?

ஏமாங்கதன்—(தனக்குள்) ஆசையில்லை என்று நினைத்தே னே கோபத்தினால் கிழித்துவிட்டதாய் எண்ணினே னே என்ன முட்டாள் தனமிது? ராஜப்பிரபுவென் பதால் நம்மைத்தான் சொல்கின்றாளென்றேற்பட் டது. மகாராஜாவை ராஜப்பிரபு என்று குறைத்துச் சொல்ல ஏதுவில்லை. அவர் வயோதிகர் நானொருவன் தான் அங்கு வந்தவர்களில் ராஜ வம்சத்திற் சேர்ந்த வன். என்னையவள் பார்த்தபோதெல்லாம் பக்கத்தி லிருந்த சாருதத்தனைப் பார்த்ததாய் நினைத்து மதி மயங்கினேன். இப்பொழுதல்லவா அவள் அந்தர ங்கம் வெளியாகிறது. நல்லது இன்னும் சற்று நிதா னிப்போம்.

வஸந்தஸேனே—சகி! தகுந்த வித்வான்களெல்லாம் வந்திருந்தார்கள். அன்றைக்கு நல்லபெயருடன் வெளிவரவேண்டுமே என்று நான் மிகவும் விசாரப்பட்டேன்.

சம்பகமாலே—அதியற்புதமாயிருந்ததென்று பலரும் சொல்லக்கேட்டேன். உன் மனத்தை யவருக்கு வெளியிட்டாயா? அவர் அறிந்தாரா?

வஸந்தஸேனே—அவரா? ம்-ம்—முதலில் வெகுநேரம் லஜ்ஜையும் பயமும் என்னைப்பாதித்து விட்டது. பிறகு—சமயத்தைத் தவரவிடக்கூடாதென்று ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு எனக்குத்தெரிந்தமட்டும் ஹாவபாவாதிகளால் எனது அந்தரங்க பஹிரங்கங்களை அவர்பால் சமர்ப்பித்தேன்.

சம்பகமாலே—மெத்தச்சந்தோஷம், சகி, வசந்தம்! அவர் அறிந்தாரா? பதிலடையாளம் தந்தாரா? என்னிடம் சொல்லாமலித்தனை நாளிருந்தாயே என்ன ஆழமடி உன்நெஞ்சம்! என்ன கபடக்காரியாய்விட்டாயடி?

வஸந்தஸேனே—புருஷர்கள் கபடநாடக சூத்ரதாரிகளம்மா? எப்படி நிச்சயமாய்ச் சொல்வேனடி. ஏதோ என் புத்திக்கெட்டினமட்டும் அவர் அறிந்துகொண்டாரென்று தான் தோற்றுகின்றது. பிரிந்தபோது மலர்ந்த செந்தாமரைக் கண்களால் நானிருந்த பக்கம் பார்த்துவிட்டு மெல்ல மெல்லப்பின்பார்த்தவண்ணமே சென்றதை யாலோசித்தால் வாஸ்தவத்திலேயே மன்மதன் எனக்குபகாரம் செய்துகொண்டிருக்கின்றானென்றுதான் நான் நினைக்கவேண்டியிருக்கிறது.

சம்பகமாலே—அதற்கும் சந்தேகமா? தானய்வரும் லக்ஷ்மீதேவியை யார்தான் வேண்டாமென்பார்கள்? நீ பா

டியபிநயித்த பாட்டை நான் கேட்கக் கூடாதா? எங்கே! சொல் பார்க்கலாம்.

**வஸந்தஸேனே**—சொல்லத்தான் வேண்டுமோ? வெட்கமாயிருக்கிறதே.

**சம்பகமாலே**—அவ்வளவு ஜனங்களுக்கெதிரில் அபிநயத்துடன் லஜ்ஜையின்றிப் பாடினவருக்கு அந்தரங்கத்தில் என்னிடம் தனித்துப்பாட வருமா; வராது வராது. நான் அவராயிருந்தால் சொல்வதற்காலோசிப்பாயா? இருக்கட்டும் சொல்லடி ஜாலக்காரி!

**வஸந்தஸேனே**—ஏதோ பாடுகிறேன் பரிகாசம் செய்யாதே (என்று ஒரு பார்வை பார்த்துவிட்டுப் பாடுகின்றுள்).

**இராகம் கல்யாணி—தாளம் ரூபகம்.**

பல்லவி.

*என்ன மடமையிது—மூடமனமே!*
*எண்ணமெளிதில் கூடுமோ?*

அனுபல்லவி.

*மன்னர் மன்னவனவன்மெத்தத் துர்லபமென்று*
*நன்ருய்த்தெரிந்து மிந்தநேசபாசம் சுமந்தாய் என்ன*

**சரணங்கள்.**

*"ஆசைக்கோரளவில்லே" என்றபடி யம்பிகை*
*பூசைப்பலனுமவர் புத்திநுழைந்தே எனே*
*வேண்டச்செய்யலாகாதோவென்று வீணைசைகொண்டாய்—என்ன*
*தெய்வபலமிருந்தால் தானுயவரே நம்மை*
*மெய்யன்புடனே நாடி மேவக்கூடாதோ?*

*விந்தையாகுமோ? என்று விண்ணிற்றே ரோட்டுகின்றுய்—என்ன*
*நல்லமனதுடையோர் நாடும்பொருளவர்க்கு*
*மெல்லக் கிடைக்குமென்றே மேலாயுரைக்குமந்தக்*
*கல்யாண ராமன்பதம் கருதிக்கொந்தளிக்கின்றுய்—என்ன.*

**சம்பகமாலே**--ஆகா அடிகல்யாணி! கல்யாணகரமானராகம் பாவகம்பீரமான அநுராகம். ஸரஸதிராக்ஷாபாகம் யாருக்கு வராதடிமோகம்? நல்லது நன்ருய்

அபிநயித்தாயா? அவர் பரதசாஸ்திரத்தில் ரொம்பவும் சமர்த்தராச்சுதே! சந்தோஷித்தாரா?

வஸந்தஸேனை—சகி!

"எண்ணம் லகுவில் கூடிடுமோ" என்றேயவர்தம் முகமதியைக்
கண்ணும்மனமும்சோர்ந்திடநான் கனிபோலினிதாயுட்கொண்டே
வண்ணம்பல விம்மொழிக்கென்று வசனித்தழகாய் என்முகமாய் [ன்
எண்ணம் ரமிக்க நிற்கின்றார் இதுதான்தோழி என்னேடி?

நல்லாரொன்றைக் காமித்தால் நலமுற்றதுவாயங்கவரைச்
சொல்லாவழியாய்ச் சேருமெனச்சொகுசாய்ப்பாடுமிவள்மொழியில்
கல்லாயினுமே யுருகுமெனில் கருத்துளோர் நாம் என்று சொலி
நில்லா நின்றார் என்முகமாய் நிசநாயகனீதென்னேடி?

ஏமாங்கதன்—இவ்வாறெலாம் நான் புகழ்ந்து நின்றதுண்டு; நிச்சயமாய் இவளென்னிடமே யாசை கொண்டிருக்கின்றாள். அவளென்னைப் பார்க்கும்போதெல்லாம் பக்கத்தில் நின்ற சாருதத்தனைப்பார்த்ததாய் எண்ணி மதிமயங்கினேன் சீ. சீ. அந்த துர்பாக்கியனை இச்செல்வி கனவிலும் நாடுவாளா?

சம்பகமாலை—சகி, வசந்தம்! நீ சொல்வதிலிருந்து அவர் உன் ஹாவபாவங்களை நன்றாயறிந்து கொண்டாரென்றும் உன்னின்பத்தை யடையச் சாதகபக்ஷிபோல் காத்திருப்பாரென்றும், உள்ளங்கை நெல்லிக்கனியாய்த் தெரிகின்றது.

வஸந்தஸேனை—சகி! என்னடி செய்வேன். அது முதல் இந்திரியங்கள் அவரிடம் போவோம் வா வா வென்று என்னைக் கயிறுகட்டி யிழுக்கின்றன. இருதயம் போ போவென்று பிடித்துத் தள்ளுகின்றது. மன்மதனோ மலர்ப் பாணங்களுடன் பின்னின்று "அப்புருஷோத்தமனிடம் போய்ச்சேரு இல்லாவிடில் உன்னை வதைப்பேன்" என்று கசையடி அடிக்கின்றான். சகி மனதிற்குள் சென்ற நாயகனுக்கு இடமொழிப்பதற்கென்

றெண்ணும்படி மூச்சுப் பெரிது பெரிதாயும் வேக மாயும் வெளிப்படுகின்றது. வியர்வை நீரால் தள்ளு ண்டதுபோல் வெட்கம் நழுவி விட்டது. சம்பகம் ஏது செய்வேனடி! (பாடுதல்).

கரும்பினியார் கண்ணனையார் கமலாஸனனின் பெருமை
யுள்ளார்

இரும்பின் மனத்தராகி எனதின்பத்தடையா யாயினரேயோ?
திரும்பியொருகால் வந்தென்னைச் சேர்ந்து மகிழ்வதில்லையடி
கரும்பினனைய மொழியாயென் கவலை யெவர்க்குக் கழறுவனே.

சிந்தாகுலந் தீர்த்தருளென்றன் சிந்தைக்கினிய செல்வரவர்
வந்தார் கண்டார் அவர்மனத்தை வாங்கி எனதாயாக்கவும்நான்
மந்தாதரவு நீக்கியவர் மகிழ்ந்தே நாடக்கண்டலது
பந்தார் மலர்க்கைப்பெண்ணே நான் பாடலாடல் பயிலேனே.

கருணைக்கொரு நேரில்லாதார் கல்லைக்கரைக்குமின் சொலினர்
அருணச்செய்ய வதரத்தார் அன்பினுருவே யாகினவர்
இருணச்சியமா மழைக்கேசமுடையாரெந் தனிறைவரிந்தத்
தருணத்தின்னும் சேர்ந்திலரேல் சகியே கணமும் சகியேனே.

சகி!—அவரேழைபாச்சுதே என்பாய். இருந்தாலென்ன?
அவர் திவ்யகுணங்களிலொன்றே போதுமடி.

"பெருமையுடையார் மனைதொறும்போய்ப்பிச்சையெடுத்தாராலு
மருமைமறியாரம்பலத்திலாடித் திரிந்தாராலும்
ஒருமையுடையார் கோவணமே யுடையாயுடுத்தாராலும்
கருமைவிழியாய் நானவர்மேல் காதலொழியேன் கனவிலுமே."

எட்டிக்கனியும் மாங்கனிபோலினிக்கவுரைக்குமின் சொலினர்
கட்டிப்பொருந்தியாதரவாய்க் கணவரென்னைச் சேர்ந்திலரேல்
எட்டிக்கனியோ எரிநெருப்போ எதுவோவென்னையுயிர்மாய்க்கும்
தெட்டிற்பொலியும் விழியாய்நான் செய்வதொன்றுந்தெரிந்திலனே.

(இன்னும் வரும்).

ப. கி. கல்யாணராம சாஸ்திரிகள் பி. ஏ.

# கிருஸ்துபோன்ற ஒழுக்க முறை நூல்.

## 5-வது அதிகாரம்.

### உண்மைபற்றிய சாஸ்திரத்தைப் படித்தல்.

உண்மைபற்றிய சாஸ்திரத்தில் மெய்யுணர்வை நாடு. அலங்காரமொழியை அதன்கண் கவனியாதே. அந்த அந்த சாஸ்திரம் எக்கருத்தினை நோக்கி அமைக்கப் பெற்றுளதோ, அக்கருத்தின்வழி அமர்ந்து அதைக்கற்கக்கடவாய். அதின் பயன் என்ன எனப்பார். வார்த்தையழகைப்பாராதே.

2

அன்புவாய்ந்த சிறு நூல்களும், ஆழ்ந்த பெருநூல் போலப், பிரியமாய்ப் படிக்கற்பாலது. அக்கிரந்த கருத்தாபெரியரென்றுவது சிறியரென்றுவது, அவர் புகழ் பெற்றவர் என்றுவது, அல்லரென்றுவது, நீ கருதாதே. அப்புஸ்தகத்தின் கண்ணுள்ள உண்மைப் பொருளை உன்னிப்பார். அதுவே, உன்மனத்தைக் கவரட்டும். சொல் இன்னுருடையது என்று பாராதே. அதின் உண்மையைப் பார். எழுதினவர் இறந்திடுவார். அவர் சொல்லோ மெய்யுணர்வுபற்றியதாளுல், என்றும் உயிருள்ளதாக இருக்கும். எழுதினவர் உடல் பற்றியின்ரும். அவர் எழுத்து பல முகத்தால் கடவுள் உபதேசம் செய்வார்.

3

மெய்யுணர்வுபற்றிய நூலைப்படிப்பதில், பலகுதர்க்க பாவங்கள் பலகால் நம்மனத்தில் குறுக்கிடும். அவைகளைவிட்டு மேற்போகாமல், வீணில் அவைகளில் காலம் கழித்து அவைகளை உட்புகுந்து அறிய விரும்புவோம். பயன்படுமாறு, ஞானசாஸ்திரம் தம்முட் பெறவேண்டுமாளுல் கல்விச்செருக்குவிடு. பக்தி, பணிவு, நம்பிக்

கைகொள்ளு. ஞானி எனப்பெயர்பெற விரும்பாதே. சந்தேகங்களைக் கூச்சமின்றி வினவு. சான்றோர் வார்த்தையைக் கேள். விடையின்றேல், மறைவாகவும், உருவகமாகவும், மூத்தோர் செய்திருக்கும் உபதேசத்தில் கிலேசப்படாதே. உண்மையின்றி அவர் உரையார். காரியமின்றி அவர் சொல்லார்.

## 6-வது அதிகாரம்.

### வரம்புகடந்த விஷயப்பிரவிர்த்தி.

(அளவுகடந்த ஆசை)

மிதமிஞ்சி ஒன்றை விரும்பின், மிகுதியான, மனச் சலனம் உடனே நமக்குண்டு. அகங்காரிக்கும், பேராசை கொண்டவனுக்கும்—ஓய்வில்லை. தாழ்மை யுடையரும், ஏழையரும் நீங்காச்சுகம் அமைந்த வாழ்நாள் கழிப்பர்.

2

தனக்குள்ளே ஒழிவு பெறாதவன் சோதனைக் குள்ளாவான். அற்பவிஷயங்களால் அவன் சஞ்சலிப்பான். கோழை மனமுடையானுக்கும், ஊனை ஓம்புகிறவனுக்கும் புலன்களின் வழியில் இருப்பவனுக்கும், உலகப்பற்றை விடுதல் முடியாதாம். விடுவனேல் வியசனமடைவான். உலகப்பற்று வேண்டாமென்று பிறர் தடுத்தால் கோபங்கொள்வன். எண்ணிய கருமம் சாதித்தால், இதனால் என் பயன் என்று தன்னையே நோவான். விஷயங்களின் வழிச்சென்றேன், சுகம் நாடினேன், நாடின சுகம் கிட்டவில்லையே என்று துயரமடைவான்.

3

ஆசைக்குட்படாமல் அதனை வென்றால் மனச் சமாதானம் அமையும். உலக விஷயங்களில் அழுந்தி ஆசைகொண்ட மனத்தைச் சுகம் அணுகாது. தபசில் பற்றிய தாகமுள்ளோர்க்கு அந்தச்சாந்தி உண்டாகும்.

## 7-வது அதிகாரம்.

### வீண் எண்ணங்களைவிட்டு ஓடுதலும், தற்புகழ்ச்சியைத் தவிர்தலும்.

மனிதனையும் உலகத்தையும் நம்புதல் வீணே. கிருஸ்துவின் அன்புபற்றி உன் அயலானுக்கு உதவிபுரியக்கூசாதே. காலகதிக்குள்ளான இந்த உலகத்தில் குறைவுள்ளவனாக இருக்கக் கூசாதே.

உன்னால் ஆவது ஒன்றில்லை. எல்லாவற்றுக்கும் இறைவனை நம்பு. உன்னால் ஆனது நீ செய். உன்உள்ளம் நல்லதாகில் கடவுள் உதவி செய்வார். உன் அறிவிலாவது மாற்றான் அறிவிலாவது (சாமர்த்தியத்திலாவது) நம்புதல் வேண்டாம். ஈசன் அருள் வேண்டு. அவர் அருள் பிரசாதத்தால் கீழானவன் மேலானவனாவன். தன்னைக் கொண்டாடும் பேதை கீழே தள்ளப்படுவான்.

2

செல்வத்தில் மகிழாதே. செல்வாக்குள்ளார் சிநேகர்கள் என்று மயங்காதே. இறைவனைப் போற்றிவாழ். அவரே உனக்கு எல்லாம் கொடுத்தார். இனிக்கொடுக்கப் பிரியப்படுகிறார்: தன்னையே தியாகம் செய்வார்.

இவ்வுடலை உயர்வென்றும், அழகென்றும் ஓம்பி மகிழாதே. வியாதிப்பட அது கெடும். அதன் அழகு குறையும்.

உன் புத்தி சாதுர்யத்தையும் அறிவின் மிகுதியையும் கொண்டு மெச்சாதே. அது கடவுள் சம்மதமன்று. அவரால் கிடைத்த பாக்கியம் அது.

மற்றவரைவிட மேலோன் என்று எண்ணாதே. கடவுளின் பார்வையில் நீ அற்பனாக இருக்கக்கூடும். உன் உள்ளம் அவர் அறிவார். உன் கருமங்களைப் பற்றிச் செருக்குக் கொள்ளாதே. அவைகளைப் பற்றி ஈசுவர சம்மதம் வேறாக இருக்கும். மனிதர் முகமலர்ந்து மகிழ, ஈசன் பலமுறை முகம் குறுகி நோவார். உன்னிடம் ஒருநன்மையிருப்பின், மற்றவரிடம் அதிகம்இருக்குமென்று எண்ணு. இதுதான் உள்ளம் தாழ்ந்திருப்பதற்குச் சாதனம். பிறருக்குப் பின்னாக உன்னை வைக்கிறதினால், உனக்குக் கேடு இல்லை. ஒருவனுக்கேனும் முன்னே இருக்க முயன்றால், அது உனக்குத் துன்பத்தைத் தருவதாகவேவரும். அகம் ஒடுங்கினவனிடம் சாந்தி இருக்கும். அகமுடையானிடம் பொறாமை, கிராக்ரோதம் எப்போதும் குடிகொண்டிருக்கும்.

## 8-வது அதிகாரம்.

### அடக்கமுடைமை.

உன் உள்ளத்தைக் கண்டவர்க்கெல்லாம் காட்டாதே. இறைவனிடம் பயம், பக்திபாராட்டுவோரிடம் உன் குறையைச்சொல்லு. வாலிபர்களுடனும், உலகத்தாருடனும், அதிக நெருக்கம் வேண்

டாம். அவர் பழக்கம் ஏகதேசமாக விருக்கட்டும். செல்வரிடம் நெருங்கில், அவரைப்புகழ வேண்டாம். பெரியோர் முகம் நிற்க ஆத்திரம்வேண்டாம். தாழ்மையுள்ளான், நல்லார், அன்புடையார் பயந்தவர்- இவர்கள் சிநேகத்தைநாடு. உன் உள்ளம் விகாசமாகும் படியான விஷயங்களைப்பற்றிப்பேசு. பெண்டிர்உறவுதவிர்; ஆனல், நற்பெண்டிர் க்ஷேமத்தைக் கடவுளிடம் கோரு.

2

ஈசன் சந்நிதியையும், தேவர்கள் சிநேகத்தையும் விரும்பு. மனுஷ்யர் பார்வையைத்தவிர். எல்லாரிடமும் அன்பு உள்ளவனுக இரு. ஆனல் அவர் நட்பு ஆகாது. ஒருவன் ரூபம் பிறர் அறியாமலே, உலகில் அவன் கீர்த்தி எங்கும் பரவிப் பிரகாசிக்கும். அவனைநேரில் கண்டாரே யாகில், அவன் புகழ் மங்கிவிடும். அவனை அவர் மதியார். நம்முடைய இருப்பு [சங்கம்] பிறருக்குப் பிரீதியாகஇருக்குமென்று எண்ணுகிறோம். நம்மிடம் குற்றம் நாடி நம்முடையகுணம்கொள்ளாது அவர் நம்மை வெறுப்பாராவர்.

## 9-ம்து அதிகாரம்.

### பணிவும் வணக்கமும்.

நம்மில் மேலாயினேருக்கு அடங்கி இருத்தலும், நடைபெறுதலும் உண்மையில் நலமாம். நாம் கொண்ட கொள்கையே சரியென்ற பிடிவாதம் விடு. மடாதிபதி ஸ்தானத்தைவிட தாழ்மையான பதவி சாவதான முடையதாம். அநேகர் நிர்பந்தத்தினல் பிறருக்கு அடங்கிநடக்கின்றாராவர். அன்புபற்றி அன்று அதனல் அவர் கஷ்டம் அனுபவிப்பார். அவர் மனத் துயரப்படுவர். மனமுழுதும் பணிந்து ஈசன்மேல் அன்புவைத்தாலன்றி, மனச்சமாதானம் என்றும் அவருக்கு இன்ரும். அங்கும் இங்கும் அலைந்தால் அது வராது. மனம் அடங்கிப் பணிந்தாலன்றி சாந்தி உண்டாகாது. அதிகாரம், உயர்நிலை, உத்தியோகம் இவைகளைப்பற்றிய சிந்தனைகள் அநேகரை மோசமான மயக்க வழியில் கொண்டு விடுகின்றன.

2

தம்மனம் போன போக்கில் நடப்பது யாவருக்கும் இயல்பே. தந்நடக்கை சரியென்று ஒத்து நினைப்பவருடன், இணங்குவதும் இயல்பே. கடவுள் நம்முடைய அந்தக்கரணத்தில், தோன்றவே

ண்டுமாகில், நம்முடைய மனப்போக்கை தவிர்த்துச் சாந்தமனத்தி னராய் அமையவேண்டும். பிரபஞ்சமுழுமையும் தன் அறிவினல் அறியவல்லர் யாவர்? இலர். ஆகவே, பிறர் அபிப்பிராயத்தையும் கேள். உன்னுடைய எண்ணத்திலேயே பூர்ண நம்பிக்கை கொள் ளாதே. உன் மனோபாவம் நன்றாயிருப்பினும், பிறர்காட்டிய வழி யை, கடவுளின் கட்டளையாக மதித்து, பற்றி ஒழுகுவாயாகில் உன் னுடையதைவிட அதினல் அதிக நலம் பெறுவாய். நாம் போதி க்கிறதைவிட, பிறர்போதனை கேட்கிறது நலம். என்றும் அதுவே சாவதானம் என்றும் நான் பலரால் தெரிந்துகொண்டிருக்கிறேன்.

ஒவ்வொருவருடைய மனோபாவமும் நலமாகவே இருக்கலாம். நேரிடும் சந்தர்ப்பத்திலும்—அறிவின் ஆராய்ச்சியினலும் பிறர் சொல் அவசியமென்று தோன்றியும் அதை அலட்சியம் செய்தலா னது, மனமுரண்டும் அகங்காரமுமேயாம்.

## 10-ம் அதிகாரம்

### அதிகப்பேச்சு தவிர்தல்

கூடியவரை, விருதாவாய் பேசும் கூட்டத்தை ஒழிமின். இவ்வு லகவிஷயத்துக்கும் உன்மார்க்கத்துக்கும் வெகுதூரம். உலகசம்பந்த மாய் உன்மனத்தின்கண் உதயமாகும்எண்ணம் சிறிதாயிருப்பினும்— அதுபெருங்கேட்டுக்கு இடமாகும். நாம் மமதைஎன்ற அழுக்கினல், பூசப்பட்டிருக்கிறோம். விரைவில், அதன் வசமாவோம். அந்தோ! ஜனக்கூட்டத்தை ஒழிக்கமாட்டேனு. நான் உண்டு என்பாடு உண்டு என, சும்மாயிருக்கிறேனு?

2

வீண்பேச்சில் ஏன் அவ்வளவு சந்தோஷம் இருக்கவேண்டும். மனச்சாட்சி நோகாமல் சாந்த நிலையில் ஒருகணமேனும் இருவெ ன்றால், ஏலாய். ஒருவன் மற்றொருவனுடன் பேசி ஆறுதல் அடைகி ன்றான். பல எண்ணங்களால் சோர்ந்த மனத்தைப்பேச்சினல் தேறுதல் செய்து கொள்ள விரும்புகின்றோம். நமக்குப் பிரியமான வஸ்துக்கள், நாம்விரும்பும் விஷயங்கள் இவைகளைப்பற்றி பேசுதல் நமக்கு இலகுவாயிருக்கிறது. ஆனல் நம்பேச்செல்லாம் பயனில்லா தவையாம். வேற்றுமை உடையனவாம். வெளியில் சமாதானம் தே டுதல், அந்தர்யாமியாகிய ஆத்மாவினல் அடையும்சாந்திக்கு முற்றும் வைரியாகுவதாகும். உட்சுகத்திற்கு வெளிச்சுகம் முற்றும்விரோதம்.

3

ஆகையினல் வாழ் நாள் வீண் நாளாக கழியாமல் நாம் கவன

மாக இருக்கக்கடவோம். ஈசுவர வழிபாடு செய்யக்கடவோம். பேசினால் நலம் உண்டென்று உங்களுக்குத் தென்படுமாகில் பேசுமின் ; தீய ஒழுக்கத்தினாலும், அஜாக்கிரதையாலும், நாம் வாய் பேசாமல் சும்மா இரோம். ஈசுவர சம்பந்தமான விஷயங்களைப் பற்றி நினைத்தல், ஆத்மமார்க்கத்தில் வெகுதூரம் கொண்டுபோய்விடும். நம்போல் ஈசுவர பக்தியில் முக்கியமாய் ஆழ்ந்தவரான ஒத்தமனமுடையரைக்காண ஹேதுவாக இருக்கும்.

## 11-ம் அதிகாரம்

### நம்மார்க்கத்தில் சாந்தியும் சிரத்தையும் அடைவது எப்படி.

பிறர் வார்த்தைகளை மனசில் வாங்காமலும், பிறர் விஷயங்களை மனசில் வைக்காமலும் நமக்கு சம்பந்தமில்லாதவற்றில் மனம் செல்லாமலும் இருத்தலே சாந்திக்கு அனுகூலமாகும்.

பிறர்கவலைகளில் தலையிடுகிறவனும், தன் வழியை விட்டு புறம்பான விஷயங்களை நாடுகிறவனும்—சிறுபான்மை தன்னுள்ளே நோக்குகிறவனும்—நீடித்த சாந்தம் பெறான்.

அதிகப் பிரவிருத்தி யில்லாமலிருக்கிறவர்களே—பாக்கியசாலிகள். அவர்கள் மன உபசாந்தி ஏராளமாய் உள்ளாராவர்.

சிலஞானிகள், நல்லொழுக்கமுடையராயும், ஆழ்ந்தஅறிவுடையராயும் இருந்திருப்பதற்கு காரணம் என்ன? உலகப்பற்றுகள் எல்லாம் தம்மை அணுகாது ஒழித்தார்கள். மனப்பூர்வமாய் இறைவனை இடைவிடாமல் பற்றினார்கள். அதினால் ஆத்ம அனுபவங்களுக்கு காலம் ஏற்பட்டது.

நாமோ உலக சங்கடங்களைப்பற்றி அதிக சுறு சுறுப்புள்ளவர்களாக இருக்கிறோம். நிலையற்ற இவ்வுலகத்தைப்பற்றி தீராக்கவலைப்படுகிறோம். ஒரு பாபத்தையேனும் முற்றும் துலைக்க முயலுகிறோமில்லை. இவ்வுலக வாழ்க்கை சீக்கிரம் செல்லட்டும் என்ற ஆதுரம் நமக்குஇல்லை. ஆகையால், இதிலேயே தங்குகிறோம். சன்மார்க்கத்தில்அலக்ஷியமும் உபேக்ஷையும் உள்ளவராகஇருக்கின்றோம்.

நம்மைப் பேணுதலை நாம் மறந்து நம்முடைய மனக்கசடுகள் நீங்கினால் ஈசுவர விஷயங்களில் ருசி உண்டாகும். மேலானகெதியின் ஏகதேச தர்சநம் கிடைக்கஹேதுவாகும்.

இதற்கு நமக்குபலமான தடைஉண்டு. இதுவாம். காமம்என்ன, குரோதம்என்ன இவைகளை விலக்கினோமில்லை. அறிஞேர்வழி அணு

கிறேமில்லை. அற்பசங்கடம் நேர்ந்தால், ஆழ்ந்ததுயரத்திற்கு உள்ளாகிறேம். நம்போலியரிடம் அதன் நிவிர்த்தியைத்தேடுகிறேம்.

## 2

வருவன எல்லாம்—வருக என்று தைரியமாக அணிவகுத்த யுத்த வீரர்கள் மாதிரியாக இருக்கப்பெறின், ஈசன் அருள்பற்றிய உதவி தானுக வருதலைப்பார்ப்போம். அவனையே சரணமாகஅடைந்து, அவனையே நம்பி உலககஷ்டங்களுடன் போர் புரிகிறவர்களுக்கு அவர் உதவி எப்போதும் எதிரே நிற்பதாகும். போர்புரிதலுக்கு சந்தர்ப்பங்களை அவரே உண்டுபண்ணுகிறுர். அவைகளை நாம் ஜயித்து வெற்றிபெறவேண்டியேதான் அவர் அப்படி செய்விக்கின்றுர்.

வெளி விதிகளை மாத்திரம் பற்றி ஒழுகுவோமாகில், நம்முடைய அன்பின் எல்கையைக் காணலாம். நம்முடைய அன்பு சீக்கிரம் முடிவுபெறும். குறைந்துவிடும் என்றபடி நம்முடைய மனசின் மலம் முற்றும் துலைக்க முயற்சிக்கக் கடவோம். அதினுல், மன உபசாந்தி என்றபுதையல் அடைவோம். வருஷம் ஒன்றுக பாபம் ஒன்றுகத் துலைத்திடின், பூர்ண ஞானியாவோம். ஆனுல் இதற்கு முற்றும் மாறுக நடைபெறுகின்றேம். இறைவனை நோக்க ஆரம்பித்த காலத்தில், எவ்வளவு பரிசுத்தராயும், நல்லவராகவும் இருந்தோம். நாட்செல்ல நாட்செல்ல, நம்முடைய நேர்மை எவ்வளவு குறைந்துகொண்டே வருகிறது!

நம்முடைய காலடி நன்மார்க்கத்தில் செல்லச் செல்ல, நம்முடைய அன்பு மேன்மேலும் அதிகமாக பிரகாசிக்கவேண்டுமெல்லவா? அதற்கு மாறுக, முன்னிருந்த அன்பின்—ஒருபொறிஅளவேனும் இருப்பின், அதுவே ஒரு பெரியகாரியமாக ஆகிவிட்டதுகாண்! இது என்ன கொடுமை! முதலில், நம்பாவத்தைப்பற்றி நாம் கடிந்துநொந்துகொள்ளுவோமாகில், நாளடைவில், பாவங்களைஎல்லாம் சிறுகச் சிறுக இலகுவாய்த்துலைப்போம். வழக்கம் என்ற விலங்கைதவிர்க்கிறது கஷ்டமே. நம்மனேரதத்தை மீறின செயல்அதினும்கஷ்டமே.

சிறுகுற்றங்களைத் துலைக்கமாட்டீரேல், பெரும் பாவங்களை எப்போது துலைப்பீர்கள்? தீய ஒழுக்கத்தை மறந்திடுமின்! இயற்கைப்போக்கைத்தடுமின்! இன்றேல். தீயபழக்கம் வர வர பலப்படும். பின்பு துலைக்க முடியாது. சன்மார்க்கத்தில் நோக்கமுள்ளவராக இருப்பீராக. தம்மைத் தாமே அடக்கப்பெறின், அதினுல்நீர் அடை

யும் உபசாந்தியென்ன? பிறருக்கு நீர் விளைவிக்கும் சந்தோஷம் என்ன, என்று சொல்லுவேன்.

## 12-வது அதிகாரம்.

### ஆபத்தால் விளையும் நன்மை.

சிலவேளை துன்பமும், துயரமும், கவலையும், மனிதனுக்கு நேர்தல் நலமாம், அது, மனசை உள்நோக்கச்செய்கிறது. அதினல், உலகப்பற்று விடஹேதுவாகிறது. உலகவாழ்வின் நம்பிக்கையை துலைக்கக் காரணமதாகும்.

நமக்கு எதிர்க்கக்ஷி உண்டாதல் நலனே. எவ்வளவு நல்லவை செய்யினும், எவ்வளவு நல்லவை நினைப்பினும், பிறர் நம்மை நிந்தித்தலும், நம்மை முற்றிலும் அலக்ஷியம் செய்தலும், நமக்கு நலன் பயப்பதாகும். நம்மகந்தை அடங்க, இவைகள் வழிகளாம். பிறர் நம்மை அலக்ஷியமாகப்பேசுதலும், பிறர் நம்மிடம் நன்மை ஒன்றேனும் காணமல் இருத்தலும், நமக்கு நலமே. அதினல், நாம் உள்ளத்தில் இறைவனை நோக்கித் தெளிவாய்க் காண்கின்ருேம். அவர் நங்கருமங்களையும் நங்கருத்துகளையும், உள்ளவாறு காண, நாம் ஆனந்திக்கிருேம். கடவுளே அடைக்கலம் என, நாம் அவர்பால் மனசை இடையருது வைக்கவேண்டும். இப்படி இருக்கப்பெறின் அன்னிய மனிதர்களின் ஆறுதலான வசனம் வேண்டுவதன்ரும்.

நல்லான் ஒருவன் துன்பத்திற்கு உட்பட்டுக் கவலையால் வருந்தும் காலத்தில் கடவுளின் அடைக்கலமே தனக்கு உற்றது என்று தெளிவாய் அறிவன். 'அவனின்றி அணுவும் அசையாது' என்ற நன் நம்பிக்கையில் உறுதிப்பாடு பெறுவான், அதனல், தான் வியசனிப்பான், அழுவான், ஈசனை இறைஞ்சுவான், போற்றுவான், இனி உலகவாழ்க்கை வெறுப்பான், மனத்தைக் களிப்புறவேண்டுவான், கிருஸ்துவுடன் (ஆன்மாவுடன்) ஒன்றுபட விரும்புவான், மாறி மாறிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தின்கண், நீடிய சாந்தமும், நாவதானமும் இல்லை என உணர்வான்.

(இன்னும் வரும்.)

ஆத்மநாதன்.

# வித்யுன்மாலை.

## அத்தியாயம்—3.

சிறிது நேரத்திற்கெல்லாம் பக்ஷணத்தட்டுகளுடன் பரிசாரகர்கள் பின்றொடர, ஒரு பெண்பால் கையில் அதி விசித்திரமான வேலைப்பாடுடைய ஒரு தந்தப்பெட்டியுடன் ஹாலிற்குள் பிரவேசித்து இராணியின் முன்னர் போட்டிருந்த ஒரு சலவைக் கல் மேஜைமீது அப்பெட்டியைத் திறந்தபடி வைத்துவிட்டு இராணியை வந்தனம் செய்து பயபக்தியுடன் ஒரு புறமாய் ஒதுங்கி நின்றாள். இம்மட நல்லாளே நாம் கூறிய மோகனமாலையென்பாள். மிதமான ஆபரணங்களே யவள் பூண்டிருந்தாள். அதி சுந்தரமான அவள் முகம் ஏதோ விசாரத்தால் தெளிவு குறைந்தது போல் காணப்பட்டது. மேக நிறமான அவள் கூந்தல் சரியாய் கவனிக்கப்படாமையால் அவிழ்ந்தும் அவிழாமலும் பாதி பிரிந்த மயிலின்றோகையை யொத்து விளங்கியது. சாந்தமான அவள் வடிவம் உலகப்பற்றின்றி ஏதோ ஒரு வழியாய்க் காலத்தைப் போக்க நிச்சயித்திருக்கும் அவள் சங்கல்பத்தை ஜாடையாய் அறிவிக்காமல் போகாது.

நமதலஸகாமினி இப்பெண்மணியை வெகுநேரம் கவனமாய்ப் பார்த்தாள். பின்னர் சிந்தாகுலமான மனத்தினளாய் "அம்மணி! உனக்கு வயதென்ன" என்று வினவினாள்.

"தேவி! எனக்கு இன்னும் 18 வயது பூரணமாகவில்லை" என்று மோகனமாலை தலை குனிந்தபடி விடை பகர்ந்தாள்.

இராணியின் மனது முன்னிலும் அதிகமாய் ஆலோசனையில் ஆழ்ந்தது. அதை யொருவாறு காண்பித்துக்கொள்ளாமலே "சரிதான், நானும் அவ்வளவுக்குள்ளாகவே தான் இருக்குமென்றெண்

ணினேன். நீ இவர்கள் வீட்டில் எத்தனை காலமாய் இருக்கின்றா யோ?" என்று கேட்டாள்.

"ஏறக்குறைய மூன்று வருஷங்களாகின்றன".

"இந்த மோகனமாலை" என்று வாயெடுத்து அத்துடன் பேச்சை நிறுத்தி அந்தப்பெட்டியினின்று அவ்வாபரணத்தை யெடுத்து நன்றாய் பரிசைு பார்த்தவளாய் "இவ்விலையுயர்ந்த மோகனமாலையை இப்பெட்டியில் எதற்காக வைத்தனையோ. இது உனதாயிருக்கவேண்டுமென்றெண்ணுகின்றேன். எனக்கென்று இப்பெட்டியில் குரு மகாராஜரால் வைக்கப்பட்டவை இம்முத்துக்களேயல்லவா?" என்றாள் அலஸகாமினி.

"தேவி! தாங்கள் சரியாய்த்தான் ஊகித்தீர்கள். இம்மோகனமாலை எனது தான். தங்கள் குருவாலேவப்பட்டு அவர் சகோதரி இதை இப்பெட்டியில் வைத்தார்கள். எதற்காக வைத்தார்களோ யானறியேன் அதைப்பற்றி நான் கேட்கவுமில்லை."

"இம்மாலை மிகவும் நேர்த்தியான வேலைத்திறனுடையது. உன்னால் அருமையாகப் பாராட்டப் பட்டதென்றெண்ணுகிறேன்."

"என் உயிரைக்காட்டிலும் அருமையாகவே இதனைப்பாவிக்கவும் பாலிக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். என்னைப் பிரசவித்ததும் யாது காரணத்தினாலோ என்னைவிட்டுப் பிரிந்த என் தாயால் ஆசையுடன் என் கழுத்தில் இது போடப்பெற்றதாம். அதனால் தான் இவ்வாபரணத்தின் பெயரே எனக்குமிடப்பெற்றது." இராணியின் கண்ணில் நீர் ததும்பவாரம்பித்தது. வெகுப்பிரயாசையுடன் அதையடக்கி, "இந்த இடம் ரொம்ப வெப்பமாயிருக்கின்றது. பலகணியண்டை போவோம்" என்று சொல்லிக் கண்ணைத் தலைப்பினால் துடைத்துக்கொண்டு "ஆனால் உன்தாய் உனதறியாப்பருவத்திலேயே இறந்து விட்டனளாக்கும். ஐயோ பாவம் உன்னைப்பார்க்க விசனமாயிருக்கிறது. எனது தாயும் இப்படித்தான் என்னைச்சந்தியில் விட்டுவிட்டுப் போய்விட்டாள். யாரிருந்தாலும் தாயிருந்ததுபோலாகுமா? உன் தகப்பன்—

"என் பிதா எங்கு போனாரோ தெரியவில்லை. சிம்மளராஜனால் சிறையில் போடப்பட்டிருப்பதாய் வதந்தி யுலாவுகிறது. என் துர்ப்பாக்கியத்தை என் கேட்கின்றீர்கள்."

மோகனமாலைக்கு அதற்குமேல் பேச நாவெழவில்லை. மனங் கலங்கியது. பனியால் மறைந்த சந்திரபிம்பத்தை நிகர்ந்து அவள் முகம் வாடியது. விம்மி விம்மி அடக்கமுடியாதபடி அழவாரம்பித் தனள்.

“அம்மணி! அழாதே சமீபத்தில் வா” என்று சொல்லி மோ கனமாலையை அருகில் இழுத்துக் கண்ணைத்துடைத்து “எதற்காக இவ்வளவு விசனம்! உனக்கென்ன குறைவு. என் நாட்டுக்குழந்தை கள் என் குழந்தைகளல்லவா. இன்று முதல் என்னை உன் தாயாய் எண்ணிக்கொள். இந்தா! இந்த மாலையை யணிந்துகொள். உன் தாய் கொடுத்தது போல் இப்பொழுது நான் தருகிறேன். இதே மாதிரி என்னிடத்திலுமொன்றிருந்தது. இதுவே எனதோவென்று இன்னும் பிரமையுண்டாகின்றது. அது போகட்டும் நீ இவ்வீடு வந் து மூன்று வருஷங்களாகிறது என்றாய். அதற்குமுன் எங்கிருந்தனை யோ?” என்றாள் இராணி.

“சாருமதி என்ற உத்தமியினிடம் என் தாய் என்னை ஒப்பித் துவிட்டுப் போயினளாம். அவள் தான் என்னை அதுவரையில் காப் பாற்றினாள். இதற்கு மூன்று வருஷங்களுக்குமுன் ஒருநாள் நான் வழக்கப்படி தோழிகளுடன் விளையாடிவிட்டு வீடு வரு முன்னமே யே அவள் காணமல் போய்விட்டாள். அவளைத் தேடிக்கொண்டு ஊர் ஊராய் அலைந்தேன். கடைசியாய் தங்கள் குருவின் சகோதரி யான இம்மாதர்திலகம் என்னைக்கண்டு நான் அவர்களையறியாமல் போனாலும் என்னைத் தாமறிந்திருப்பதாய்ச் சொல்லி இவ்வில்லம் அழைத்து வந்தார்கள். என் செவிலித்தாயின் விருத்தாந்தம் தமக் குத்தெரியுமென்றும் அதை இப்பொழுது ஒரு காரணத்தினால் தெ ரிவிக்கக்கூடாதென்றும் அவள் எங்கேயோ சவுக்கியமாயிருக்கிறாள் என்பதாய் மாத்திரம் அறிந்து நான் மனதைச் சந்தோஷப்படுத்தி க்கொள்ளவேண்டும் என்றும் எனக்குச் சொல்லிச் சமாதானம் செ ய்து அதுமுதல் வயிற்றில் பிறந்த மகளுக்கு மேலாகவே என்னை யாதரவாய்ப் பரிபாலித்து வருகின்றார்கள். தற்காலத்தில் தங்கள் குரு தான் எனக்குப் பிதா. அந்த அம்மாளே என் செவிலித்தாய். தாங்கள் என் தாயாயிருப்பதாய் வாக்களித்ததால் இனி நான் சுகம் பெறக்கூடும்” என்று வணங்கி நின்றாள் குறைந்த சோகத்துடன் மோகனமாலை.

"லக்ஷ்மீதேவி விலாஸமாடும் நமது குரு மகாராஜாது நிகேதனத்தில் வசிப்பதால் நீ சுகமாகவே காலங்கழித்து வருகிறாய் என்றெண்ணுகிறேன். மேலும் உன்னுடைய பேரழகினால் அழைக்கப்பெற்று சுந்தரவாலிபர்கள் பலருன்விஷயமாய் உன் போஷகர்களைக்கேட்டிருப்பார்களே."

"அப்படியொன்றுமில்லை. தாங்கள் நினைப்பதற்கு முற்றிலும் மாறாகவே யானிருக்கின்றேன். சந்தோஷகரமான உத்ஸவங்கள் பண்டிகைகளென்றால் எனக்குப் பிடிப்பதே யில்லை. எனக்கு ஒன்றிலுமொட்டாமல் தனியாய் இருப்பதில் தான் விசேஷப்பிரியம்."

"என்ன அனியாயம்! இவ்வளவு சுந்தரமான ஆகிருதியை ஆக்கியோன் வீணிலா சிருஷ்டித்தான்? நீ என்ன யோகினியா? மோகினிக்குமேலான அழகும் யௌவனமும் உள்ள நீ எதற்காக இப்படியுன் வாணாளை வீணாளாக்கிக் கொள்கின்றாயோ?"

"தேவி! அப்படியுமில்லை. என் காலம் சிறப்புற்றதாகவே செல்லுகின்றது. வீணாளென்று எனக்குக் கனவிலும் தோன்றவில்லை. தனியாய் இருந்து மனதுடன் கலந்து ஆலோசித்தலால் எவ்வளவோ சித்த சுத்தியும் திருப்தியும் எனக்கேற்படுகிறது. "மௌனம் ஸர்வார்த்தஸாதகம்" என்று பெரியோர்கள் சொல்வது பொய்யாகுமா? அதிகமான ஆத்ம விசாரணையால் கிலேசம் வருவித்துக் கொள்ளாமலிருப்பதற்கும் சுகமான வழியிருக்கிறது. குருமகாராஜாவின் செல்வக்குழந்தைக்கு நானே போதனா குருவாயிருக்கின்றேன். அதி புத்திமதியான வித்யுன்மாலைக்குப் போதிக்கும்போது பொழுதுபோவதே தெரிவதில்லை."

இராணி மோகனமாலையின் வடிவழகை முன்னிலும் விசேஷமாய்ப் படித்தாள். பின்னர் "என்னவிருந்தாலும் மோகனமாலாய்! உன் வைராக்கியம் பிஞ்சில் பழுத்தது போல் மனவெறுப்பையே தருகின்றது. சிறிதும் சரியாயில்லை. கண்ணாடியில் பார்த்தாயானால் உன் அழகை நீயே மெச்சுவாய். நன்றாய் நீ படித்தவளெனவும் நான் கேட்டிருக்கிறேன். சுகத்துக்குத்தகுந்த சுகுமாரமான வயதிலிருக்கின்றாய். எதற்காக இப்படிச்சகலத்தையும் கெடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வைராக்யம் இயற்கையா யேற்பட்டதல்ல. ஏதோ ஒரு தகுந்த காரணமிருக்கவேண்டும். எனக்குச் சொல்லக்கூடாதா.

யோசிக்கவேண்டாம். அஞ்சவேண்டாம். என்னை உன் அந்தரங்கத்துக்குத் தகுந்தவளென்றே நீ நிச்சயிக்கலாம். சொல், பாதகமில்லை. நான் உன் ராணியும் தாயுமல்லவா?"

'தேவி! இவ்வளவு கருணையுடன் தாங்கள் என் தாபத்திரயங்களைப்பற்றிக் கேட்பது என் முன்னோர்கள் செய்த பாக்யமே! தங்களிடத்தில் அந்தரங்கத்தை வெளியிட நான் எதற்காக ஆலோசிக்க வேண்டும்?

தாங்கள் ஊகித்தது தப்பிதமல்ல. துக்க சாகரத்தின் நடுவில் விழுந்து கரை ஏற வழியின்றித் தவிக்கும் எனக்கு எவ்வாறு மனது சுகவழியில் போக இடம் கொடுக்கும். தாயோ இல்லை. தகப்பனோ சிறையில் கிடந்து துடிக்கின்றார். அவ்விருவர்கள் பெயரும் நான் அறியேன். தேவி! ராஜ தந்திரங்களில் தேர்ந்த தாங்கள் என் நிலைமையைக் கண்டு பிடிக்க எந்நேரம் செல்லும்? எனக்குச் சோதரர்கள் மூவர் இருக்கின்றார்களாம். வேறு பெயருடன் ஏதோ காரணத்தால் வெளியில் சஞ்சரிக்கின்றார்களாம். அவர்களில் யாராவது ஒருவர் என்னைக்காண நேர்ந்து முறை தெரியாமையால் என்னிடம் காதலுற்று நானும் சம்மதித்து விட்டால் ரஸாபாஸமும் மகாபாதகமும் ஆகுமே. அப்பேர்ப்பட்ட அநர்த்தத்தில் மாட்டிக் கொள்வதைவிடக் கல்யாணமில்லாமலே மற்றொரு ஜன்மத்திலாவது சுகமாயிருக்கவேண்டி ஜகதீசனைப் பஜித்துக்கொண்டு காலத்தைக்கழிப்பது மேலல்லவா? தேவி! என்ன சொல்கிறீர்கள்."

இராணியின் முகம் பனியால் மூடிய கமலம்போல் திடீரென்று ஒளியிழந்தது. கண்ணீராறாய்ப் பெருகவாரம்பித்தது. கண்ணை அடிக்கடி துடைத்துக்கொண்டே மோகனமாலையைக் கட்டியணைத்து "கண்மணி! அப்படியா? என்ன கஷ்டம்? உன் ஸ்திதி மிகவும் பரிதபிக்கத்தக்கதே.

நீ செய்த தீர்மானமும் சிலாகிக்கத் தக்கதே. உன் விருத்தாந்தம் நினைக்க நினைக்க துக்கத்தை விளைவிக்கின்றது. இந்தச்சந்தேகங்களையெல்லாம் தீர்த்து வைக்கக் கூடியவர்கள் ஒருவரும் தென்படவில்லையா?"

'குருமகா ராஜாவின் சகோதரியான அந்த உத்தமி இந்த இரகசிய முழுவதும் அறிவார்களாம். பெருந்தகத்திலுள்ளவர்கள் இதி

ல் சம்பந்தப்பட்டிருப்பதால் காலத்தில் தான் வெளிப்படுத்தவேண்டுமேயொழிய இப்பொழுது சொல்லவே கூடாதென்கிருர்கள். அதனல் நான் என் அவாவை யடக்கித்தாணய் வெளி வரட்டுமென்று சமயத்தை எதிர்பார்ப்பவளாய் இருக்கின்றேன்.

न हि कल्याणकृत् कश्चित् दुर्गतिं तातगच्छति ।
एति जीवन्तमानन्दो नरं वर्षशतादपि ॥

(சுபமான காரியங்களில் நிற்பவர் ஒருபொழுதும் குறைவடையார். உயிருடன் மாத்திரமிருப்பின் ஒரு நாளில்லாவிடில் ஒரு நாள் ஆனந்தம் வருவது நிச்சயம்) என்ற மூதுரைகள் வீணகுமா?'

"தடையின்றிச் சமீபகாலத்திலேயே சுகம் காண்பாய். நான் ஆசீர்வதிக்கின்றேன். நல்லது நீ சொல்வதிலிருந்து குருமகாராஜனும் உன்னைப்பற்றிய இரகசியங்களை யறிவார் என்று தோன்றுகிறது."

"எனக்கெவ்வளவு தெரியுமோ, அவ்வளவு தான் அவருக்கும் தெரியும் என்று நான் கேட்டபொழுது அந்த அம்மாள் சொன்னர்கள். அவருக்குத் தெரியவராதென்றே எனக்குத்தோன்றுகிறது."

"பெண்ணே மோகனமாலாய் கவலை யொழிப்பாய்.

व्यतिषजति पदार्थानान्तरः कोपि हेतुः न खलु बहिरुपाधीन् प्रीतयः संश्रयन्ते ।

(மறைந்த காரண மெதனலோ வஸ்துக்கள் ஒன்று கூட்டப்படுகின்றன. வெளிப்படையான சம்பந்தங்களை யன்புகள் அபேக்ஷிப்பதில்லை) என்றபடி உன்னிடத்தில் யாது காரணத்தாலோ எனக்கு விசேஷமான பற்றுண்டாய் விட்டது. இந்த ஜன்மத்திலில்லாவிடினும் வேறெந்த ஜன்மத்திலாவது நீ என் பெண்ணயிருந்திருப்பாய். உன்னிடம் ஆசையால் அடிக்கடி யிவ்விடம் வருவேன். இதை மாத்திரம் ஞாபகம் வைத்துக்கொள். எந்தக்காலத்திலாவது எதற்காகவாவது இராணியாக என்னைப்பாவித்தலாலோ, தாயாய் என்னை நினைத்தலாலோ அனுகூலமான ஒரு உதவி, சகாயம், இரக்ஷணை உனக்கு வேண்டுமாஞல் உடனே சிறிது மாலோசியாமல் இந்த மோகனமாலையும் கழுத்துமாய் என்னிடம் வந்து சேரு. நான் அவ்விதமான ஊழியம் உனக்குச்செய்யக்கடமைப்பட்டிருக்கிறேன், மறவாதே." என்று பிரேமையாய் இறுகக்கட்டி யுச்சிமோந்து பக்க

த்திலிருந்த நாற்காலியில் இவளை உட்கார வைத்துக்கொண்டாள். இராணி. மோகனமாலை "தேவி! இவ்வார்த்தையை என்றும் மறவேன். இதுவே என் உயிர் நிலை" என்று சொல்லி ஆனந்த பாஷ்பம் விட்டனள்.

இதற்குள் புத்தப்பிரியரும் வந்து சேர்ந்தார். கீழே விரித்த விலையுயர்ந்த ரத்ந கம்பளத்திலுட்கார்ந்து யாவரும் ருசிகரமான பக்ஷணங்களை யுட்கொண்டார்கள்.

பக்ஷணங்களருந்திய பின் தனக்கு ஏதோ தலைவலிபோல் இருப்பதால் உடனே திரும்பவேண்டியிருப்பதை மன்னிக்கவேண்டுமென்று குருமகா ராஜாவினிடம் சொல்லி உத்திரவு பெற்றுக்கொண்டு இராணி தனது பரிவாரங்களுடன் அரண்மனைக்குப் புறப்பட்டனள்.

இன்னும் வரும்.

## புத்தகவரவு.

நல்லாசிரியன்:—இப்பெயர்கொண்ட மாதாந்தப் பத்திரிகையின் ஜூன் மாதத்திய பகுதி வரப்பெற்றோம். பெயர் புனைந்ததற்கேற்ப எடுத்துக்கொண்ட விஷயங்களை நன்குகற்பிக்கின்றது. இவ்விதமான பத்திரிகை இதுவரையில்லாதிருந்த குறையை நீக்க முன்வந்த பத்திரிகையின் அதிபராகிய ஸ்ரீ. கா. நமச்சிவாயமுதலியாரவர்கள்மாட்டு நாம் மிக்க நன்றிபாராட்டுகின்றோம். கல்விச்சாலையில் உபாத்தியாயர்களாக உள்ளார் பலரும் இப்பத்திரிகையைப்பெரிதும் அபிமானித்து நம்பத்திராதிபர்க்கு இவ்விஷயத்தில் மேன்மேலும் ஊக்கமுண்டாகும்படி செய்வார்களாக. இப்பத்திரிகையின் அபிவிர்த்தியை நாம் பெரிதும் சிந்திக்கின்றோம்.

தமிழ்மாது:—இது ஓர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதனை நடத்துவோர் கோ. ஸ்வப்பனேச்வரி அம்பாள் ஆவார். பத்திரிகை முகப்பிற்கண்டபடி "ஒல்லும் வகையானறவினையோவாதே—செல்லும்வா யெல்லாஞ் செயல்" என்ற குறளின்படி அம்பாள் அவர்கள் தம்மாலியன்ற உதவியைச்செய்ய முன் வந்த விஷயத்திற்கு நாம் மிகவும் மகிழ்கின்றோம். ருஷிய ஜப்பானிய யுத்தம் என்றிப்படிப்பட்ட விஷயங்களைக்காட்டிலும் குடும்ப உபயோகமான விஷயங்களையும் நல்லொழுக்கப்பயிற்சியுண்டாகும்படியான விஷயங்களையும் எழுதிவருவது தமிழ் மாதர்க்கு அதிக நன்மையை விளைக்குமென்று கருதுகின்றோம்.

இராமாதீக்ஷிதர்:—இது ஒரு நூதனத் தமிழ்க்கதை. ஆக்கியோர் ஸ்ரீ. ஹரி ஹர ஐயர் என்பார். சென்னை. ஜீ. ஏ. நடேசன் கம்பெனியார் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. புத்தகம் முழுமையும்படித்துப் பின்னர் நம் அபிப்பிராயத்தை யெழுதுவோம்.

விசிஷ்டாத்வைதின்—(The Visishtadvaitin) இது ஸ்ரீ இராமாநுஜ சித்தாந்தத்தை நன்கு விளக்கும் ஓர் அரிய மாதாந்த ஆங்கிலப்பத்திரிகை. கீதாபாஷ்யம், ஆழ்வார்கள் சரிதம், பூர்வாசாரியர்களின் திவ்யஞானம் என்பன தொடக்கமான பல ஆங்கில நூல்களையியற்றியவரான ஸ்ரீ. உபய. வே. A.கோவிந்தாசாரியரால் இப்பத்திரிகை செவ்வனே நடத்தப்படுகிறது. முதன் முதல் வெளியான ஜூலை மாதத்திய பகுதியில் விசிஷ்டாத்வைதம், ஆழ்வார் ஆசாரியர் என்னுந் தலைப்பில் பலபல அறியவிஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. உயர்ந்த காகிதத்தில் மிக்க நேர்த்தியாக அச்சிட்டுள்ளது. வருஷ சந்தா ரூ 2-8-0. ஸ்ரீ இராமாநுஜசித்தாந்தத்தை ஆங்கிலபாஷா மூலமாக அறிய விரும்புவார்க்கு இப்பத்திரிகை இன்றியமையாததெனலாம்.

சாமிநாதவிஜயம்:—இந்நூல் திருச்சேறை ஸ்ரீமாந். ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணமாசாரியரால் தஞ்சைத் தமிழ்ச்சங்கத் தலைவரும், தமிழின் மிக்க அபிமானமுள்ளவரும், மிக்க நல்லொழுக்கமுடையவருமான பாப்பாநாடுஜமீன் ஸ்ரீமான் சாமிநாதவிஜயதேவர் அவர்கள் விஷயமாகப் பாடப்பட்டது. இது சற்றேறக்குறையப் பத்துப்பாட்டு, சிலப்பதிகாரமுதலிய சங்கச்செய்யுள் போன்றுள்ளது; இதில் சங்கச்செய்யுட்களிலுள்ள அருமையான சொற்றொடர்களும், பொருணயங்களும் கலந்து பலவிடங்களில் வருகின்றன. இது ஜமீன்தாரவர்களின் அளி, ஒப்புரவு புகழ், ஒழுக்கம் முதலிய நற்குணங்களை உள்ளவாறு புகழ்தலோடு தமிழின் பெருமையையும், தஞ்சை நகரத்தின் மேன்மையையும் அழகுபெற மொழிகின்றது; இப்படிப்பட்ட சொல்வன்மையுள்ள பண்டிதர்களையும் தமிழணங்கையும் ஆதரித்துவருகின்ற நம் ஜமீன்தாரவர்கள் நீடுவாழவேண்டுமென இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**தக்ஷிண இந்தியாவின் சரித்திர சாரசங்கிரகம்:**—இந்நூல் சேலம் பகடால நரசிம்மலுநாயடு அவர்களால் இயற்றப்பட்டது. இவ்வாசிரியர்பலதுறைகளிலுமிறங்கிப்பற்பல கிரந்தங்களைச் செய்திருக்கின்றாரென்று தெரிகின்றது. மேலும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவும் காணப்படுகின்றார். இச்சரித்திர விஷயங்கள் பதினெண்புராணங்களிலடங்காதனவாக விருத்தலின் ஆசிரியர் இந்நூற்குப்பத்தொன்பதாவது புராணமெனப்புதுவையாகப்பெயர் தந்திருக்கின்றார். கட்டுப்பாட்டுக்கடங்கிய வைதிகராய பலர்க்கு இதனை இங்ஙனம் பத்தொன்பதாவது புராணமென மற்றைப்பதினெண் புராணங்களோடு கூட்டியுரைக்க மனமொவ்வாதாயினும் யாம் இதனை அப்பதினெண் புராணங்களோடு சேர்த்துரைக்காமல் வேறொன்று பெயர் கிளந்ததற்குப் பெரிதும் மகிழ்கின்றோம். புராணம், பிரளயம், மன்னர்கள், பாஷைவரலாறுகள், சங்கங்கள், என்ற அரியபெரியவிஷயங்கள் பலவற்றையும்பற்றி யெழுதியிருக்கின்றார். சிலசில விஷயங்களை மாறுபட எழுதியிருக்கின்றாரென்று சொல்வதைக்காட்டிலும் தாமறிந்தவாறேயெழுதினாரென்று கொள்ளுதல் நேராம். "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றபடி இதிலும் யாம்பல மெய்ப்பொருள் காணக்கிடக்கின்றன. ஆக்கியோர் உருவப்படமொன்று நன்றாகப்பதிக்கப்பட்டுள்ளது. "நாயகன் கவிக்குங்குற்றம்நாட்டிய கழகமாந்தர்" வீற்றிருந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்து அங்கத்தினராகிய இவ்வாசிரியர் சொற்பிழைகள் பல இந்நூற்கண் இடந்தோறு மிளிர்க்கின்றனவற்றை அடுத்த பதிப்பிற்களைவதாக முகவுரையிற் கண்டிருக்கின்றார்.